भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, सनिवार, 17 मार्च, 2001/1921 सका

New Delhi, Saturday, 17th March 2001/1921 Saka

புது தில்லி, 2001 மார்ச்சு 17 சனிக்கிழமை 1921 சக

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டமியற்றுத் துறை)

The Translation in Tamil of The Narcotic Drugs and Psychotropic Substances Act, 1985 (61 of 1985), The General Clauses Act, 1897 (10 of 1897), The Central Boards of Revenue Act, 1963 (54 of 1963), and The Remittances of Foreign Exchange and Investment in Foreign Exchange Bonds (Immunities and Exemptions) Act, 1991 (41 of 1991) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் சட்டம், *1985 (61/1985)*, பொது வகையங்கள் விளக்கச் சட்டம், *1897 (10/1897)*, மைய வருவாய் வாரியங்கள் சட்டம், *1963 (54/1963)*, அயல்நாட்டுச் செலாவணிச் செலுத்தங்கள் மற்றும் அயல்நாட்டுச் செலாவணி பிணைமுறிகளில் முதலீடு செய்தல் (காப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள்) சட்டம், *1991 (41/1991)* ஆகியவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், *1973 (50/1973)* இன் பிரிவு 2 இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**[ Price : Rs. 75.00**

# மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் சட்டம், 1985

## (சட்ட எண் 61/1985)

[*1985*, செப்டம்பர் *16*]

மயக்க மருந்துப்பொருள்கள் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைத்துத் திருத்தம் செய்வதற்கும், மயக்க மருந்துப்பொருள்கள், மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குறுத்துவதற்காக கடுமையான வகையங்களைச் செய்வதற்கும், மயக்க மருந்துப்பொருள்கள், மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் ஆகியவற்றின் கள்ள வாணிகத்திலிருந்து பெறப்பட்ட அல்லது அதில் பயன்படுத்தப்பட்ட சொத்தினைப் பறிமுதல் செய்வதற்கு வகைசெய்வதற்கும், மயக்க மருந்துப்பொருள்கள், மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் ஆகியவற்றின் மீதான பன்னாட்டுப் பொது இணக்க ஒப்பந்தங்களின் வகையங்களைச் செயற்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்குமான ஒரு சட்டம்.

இது, இந்தியக் குடியரசின் முப்பத்தாறாம் ஆண்டில், நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் I

### முன்னுரை

*1.* *(1)* இந்தச் சட்டம், மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள், சட்டம், *1985* என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

*(2)* இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

*(3)* இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியன்று செல்லாற்றல் பெறும் மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காகவும், வெவ்வேறு மாநிலங்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்; மேலும் இந்தச் சட்டத்தின் தொடக்கம் பற்றிய வகையம் எதிலுமுள்ள சுட்டுகை எதுவும், மாநிலம் எதையும் பொறுத்து, அந்த மாநிலத்தில் அந்த வகையம் செல்லாற்றல் பெறுவதற்குரிய சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*2.* இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள்வரையறைகள்.

(i) "கெட்ட பழக்கத்திற்கு அடிமை" என்பது, மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் அருந்தும் பழக்கத்திற்கு அடிமையான ஓர் ஆள் என்று பொருள்படும்;

54/1963 (ii) "வாரியம்" என்பது, மைய வருவாய் வாரியங்கள் சட்டம், *1963*-இன்படி அமைக்கப்பட்ட மைய ஆயத்துறை மற்றும் சுங்கத்துறையின் மைய வாரியம் என்று பொருள்படும்;

(iii) "கன்னாபீஸ்" என்பது,—

*(அ)* சராஸ் (Charas) அதாவது, கன்னாபீஸ் செடியிலிருந்து பெறப்பட்ட, ஏதேனும் வடிவத்திலுள்ள, பக்குவப்படுத்தப்படாத அல்லது சுத்திகரிக்கப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட பிசின் என்று பொருள்படும்; மற்றும் செறிவான தயாரிப்பையும் ஹாசிஷ் எண்ணெய் அல்லது நீர்மஹாசிஸ் என்று வழங்கப்படும் பிசினையும் கூட உள்ளடக்கும்;

*(ஆ)* "கஞ்சா" அதாவது, எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அல்லது பெயர் குறித்துச் சுட்டப்பட்டாலும், கன்னாபீஸ் செடியின் (உச்சிப்பகுதியுடன் சேர்ந்திராத விதைகள் மற்றும்

இலைகள் நீங்கலாக) அதன் பூவுருவாகும் அல்லது கனியுருவாகும் உச்சிப் பகுதிகள் என்று பொருள்படும்;

(இ) தனிநிலையான பொருள் எதுவும், சேர்த்தோ சேர்க்காமலோ கன்னாபிஸ்-இன் மேற்சொன்ன வடிவங்களின் கலவை எதுவும் அல்லது அதிலிருந்து தயாரிக்கப்பட்ட பானம் எதுவும் என்று பொருள்படும்;

(iv) "கன்னாபிஸ் செடி" என்பது, கன்னாபிஸ்-இன் வகைகளுள் ஒரு செடி என்று பொருள்படும்;

(v) "கோக்கா வழிப் பொருள்" என்பது,—

(அ) பக்குவப்படுத்தப்படாத கோக்காயின், அதாவது கோக்காயினை உற்பத்தி செய்வதற்காக, நேரடியாகவோ மறைமுகமாகவோ பயன்படுத்தப்படும் கோகா இலையின் உறைச் சத்து எதுவும் என்று பொருள்படும்;

(ஆ) இக்கோனைன் மற்றும் எதிலிருந்து அதனைப் பெறக்கூடுமோ அந்த இக்கோனைன் தருவிப்புகள் அனைத்தும் என்று பொருள்படும்;

(இ) கோகாயின், அதாவது, பென்சாயில் இக்கோனைனின் மெதில் எஸ்டர் மற்றும் அதன் உப்புகள் என்று பொருள்படும்;

(ஈ) கோக்காயின் 0.01 விழுக்காட்டிற்கு மேல் அடங்கியுள்ள தயாரிப்புகள் அனைத்தும் என்று பொருள்படும்;

(vi) "கோக்கா இலை" என்பது,—

(அ) எந்த இலையிலிருந்து இக்கோனைன், கோக்கைன் மற்றும் பிற இக்கோனைன் அல்காலாயிட்கள் எவையும் அகற்றப்பட்டிருக்கின்றனவோ அந்த இலையைத் தவிர்த்து கோக்கா செடியின் இலை என்று பொருள்படும்;

(ஆ) தனிநிலையான பொருள் எதனுடனும் அல்லது அது இல்லாமல் அதன் கலவை எதுவும் என்று பொருள்படும்;

ஆனால் கோக்காயினில் 0.1 விழுக்காட்டிற்கு மேற்படாமல் அடங்கியுள்ள தயாரிப்பு எதனையும் உள்ளடக்காது.

(vii) "கோக்கா செடி" என்பது, எரித்ரோக்சைலினின் வகைகளில் ஏதேனுமொரு பிரிவைச் சார்ந்த செடி என்று பொருள்படும்;

(vii) (அ) "கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்" என்பது, மைய அரசாங்கம், மயக்க மருந்துப்பொருளை அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளை தயாரிப்பதில் அல்லது உற்பத்தி செய்வதில், அது இயன்ற அளவு பயன்படுத்துவது குறித்து கிடைக்கத்தக்க தகவலை அல்லது பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றின் வகையங்களைக் கவனத்திற்கொண்டு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள் என்று விளம்புகை செய்யும் பொருள் எதுவும் என்று பொருள்படும்;

(viii) "ஊர்தி" என்பது, எத்தகையதுமான விவரிப்பினை உடைய ஓர் ஊர்தி என்று பொருள்படும், மற்றும் வானூர்தி, வண்டி அல்லது கலம் எதனையும் உள்ளடக்கும்.

(viii) (அ) மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பாக "கள்ள வாணிகம்" என்பது, இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது

ஆணையின் அல்லது வழங்கப்பட்ட உரிமம், வரையுரை அல்லது அதிகாரமளிப்பு எதற்குமான வரைக்கட்டு எதன்படியும் அனுமதிக்கப்பட்டவை அல்லாத பிற,—

(i) கோக்கா செடி எதனையும் பயிரிடுதல் அல்லது கோக்கா செடியின் பகுதி எதனையும் சேகரித்தல்;

(ii) அபின் தரும் கசகசா அல்லது கன்னாபிஸ் செடி எதனையும் பயிரிடுதல்;

(iii) மயக்க மருந்துபொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், விற்றல், வாங்குதல், கொண்டு செல்லுதல், பண்டகசாலையில் சேமித்தல், மறைத்து வைத்தல், பயன்படுத்துதல் அல்லது நுகர்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், இந்தியாவுக்குள் இறக்குமதி செய்தல், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல், கலத்தினின்று கலத்திற்கு மாற்றுதலில் ஈடுபடுதல்;

(iv) உட்கூறுகள் (i) முதல் (iii) வரையுள்ளவற்றில் சுட்டப்பட்டவை அல்லாத பிற மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பான நடவடிக்கைகள் எவற்றிலும் தொடர்பு கொண்டிருத்தல்.

(v) உட்கூறுகள் (i) முதல் (iv) வரையுள்ளவற்றில் சுட்டப்பட்ட நடவடிக்கைகளில் எவற்றையும் நிறைவேற்றுவதற்காக வளாகங்கள் எவற்றையும் பயன்படுத்துதல் அல்லது வாடகைக்கு விடுதல்.

என்று பொருள்படும்; மற்றும்

(1) மேற்சொன்ன நடவடிக்கைகள் எவற்றிற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதியுதவியளித்தல்,

(2) மேற்சொன்ன நடவடிக்கைகள் எவற்றையும் தொடர்ந்து செய்வதற்கு அல்லது அவற்றைச் செய்ய ஆதரவளிப்பதற்குத் தூண்டுதல் அல்லது மறைமுகமாகச் சதி செய்தல்,

(3) மேற்சொன்ன நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபட்டுள்ள ஆட்களுக்குப் புகலிடமளித்தல்,

ஆகியவற்றை உள்ளடக்கும்.

(ix) “பன்னாட்டு ஒப்பந்தம்” என்பது,—

(அ) 1961 மார்ச்சில் நியூயார்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மயக்க மருந்துப்பொருள்கள் மீதான தனி ஒப்பந்தம், 1961,

(ஆ) உட்கூறு (அ) வில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தைத் திருத்துவதும், 1972 மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான உடன்படிக்கையின் மூல வரைவு,

(இ) 1971 பிப்ரவரியில் வியன்னாவில் நடந்த ஐக்கிய நாடுகள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் மீதான ஒப்பந்தம், 1971,

(ஈ) மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பான பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றைத் திருத்தம்

செய்கிறதும், இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு இந்தியாவில் ஏற்புறுதி செய்யப்படக்கூடியதும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுமான பிற பன்னாட்டு ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் மூல வரைவு அல்லது பிற முறையாவணம் எதுவும்,

என்று பொருள்படும்.

(x) மயக்க மருந்துகள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பாக, "உற்பத்தி செய்தல்" என்பது—

*(1)* பெறப்படும் மருந்துச் சரக்குகள் அல்லது பொருள்கள் தயாரிக்கப்படுவதல்லாத, பிற செய்முறைகள் அனைத்தும்,

*(2)* அத்தகைய மருந்துப்பொருள்கள் அல்லது பொருள்களைத் துப்புரவு செய்தல்,

*(3)* அத்தகைய மருந்துப்பொருள்களை அல்லது பொருள்களை உருமாற்றம் செய்தல், மற்றும்

*(4)* அத்தகைய மருந்துப்பொருள்கள் அல்லது பொருள்களுடன் அல்லது அவை அடங்கியதைத் (மருந்துச்சீட்டின்பேரில் மருந்தகத்தில் அல்லாமல் பிறவாறு) தயாரித்தல்

ஆகியவற்றை உள்ளடக்கும்.

(xi) "உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள்", என்பது,—

*(அ)* கோக்கா வழிப்பொருள்கள், மருந்தியல்புள்ள கன்னாபிஸ், அபினிவழிப்பொருள்கள் மற்றும் கசகசாச் செறிவு,

*(ஆ)* மைய அரசாங்கம், மயக்கப்பொருள்களின் அல்லது தயாரிப்பின் தன்மை அல்லது பன்னாட்டு ஒப்பந்தம ஒன்றின்படியான முடிவு, ஏதேனுமிருப்பின், அது குறித்து கிடைக்கத்தக்க தகவலைக் கவனத்திற்கொண்டு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள் என விளம்புகை செய்யும் பிற மயக்கப்பொருள் அல்லது தயாரிப்பு எதுவும் என்று பொருள்படும்; ஆனால், மைய அரசாங்கம் அதன் தன்மை அல்லது பன்னாட்டு ஒப்பந்தம் எதன்படியுமான முடிவு, ஏதேனுமிருப்பின், அது குறித்து கிடைக்கத்தக்க தகவலைக் கவனத்திற்கொண்டு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, உற்பத்தி செய்யப்பட்ட மருந்தன்று என்று விளம்புகை செய்யும் மயக்கப்பொருள் அல்லது தயாரிப்பு எதனையும் உள்ளடக்காது;

(xii) மருந்தியல்புள்ள கன்னாபிஸ், அதாவது, மருந்தியல்புள்ள நார் என்பது, கன்னாபிஸ்—இன் (சணல்வகைச் செடி) சாறு அல்லது கரைசல் என்று பொருள்படும்;

(xiii) "மயக்கப்பொருள்கள் ஆணையர்" என்பது, பிரிவு 5 இன்படி அமர்த்தப்பட்ட மயக்கப்பொருள்கள் ஆணையர் என்று பொருள்படும்;

(xiv) "மயக்க மருந்துப்பொருள்" என்பது, கோக்கா இலை, கன்னாபிஸ் (சணல்வகைச்செடி) அபினி, கசகசா என்று பொருள்படும்; மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள்கள் அனைத்தையும் உள்ளடக்கும்;

(xv) "அபினி" என்பது,—

(அ) அபின்தரும் கசகசாச் செடிவகையின் கெட்டியாக்கப்பட்ட சாறு, மற்றும்

(ஆ) அபின்தரும் கசகசாச் செடிவகையின் கெட்டியாக்கப்பட்ட சாற்றின் தனிநிலையான பொருட்கள் எவையும் உள்ள அல்லது இல்லாத கலவை எதுவும்

என்று பொருள்படும்; ஆனால் 0.2 விழுக்காட்டிற்கு மேற்படாத மாபைன் அடங்கியுள்ள தயாரிப்பு எதனையும் உள்ளடக்காது;

(xvi) "அபின்வழிப் பொருள்கள்" என்பது,—

(அ) மருந்தியல்புள்ள அபின், அதாவது, பொடி செய்யப்பட்ட வடிவத்திலாயினும் அல்லது சிறு துணுக்குகளாயினும் அல்லது பிற வகையிலாயினும் அல்லது தனிநிலையான பொருள்களோடு கலக்கப்பட்டாயினும், இந்திய மருந்துப்பொருள் தொகுதி அல்லது மைய அரசாங்கத்தால் இதற்கென அறிவிக்கை செய்யப்பட்ட பிற ஏதேனும் மருந்துப்பொருள் தொகுதியின் வேண்டுறுத்தங்களுக்கு இணங்க, மருத்துவப் பண்டுவத்திற்காக அதை ஏற்றுக்கொள்வதற்காக தேவைப்படும் செய்முறைகளுக்கு உட்பட்டிருக்கிற அபின்;

(ஆ) "தயாரிக்கப்பட்ட அபின்", அதாவது புகைப்பதற்குப் பொருத்தமாக உறைச்சத்தாக அபினை மாற்றியமைப்பதற்காக, வடிவமைக்கப்பட்ட தொடர்ச்சியான செயற்பாடுகள் எவற்றாலும் பெறப்பட்ட அபினின் விளைபொருள் மற்றும் அபின் புகைக்கப்பட்டதற்குப் பின்பு எஞ்சியுள்ள சக்கை அல்லது பிற மிச்சம்;

(இ) பெனாந்திரின் ஆல்க்கலாயிட்ஸ், அதாவது, மாபைன், கரேடைன், தினபன் மற்றும் அவற்றின் உப்புகள்;

(ஈ) டையாசிடில் மாபைன் (diacetyl mo—phine) அதாவது ஆல்கலாலிட், மேலும் டையமாபைன் என்று வழங்கப்படுவது அல்லது ஹெராயின் மற்றும் அதன் உப்புகள்;

(உ) 0.2 விழுக்காட்டிற்கு மேல் மாபைன் அடங்கியுள்ள அல்லது டையாசிடில் மாபைன் அடங்கியுள்ள தயாரிப்புகள் அனைத்தும்

என்று பொருள்படும்;

(xvii) "அபின்தரும் கசகசாக் செடிவகை" என்பது,—

(அ) கசகசாச்செடி (Palaver Somnifterum) இனங்களைச் சார்ந்த தாவரம், மற்றும்

(ஆ) அபின் அல்லது பெனான்த்ரின் ஆல்க்கலாயிடை எடுக்கக்கூடியதும், மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அபின் கசகசாச் செடிவகை என விளம்பக்கூடியதுமான கசகசாச் செடி இனங்களை எதனையும் சார்ந்த தாவரம்

என்று பொருள்படும்;

(xviii) "கசகசாத்தண்டு" என்பது, அறுவடைக்குப் பின்பு, முதன் முதலிலிருந்து வடிவில் அல்லது வெட்டப்பட்டு, நசுக்கப்பட்டு அல்லது தூளாக்கப்பட்டு மற்றும் அதிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டுள்ள சாறாகவோ இல்லாமலோ இருக்கும் அபின்தரு (கசகசாச்செடிவகையின் விதைகள் நீங்கலாக) பகுதிகள் அனைத்தும் என்று பொருள்படும்;

(xix) "கசகசாத்தண்டின் செறிவு" என்பது, கசகசாத் தண்டானது, அதனுடைய அல்கலாயிடுகளின் செறிவிற்காக ஒரு செய்முறைக்கு உட்படும்போது எழுகிற மூலப்பொருள் என்று பொருள்படும்;

(xx) "மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்" தொடர்பாக, "தயாரிப்பு" என்பது, அளக்கப்பட்ட படிவத்திலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய மருந்துப்பொருள்கள் அல்லது பொருள்களை எவையும் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய மருந்துப்பொருள்கள் அல்லது பொருள்கள் அடங்கியுள்ள எவ்வகைப்பட்ட சடப்பொருள் நிலையிலுமுள்ள கரைசல் அல்லது கலவை எவையும் என்று பொருள்படும்;

(xxi) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(xxii) "தயாரிப்பு" என்பது, அபின், கசகசாத்தண்டு, கோக்கா இலைகள் அல்லது கன்னாபிஸ் எந்தச் செடிகளிலிருந்து பெறப்பட்டனவோ அந்தச் செடிகளிலிருந்து அவற்றைப் பிரித்தெடுத்தல் என்று பொருள்படும்;

(xxiii) "மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள்" என்பது, இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மனநிலைக்கு, ஊறுசெய்யும் பொருள்களின் பட்டியலில் சேர்க்கப்பட்ட இயற்கையான அல்லது செயற்கையான பொருள் அல்லது இயற்கையான மூலப்பொருள் எதுவும் அல்லது அத்தகைய பொருளின் அல்லது மூலப்பொருளின் உப்பு அல்லது தயாரிப்பு எதுவும் என்று பொருள்படும்;

(xxiv) "நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல்" என்பது, இந்தியாவிலுள்ள ஒரு மாநிலத்திற்குள் அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரைக்குள் இந்தியாவிலுள்ள மற்றொரு மாநிலத்திலிருந்து அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரையிலிருந்து கொண்டுவருதல் என்று பொருள்படும்;

(xxv) "இந்தியாவிற்குள் இறக்குமதி செய்தல்" என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் அதே குடும்பத்தைச் சார்ந்த சொற்றொடர்களுடனும், இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஓர் இடத்திலிருந்து இந்தியாவிற்குள் கொண்டுவருவது என்று பொருள்படும்; மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் கொண்டு செல்லப்படுகிற கலம், வானூர்தி, வண்டி அல்லது பிற ஊர்தி எதிலிருந்தும் அகற்றப்படாமல், மற்றும் இந்தியாவிற்கு வெளியே கொண்டு செல்லக் கருதப்படுகிற அதனை இந்தியாவிலுள்ள துறைமுகம், வானூர்தி நிலையம் அல்லது இடம் எதற்கும் கொண்டுவருவதை உள்ளடக்கும்;

**விளக்கம்.**—இந்தக் கூறின் மற்றும், கூறு (xxvi) இன் நோக்கங்களுக்காக, "இந்தியா" என்பது, இந்திய ஆட்சி மண்டல நீர்ப்பரப்புகளை உள்ளடக்கும்.

(xxvi) "இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல்" என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் அதே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும் இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஓரிடத்திற்கு இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்வது என்று பொருள்படும்;

(xxvii) "நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல்" என்பது, இந்தியாவிலுள்ள ஒரு மாநிலத்திலிருந்து அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரையிலிருந்து இந்தியாவிலுள்ள மற்றொரு மாநிலத்திற்கு அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கு எடுத்துச்செல்வது என்று பொருள்படும்;

(xxviii) "கொண்டுசெல்லுதல்" என்பது, ஒரே மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குள் ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு எடுத்துச்செல்லுதல் என்று பொருள்படும்;

(xxviii) (ஆ) "மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள்" தொடர்பாகப் "பயன்" என்பது, சொந்த நுகர்ச்சிக்காக அல்லாமல், எந்த வகையிலும் பயன்படுத்துவது என்று பொருள்படும்;

(xxix) இதில் பயன்படுத்தப்பட்டிருந்தும் பொருள்வரையற்ற செய்யப்படாத ஆனால், குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் பொருள்வரையறை செய்யப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும், அந்தத் தொகுப்புச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே குறித்தளிக்கப்பட்ட பொருள்களின் உடையன ஆகும்.

**விளக்கம்.**—கூறுகள் (v), (vi), (xv), (xvi) ஆகியவற்றின் நோக்கங்களுக்காக, நீர்மத் தயாரிப்புகளாகும் நேர்வில், விழுக்காடானது, பண்டத்தின் ஒரு விழுக்காடு அடங்கியுள்ள தயாரிப்பு என்பது, அத்தயாரிப்பின் ஒவ்வொரு நூறு மில்லி லிட்டரிலும் திண்மப் பொருளாயிருப்பின், ஒரு கிராம் பொருள் அல்லது நீர்மப் பொருளாயிருப்பின், ஒரு மில்லி லிட்டர் பொருள் அடங்கியுள்ள ஒரு தயாரிப்பு என்று பொருள்படும் என்ற அடிப்படையிலும், அதைவிட அதிகமான அல்லது குறைந்த விழுக்காட்டிற்கு அவ்வாறேயான விகிதத்திலும் கணக்கிடப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:**—மைய அரசாங்கம், நீர்மத் தயாரிப்புகளில் விழுக்காடுகளைக் கணக்கிடும் முறைமைகளிலுள்ள மேம்பாடுகளைக் கவனத்திற்கு கொண்டு, அத்தகைய கணக்கீட்டிற்குப் பொருத்தமானதென அது கொள்ளும் பிற அடிப்படை எதனையும் விதிகளின் வாயிலாக வகுத்துரைக்கலாம்.

3. மைய அரசாங்கம்,— மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் பட்டியலில் சேர்ப்பதற்கு அல்லது அதிலிருந்து விட்டுவிடுவதற்கு அதிகாரம்.

(அ) (இயற்கையான அல்லது செயற்கையான) பொருள் அல்லது இயற்கையான மூலப்பொருள் எதனின் அல்லது அத்தகைய பொருளின் அல்லது மூலப்பொருளின் உப்பு அல்லது தயாரிப்பு எதனின் தன்மை மற்றும் விளைவுகள் மற்றும் அதைத் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது தவறாகப் பயன்படுத்துவதற்கான நோக்கம் ஆகியவற்றைப் பொறுத்து அதற்குக் கிடைக்கத்தக்கதாக ஆகியுள்ள தகவல் மற்றும் சான்று;

(ஆ) அத்தகைய பொருள் அல்லது இயற்கையான மூலப்பொருள் அல்லது அத்தகைய பொருள் அல்லது மூலப்பொருளின் உப்பு அல்லது தயாரிப்புப் பொறுத்த பன்னாட்டு ஒப்பந்தம் எதற்கும், அல்லது அதில் செய்யப்பட்டுள்ள மாற்றமைவுகள் அல்லது வகையங்கள் (எவையேனுமிருப்பின்)

ஆகியவற்றின் அடிப்படையில், அத்தகைய பொருளை அல்லது இயற்கையான மூலப்பொருளை அல்லது அத்தகைய பொருளின் அல்லது மூலப்பொருள்களின் உப்பை அல்லது தயாரிப்பினை இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் பட்டியலில் சேர்ப்பது அல்லது, நேர்வுக்கேற்ப, அதிலிருந்து விட்டுவிடுவது தேவையானது அல்லது உகந்தது என்று தெளிவுறக்காணுமாயின், அது அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அவ்வாறு செய்யலாம்.

## அத்தியாயம் II

## அதிகாரஅமைப்புகள் மற்றும் அலுவலர்கள்

மயக்க மருந்துப் பொருள்கள் முதலானவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதையும் கள்ள வாணிகம் செய்வதையும் தடுத்து, எதிர்த்துப் போராடுவதற்காக மைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தல்

4. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, மைய அரசாங்கம், மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களைப் பயன்படுத்துவதையும், கள்ளத்தனமாக வாணிகம் செய்வதையும் தடுத்து, எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையானது அல்லது உகந்தது என அது கொள்கிற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தல் வேண்டும்.

(2) குறிப்பாகவும், உட்பிரிவு (1) இன் வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அந்த உட்பிரிவின்படி மைய அரசாங்கம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்தையுமோ அவற்றுள் எவற்றையுமோ பொறுத்த நடவடிக்கைகளை உள்ளடக்கும்,—

(அ) (i) இந்தச் சட்டத்தின்படி, அல்லது

(ii) இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக அப்போதைக்குச் செல்லாற்றிலுள்ள பிற சட்டம் எதன்படியும்,

பல்வேறு அலுவலர்களாலும், மாநில அரசுகளாலும் மற்றும் பிற அதிகார அமைப்புகளாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்;

(ஆ) பன்னாட்டு ஒப்பந்தங்களின்படியான கடமைப்பாடுகள்;

(இ) மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களைக் கள்ளவாணிகம் செய்வதைத் தடுத்து ஒடுக்குவதற்காக ஒருங்கிணைத்து உலக அளவில் நடவடிக்கை எடுப்பதை ஊக்குவிக்கும் நோக்குடன், அயல்நாடுகளிலும் தொடர்புடைய பன்னாட்டு அமைப்புகளிலும் உள்ள தொடர்புடைய அதிகாரஅமைப்புகளுக்கு உதவுதல்;

(ஈ) கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களை அடையாளங் காட்டுதல், அவர்களுக்கு மருத்துவம் செய்தல், கல்வியளித்தல், அவர்களைத் தொடர்ந்து கவனித்தல், அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் மற்றும் சமுதாயத்துடன் மீண்டும் இணைத்தல்;

(உ) இந்தச் சட்டத்தின் வகையங்களைத் திறம்படச் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கும் மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களைத் தவறாகப் பயன்படுத்துவதையும், அதைக் கள்ளவாணிகம் செய்வதையும் தடுத்து, எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையானது அல்லது உகந்தது என மைய அரசாங்கம் கொள்கிற பிற பொருட்பாடுகள்.

(3) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணை வாயிலாக, இந்தச் சட்டத்தின்படியான மைய அரசாங்கத்தின் அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், செயற்பணிகளைப் புரிவதற்காகவும் உட்பிரிவு (2) இல் சுட்டப்பட்ட பொருட்பாடுகளில் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டவை பொறுத்து நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் பெயர் அல்லது பெயர்களில், ஓர் அதிகார அமைப்பை அல்லது அதிகாரஅமைப்புகளின்படி நிலையமைப்பை அமைக்கலாம்; மற்றும் மைய அரசாங்கத்தின் மேற்பார்வைக்கும், கட்டுப்பாட்டிற்கும் அத்தகைய ஆணையின் வகையங்களுக்கும் உட்பட்டு, அத்தகைய அதிகார அமைப்பு அல்லது அதிகாரஅமைப்புகள் அந்த அதிகாரங்களைச் செலுத்தவும், அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவும், இந்தச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாற் போன்று, அத்தகைய அதிகாரஅமைப்பு அல்லது அதிகாரஅமைப்புகள் அந்த ஆணையில் அவ்வாறு குறிப்பிடப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தலாம் மற்றும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

5. பிரிவு 4, உட்பிரிவு (3) இன் வகையங்களுக்குக் குந்தகமில்லாமல், மைய அரசாங்கம், மயக்கப் பொருள்கள் ஆணையர் ஒருவரை அமர்த்துதல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அது பொருத்தமெனக் கருதும் பதவிப் பெயர்களில் பிற அலுவலர்களையும் கூட அமர்த்தலாம். மைய அரசாங்கத்தின் அலுவலர்கள்.

(2) மயக்கப் பொருள்கள் ஆணையர், தாமாகவே அல்லது தமக்குக் கீழ்நிலையிலுள்ள அலுவலர்கள் மூலமாக, அபின் தரும் கசகசாச் செடி வகையைப் பயிரிடுவதையும், அபின் தயாரிப்பதையும் கண்காணிப்பது தொடர்பாக, அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்துதலும், பதவிப்பணிகள் அனைத்தையும் புரிதலும் வேண்டும். மேலும் அதோடு மைய அரசாங்கத்தால் தமக்கு ஒப்படைவு செய்யப்படும் பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் பதவிப் பணிகளைச் புரிதலும் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன்படி அமர்த்தப்பட்ட அலுவலர்கள், மைய அரசாங்கத்தின் பொதுவான கட்டுப்பாட்டிற்கும் மேலாட்சிக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும். அல்லது அந்த அரசாங்கம், வாரியத்தின் அல்லது பிற அதிகாரஅமைப்பு ஒன்றின் அல்லது அலுவலரின் பொதுவான கட்டுபாட்டிற்கும் மேலாட்சிக்கும்கூட உட்பட்டிருக்கவேண்டுமென்று பணிக்குமாயின், அதற்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

6. மைய அரசாங்கம், **அதிகாரமுறை அரசிதழில்** அறிவிக்கை வாயிலாக, “மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் கலந்தாய்வுக்குழு” என்று வழங்கப்படும் (இந்தப் பிரிவில் இதற்குப் பின்பு குழு என்று சுட்டப்படும்) ஓர் அறிவுரைக் குழுவினை இந்தச் சட்டத்தின் ஆளுகை தொடர்பாக, அவ்வப்போது அந்த அரசாங்கத்தால் அதற்குச் சுட்டப்படும் பொருட்பாடுகளின்மீது, மைய அரசாங்கத்திற்கு அறிவுரை அளிப்பதற்காக, அமர்த்தலாம். மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் கலந்தாய்வுக் குழு.

(2) அந்தக் குழுவானது, தலைவர் ஒருவரையும் மைய அரசாங்கத்தால் அமர்த்தப்படும் இருபதுக்கு மேற்படாத பிற உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அந்தக் குழுவானது, மைய அரசாங்கத்தால், கூடுமாறு வேண்டுறுத்தப்படும்போது, அவ்வாறு கூடுதல் வேண்டும், மற்றும் தன் சொந்த நடைமுறையை ஒழுங்குறுத்துவதற்கு அதிகாரம் உடையது ஆகும்.

(4) அந்தக் குழுவானது, தன்னுடைய செயற்பணிகளில் எவற்றையும் திறம்பட நிறைவேற்றுவதற்கு ஒன்று அல்லது மேற்பட்ட உட்குழுக்களை அமைப்பது தேவையெனக் கருதுமாயின், அவ்வாறு செய்யலாம், மற்றும் அந்தக் குழுவின் உறுப்பினராக இராத (அலுவலர் சார்பற்ற ஒருவர் உள்ளடங்கலாக) ஆள் எவரையும், பொதுவாக அல்லது குறிப்பிட்ட பொருட்பாடு எதனையும் ஓர்வு செய்வதற்காக அத்தகைய உட்குழு எதற்கும் அமர்த்தலாம்.

(5) அந்தக்குழுவின் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவிக்காலம், அந்தப் பதவிகளிலுள்ள தற்செயல் காலியிடங்களை நிரப்பும்முறை; அவர்களுக்குக் கொடுக்கத்தக்க படித்தொகைகள், எவையேனுமிருப்பின், அவை மற்றும் அந்தக் குழுவின் உறுப்பினராக இராத ஓர் ஆளை, எந்த வரைக்கட்டுகள், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, அந்தக்குழு, தன் உட்குழுக்களில் ஒன்றின் உறுப்பினராக அமர்த்தலாமோ, அந்த வரைக்கட்டுகள், கட்டுப்பாடுகள் ஆகியவை மைய அரசாங்கத்தால் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்படுமாறு இருத்தல் வேண்டும்.

7. மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, தான் பொருத்தமெனக் கருதும் அலுவலர்களை, அத்தகைய பதவிப்பெயர்களுடன் அமர்த்தலாம். மாநில அரசாங்கத்தின் அலுவலர்கள்.

(2) உட்பிரிவு (1) இன்படி அமர்த்தப்பட்ட அலுவல்ர்கள், மாநில அரசாங்கத்தின் பொதுவான கட்டுப்பாட்டிற்கும் மேலாட்சிக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும், அல்லது அந்த அரசாங்கத்தால் அவ்வாறு பணிக்கப்படுமாயின், பிற அதிகார அமைப்பு அல்லது அலுவலரின் கட்டுப்பாட்டிற்கும், மேலாட்சிக்கும் கூட உட்பட்டிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் II (அ)

## மருந்து தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய நிதியம்

மருந்து தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் கட்டுப்படுத்து வதற்கான தேசிய நிதியம்.

7 (அ). (1) மைய அரசாங்கம், **அதிகாரமுறை அரசிதழில்** அறிவிக்கை வாயிலாக, மருந்து தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய நிதியம் என்று வழங்கப்படும் (இந்த அத்தியாயத்தில் இதன் பின்பு நிதியம் என்று சுட்டப்படும்) நிதியத்தை அமைக்கலாம், மற்றும் அதில்—

(அ) நாடாளுமன்றம், இதற்கெனச் சட்டத்தால் உரிய ஒதுக்கீடு செய்த பின்பு, மைய அரசாங்கம் அளிக்கும் தொகை,

(ஆ) அத்தியாயம் V(அ) -ன்படி, தண்டஇழப்பான சொத்தின் விற்று முதல்கள்,

(இ) ஓர் ஆளால் அல்லது நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட மானியங்கள்,

(ஈ) மேற்சொன்ன வகையங்களின்படி, நிதியத்தில் வரவுவைக்கப்பட்ட தொகைகளை முதலீடு செய்வதால் கிடைத்த வருமானம்.

ஆகியவை வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவு 71 இன் உட்பிரிவு (1) இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களால் கள்ள வாணிபம் செய்வதை அல்லது தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதை எதிர்த்துப் போராடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான செலவினத்தைச் செய்வதற்காக, மைய அரசாங்கத்தால் நிதியம் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) மைய அரசாங்கம், நிதியத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக அந்த அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கப் பொருத்தமெனத் தான் கருதும் ஓர் ஆளுகைக் குழுமத்தை அமைக்கலாம்.

(4) ஆளுகைக் குழுமமானது, (மைய அரசாங்கக் கூடுதல் செயலாளரின் படிநிலைக்குக் குறையாதவரான) ஒரு தலைவரையும், மைய அரசாங்கம் அமர்த்தும் ஆறுக்கு மேற்படாத பிற உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆளுகைக் குழுமம், தன்னுடைய சொந்த நடைமுறையை ஒழுங்குறுத்துவதற்கான அதிகாரத்தை உடையது ஆகும்.

நிதியத்திலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆண்டு அறிக்கை.

7 (ஆ). மைய அரசாங்கம், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்பு, கூடியவிரைவில், அந்த நிதியாண்டின்போது பிரிவு 7(அ)வின்படி நிதியுதவியளிக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கணக்கைக் கொடுக்கும் ஓர் அறிக்கை கணக்குகளின் விவர உரையுடன் சேர்த்து, **அதிகாரமுறை அரசிதழில்** வெளியிடப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

## அத்தியாயம் III

## தடைசெய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்

குறித்த சில செயற்பாடுகளைத் தடை செய்தல்.

8. ஆள் எவரும், மருத்துவ அல்லது அறிவியல் நோக்கங்களுக்காகவும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளின் வகையங்களால் வகைசெய்யப்பட்ட முறையிலும், அளவுக்கும் மற்றும் அத்தகைய வகையம் எதுவும், உரிமம், அனுமதி அல்லது அதிகாரமளிப்பு என்னும் வகையில் கோருகிற எதனையும் சுமத்தும் நேர்வில், மேலும் அத்தகைய உரிமம், அனுமதி அல்லது அதிகாரமளிப்பின் வரையுரைகள், வரைக்கட்டுகள் அவற்றிற்கு இணங்கவும் தவிர,—

(அ) கோக்காச்செடி எதனையும் பயிரிடுதலோ கோக்காச் செடியின் பகுதி எதனையும் சேகரித்தலோ ஆகாது;

(ஆ) அபின் தரும் கசகசாச்செடி வகையை அல்லது கன்னாபிஸ் செடி எதனையும் பயிரிடுதல் ஆகாது; அல்லது

(இ) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும்பொருள் எதனையும் தயாரித்தலோ, உற்பத்தி செய்தலோ, வைத்திருத்தலோ, விற்றலோ, வாங்குதலோ, கொண்டுசெல்லுதலோ, பண்டகசாலையில் அடைத்து வைத்தலோ, பயன்படுத்துதலோ, நுகர்தலோ, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தலோ, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தலோ, இந்தியாவுக்குள் இறக்குமதி செய்தலோ, இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தலோ, கலத்திலிருந்து கலத்திற்கு மாற்றுதலோ ஆகாது:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, மருத்துவ மற்றும் அறிவியல் நோக்கம் அல்லாத பிற நோக்கம் எதற்காகவும், கஞ்சா தயாரிப்பதற்காக கன்னாபிஸ் பயிரிடுதல் அல்லது கஞ்சாவினைத் தயாரித்தல், வைத்திருத்தல், பய்ன்படுத்துதல், நுகர்தல், வாங்குதல், விற்றல், கொண்டுசெல்லுதல், பண்டகசாலையில் அடைத்து வைத்தல், நாடுகளுக்கிடையே இறக்குமதிசெய்தல் மற்றும் நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தலைத் தடை செய்வதானது மைய அரசாங்கம், **அதிகாரமுறை அரசிதழில்** அறிவிக்கை வாயிலாக, இதற்கெனக் குறித்துரைக்கும் தேதியிலிருந்து மட்டுமே செல்திறம் பெறும்:

**இன்னும் வரம்புரையாக:** இந்தப் பிரிவிலுள்ள எதுவும், அழகுபடுத்தும் நோக்கங்களுக்காக கசகசாத் தண்டை ஏற்றுமதி செய்வதற்குப் பொருந்துதல் ஆகாது.

9. (1) பிரிவு 8 இன் வகையங்களுக்கு உட்பட்டு, மைய அரசாங்கம், விதிகளினால்— அனுமதிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் மைய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

(அ) (i) கோக்காச் செடியினைப் பயிரிடுதல் அல்லது அதன் பகுதி எதனையும் சேகரித்தல் (அவ்வாறு பயிரிடுதல் அல்லது சேகரித்தல் மைய அரசாங்கத்தால் மட்டுமே செய்யப்படும்) அல்லது கோக்கா இலைகளைத் தயாரித்தல், வைத்திருத்தல், விற்றல், வாங்குதல், கொண்டுசெல்லுதல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், பயன்படுத்துதல் அல்லது நுகர்தலை,

(ii) அபின்தரும் கசகசாச் செடிவகையைப் பயிரிடுதலை (அவ்வாறு பயிரிடுதல் மைய அரசாங்கத்தால் மட்டுமே செய்யப்படும்),

(iii) அபின் தயாரித்தல் மற்றும் உற்பத்திசெய்தல் மற்றும் கசகசாத்தண்டைத் தயாரித்தலை,

(iv) இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்காக அல்லது மாநில அரசாங்கத்திற்கு அல்லது மருந்து உற்பத்தி செய்பவர்களுக்கு விற்பனை செய்வதற்காக மைய அரசாங்கத்தின் தொழிற்சாலைகளிலிருந்து அபினையும் அபின் வழிப்பொருட்களையும் விற்பனை செய்தலை,

(v) செய்பவர் உடைமையில் வைத்திருப்பதற்குச் சட்டப்படி உரிமைகொண்டிருக்கிற மூலப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள்கள் எதுவும் அடங்கியுள்ள மருந்தியல்புள்ள அபின் அல்லது தயாரிப்பு எதனையும் உற்பத்தி செய்தலை உள்ளடக்காத (தயாரிக்கப்பட்ட அபின் அல்லாத பிற) உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள்களை உற்பத்தி செய்தலை,

(vi) மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களை உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், விற்றல், வாங்குதல், நுகர்தல் அல்லது பயன்படுத்துதலை,

(vii) மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்தல் மற்றும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல் மற்றும் கலத்திலிருந்து கலத்திற்கு மாற்றுதலை,

அனுமதித்து ஒழுங்குபடுத்தலாம்;

(ஆ) கூறு (அ) -வில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எவற்றையும் மைய அரசாங்கம் திறம்படக் கட்டுப்பாடு செய்வதற்குத் தேவைப்படும் பிற பொருட்பாடு எதனையும் வகுத்துரைக்கலாம்.

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள்—

(அ) அபின்தரும் கசகசாச் செடிவகையைப் பயிரிடுவதற்காக எந்த வரம்புகளுக்குள் உரிமங்கள் கொடுக்கப்படலாமோ அந்த வரம்புகளை அவ்வப்போது நிருணயிப்பதற்கு மைய அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கலாம்;

(ஆ) அபின்தரும் கசகசாச் செடிவகை பயிரிடப்பட்ட நிலத்தின் விளைச்சலான அபின் அனைத்தும், மைய அரசாங்கத்தால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குப் பயிரிடுநர்களால் ஒப்படைக்கப்பட வேண்டுமென வேண்டுறுத்தலாம்;

(இ) அபின்தரும் கசகசாச் செடிவகையைப் பயிரிடுதலுக்கான மற்றும் அபினைத் தயாரிப்பதற்கான மற்றும் உற்பத்தி செய்வதற்கான உரிமங்களின் படிவங்கள் மற்றும் வரைக்கட்டுகள், அதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் எந்த அதிகார அமைப்புகளால் அத்தகைய உரிமங்கள் வழங்கப்படலாமோ, நிறுத்திவைக்கப்படலாமோ, மறுக்கப்படலாமோ அல்லது அறவு செய்யப்படலாமோ அந்த அதிகார அமைப்புகள், உரிமங்களை நிறுத்திவைக்கிற, மறுக்கிற, அறவு செய்கிற ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகள் எந்த அதிகார அமைப்புகளின் முன்பு செய்வதற்கு உற்றதாகுமோ அந்த அதிகாரஅமைப்புகள் ஆகியவற்றை வகுத்துரைக்கலாம்;

(ஈ) பயிரிடுநரால் ஒப்படைக்கப்படும் சமயத்தில் பயிரிடுநரின் முன்னிலையிலேயே, மைய அரசாங்கத்தால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் அதன் தரம் மற்றும் திண்மைக்கு இணங்க, அபின் எடைபோடப்பட்டு, பரிசோதனை செய்யப்பட்டு வகைப்படுத்தப்பட வேண்டும் என்று வகுத்துரைக்கலாம்;

(உ) ஒப்படைக்கப்படும் அபினுக்காக பயிரிடுநர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய விலையை, அவ்வப்போது நிருணயிப்பதற்கு மைய அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கலாம்;

(ஊ) தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்ட அபினின் தரம் மற்றும் திண்மைக்கு இணங்க, நிறுத்தல், பரிசோதனை செய்தல் மற்றும் வைக்கப்படுதலுக்காக, அத்தகைய பரிசோதனையின் முடிவுக்கு இணங்க, ஏற்புடைய விலையிலிருந்து செய்யப்படவேண்டிய கழிவுகள் அல்லது அதனுடன் சேர்க்கப்படவேண்டிய கூடுதல்கள் (எவையேனுமிருப்பின்) மற்றும் எடைபோடல், பரிசோதனை

செய்தல், வகைப்படுத்தல், கழிவுகள் அல்லது கூடுதல்கள் தொடர்பாக முடிவுகள் செய்யவேண்டிய அதிகாரஅமைப்புகள் மற்றும் அத்தகைய முடிவுகளுக்கு எதிராக மேல்முறையீடுகள் எந்த அதிகாரஅமைப்புகளுக்கு முன்புசெய்வதற்கு உற்றதாகுமோ அந்த அதிகாரஅமைப்புகள் ஆகியவற்றிற்கு வகைசெய்யலாம்;

(எ) ஒரு பயிரிடுநரால் ஒப்படைவு செய்யப்பட்ட அபின், மைய அரசாங்கத் தொழிற்சாலையில் செய்யப்பட்ட பரிசோதனையின் விளைவாகக் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறது என்று கண்டறியப்படுமாயின், இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் பறிமுதல் செய்யப்படலாமென்று வேண்டுறுத்தலாம்;

(ஏ) உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமங்களின் படிவங்கள் மற்றும் வரைக்கட்டுகள், எந்த அதிகார அமைப்புகளால் அத்தகைய உரிமங்கள் வழங்கப்படலாமோ அந்த அதிகாரஅமைப்புகள் மற்றும் அதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ஆகியவற்றை வகுத்துரைக்கலாம்;

(ஐ) மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களை உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், விற்றல், வாங்குதல், நுகர்தல் அல்லது பயன்படுத்துதலுக்கான உரிமங்கள் அல்லது அனுமதிகளின் படிவங்கள் மற்றும் வரைக்கட்டுகள் எந்த அதிகாரஅமைப்புகளால் அத்தகைய உரிமங்கள் அல்லது அனுமதிகள் வழங்கப்படலாகுமோ அந்த அதிகாரஅமைப்புகள் மற்றும் அதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ஆகியவற்றை வகுத்துரைக்கலாம்;

(ஒ) மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் வகை எதுவும் எந்தத் துறைமுகங்கள் மற்றும் பிற இடங்களில் இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படலாமோ அல்லது இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படலாமோ அல்லது கலம் விட்டுக் கலம் ஏற்றப்படலாமோ அந்தத் துறைமுகங்கள் மற்றும் பிற இடங்கள் அத்தகைய இறக்குமதி, ஏற்றுமதி அல்லது கலம் விட்டுக் கலம் ஏற்றுதலுக்குரிய சான்றிதழ்கள், அதிகாரமளிப்புகள் அல்லது, நேர்வுக்கேற்ப அனுமதிகளின் படிவங்கள் மற்றும் வரைக்கட்டுகள், எந்த அதிகாரஅமைப்புகளால் அத்தகைய சான்றிதழ்கள், அதிகாரமளிப்புகள் அல்லது அனுமதிகள் வழங்கப்படலாமோ அந்த அதிகாரஅமைப்புகள் மற்றும் அதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ஆகியவற்றை வகுத்துரைக்கலாம்.

கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமுள்ள அதிகாரம்.

9 அ. (1) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் தயாரிப்பதில் அல்லது உற்பத்தி செய்வதில் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள் எதனையும் பயன்படுத்துவதைக் கவனத்தில் கொண்டு, மைய அரசாங்கம், பொது நலனுக்காக அதனைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், வாங்குதல், பகிர்ந்தளித்தல், வணிகம் அல்லது வாணிபம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவது அல்லது தடைசெய்வது, தேவையானது அல்லது உகந்தது என்று கருதுமாயின், அது ஆணை வாயிலாக வகைசெய்யலாம்.

(2) உட்பிரிவு (1) ஆல் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அதன்படி இடப்பட்ட ஓர் ஆணை, உரிமங்களால், அனுமதிகளால் அல்லது பிறவாறு கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருளைத் தயாரிப்பதை, உற்பத்தி செய்வதை, உடைமையில் வைத்திருப்பதை, கொண்டு செல்வதை, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்வதை, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்வதை, விற்பதை, வாங்குவதை, நுகர்வதை, பயன்படுத்துவதை, சேமிப்பதை, பகிர்ந்தளிப்பதை, அப்புறப்படுத்துவதை அல்லது கையகப்படுத்துவதை ஒழுங்குறுத்துவதற்கு வகை செய்யலாம்.

அனுமதிப் பதற்கும், கட்டுப்படுத்து வதற்கும், ஒழுங்குபடுத்து வதற்கும், மாநில அரசாங்கத்திற் குள்ள அதிகாரம்.

*10.* *(1)* பிரிவு 8இன் வகையங்களுக்கு உட்பட்டு, மாநில அரசாங்கம், விதிகள் வாயிலாக—

*(அ)* (i) கசகசாத்தண்டை உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், பண்டகசாலையில் வைத்திருத்தல், விற்றல், வாங்குதல், நுகர்தல் மற்றும் பயன்படுத்துதல்;

(ii) அபினை உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், விற்றல், வாங்குதல், நுகர்தல் மற்றும் பயன்படுத்துதல்;

(iii) கன்னாபீஸ் செடி எதனையும் பயிரிடுதல் (சராஸ் நீங்கலாக), கன்னாபீஸைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், விற்றல், வாங்குதல், நுகர்தல் அல்லது பயன்படுத்துதல்;

(iv) மருந்தியல்புள்ள அபினை அல்லது எந்த மூலப்பொருளை உடைமையில் வைத்திருப்பதற்கு செய்பவர் சட்டப்படி உரிமை கொண்டிருக்கிறாரோ அந்த மூலப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள் எதுவும் அடங்கியுள்ள தயாரிப்பு எதனையும் உற்பத்தி செய்தல்;

(v) தயாரிக்கப்பட்ட அபின் மற்றும் கோக்கா இலை மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள் எதுவும் அடங்கியுள்ள தயாரிப்பு எதுவும் அல்லாத பிற உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள்களை உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், வாங்குதல், விற்றல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், பயன்படுத்துதல் அல்லது நுகர்தல்;

(vi) மருத்துவ அறிவுரையின் பேரில், தம்முடைய சொந்த நுகர்வுக்காக மாநில அரசாங்கத்தில் பதிவு செய்துள்ள, கெட்ட பழக்கத்திற்கு அடிமையான ஒருவரால் சட்டப்படி உடைமையில் வைத்திருக்கப்படும் அபினியிலிருந்து தயாரிக்கப்பட்ட அபினை உற்பத்தி செய்தல் மற்றும் உடைமையில் வைத்திருத்தல்;

ஆகியவற்றை அனுமதிக்கலாம் மற்றும் ஒழுங்குபடுத்தலாம்:

**வரம்புரையாக:** உட்கூறுகள் (iv) மற்றும் (v)-இன்படி செய்யப்பட்ட விதிகளில் வெளிப்படையாக வகைசெய்யப்பட்டவாறல்லாமல் பிரிவு 8-இல் உள்ள எதுவும், அரசாங்கத்தின் சொத்தாக அதன் உடைமையிலுள்ள உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள்களை நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல், கொண்டு செல்லுதல், உடைமையில் வைத்திருத்தல், வாங்குதல், விற்றல், பயன்படுத்துதல் அல்லது நுகர்தலுக்குப் பொருந்துதல் ஆகாது:

**இன்னும் வரம்புரையாக:** முன்சென்ற வரம்புரையில் சுட்டப்பட்ட மருந்துப் பொருள்கள், மாநில அரசாங்கத்தால் செய்யப்பட்ட விதிகளின்படி, மேற்சொன்ன உட்கூறுகளின்படி அவற்றை உடைமையில் வைத்திருக்க உரிமை கொண்டிராத ஆள் எவருக்கும் விற்கப்படுதலோ பிறவாறு ஒப்படைக்கப்படுதலோ ஆகாது.

*(ஆ)* கூறு *(அ)*-வில் குறித்துரைக்கப்பட்ட பொருட்பாடுகளில் எவற்றின் மீதும் மாநில அரசாங்கம், கட்டுப்பாட்டைத் திறம்படச் செய்வதற்குத் தேவைப்படும் பிற பொருட்பாடு எதனையும் வகுத்துரைக்கலாம்.

*(2)* குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள்—

(அ) சட்டப்படியாக, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதும், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்யவும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யவும் கருதப்பட்டிருக்கிறதுமான கசகசாத் தண்டு அனைத்தையும், எந்த இடத்தில் சேகரித்துவைப்பது உரிமையாளர்களின் கடமையாகுமோ அந்த இடத்தை ஒரு பண்டகசாலையாக விளம்புகை செய்வதற்கும், பண்டகசாலையில் வைக்கப்பட்ட அத்தகைய கசகசாத்தண்டில் சேமக்காப்பையும் விற்பனைக்காகவோ நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்வதற்காகவோ, இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்காகவோ அத்தகைய கசகசாத் தண்டினை அகற்றுவதையும் ஒழுங்குறுத்துவதற்கும் அவ்வாறு பண்டகசாலையில் வைப்பதற்கான கட்டணங்களை விதிப்பதற்கும் கட்டணத்தைச் செலுத்தத் தவறுகையில், பண்டகசாலையில் வைக்கப்பட்ட கசகசாத்தண்டு எந்த முறையிலும் எந்தக் கால அளவுக்குப் பின்னரும் அப்புறப்படுத்தப்படவேண்டுமோ அந்த முறையையும் காலஅளவையும் வகுத்துரைப்பதற்கும் மாநில அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கலாம்;

(ஆ) கன்னாபிஸ் செடி எதனையும் பயிரிடுவதற்காக, எந்த வரம்புகளுக்குள் உரிமங்கள் கொடுக்கப்படலாமோ அந்த வரம்புகள், மாநில அரசாங்க ஆணைகளாலோ அதன் வழியாலோ அவ்வப்போதும் நிருணயிக்கப்படுதல் வேண்டும் என்று வகைசெய்யலாம்;

(இ) மாநில அரசாங்கத்தின் வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பால் உரிமை அளிக்கப்பட்ட பயிரிடுநர்கள் மட்டுமே, கன்னாபிஸ் செடி எதனையும் பயிரிடுவதில் ஈடுபட அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும் என்று வகைசெய்யலாம்;

(ஈ) கன்னாபிஸ், கன்னாபிஸ் செடி பயிரிடப்பட்ட நிலத்தின் விளைச்சல் அனைத்தும் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மாநில அரசாங்க அலுவலர்களுக்கு பயிரிடுநர்களால் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்று வேண்டுறுத்தலாம்;

(உ) ஒப்படைக்கப்பட்ட கன்னாபிஸ்ஸீக்காக பயிரிடுநர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய விலையை, அவ்வப்போது நிருணயிப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கலாம்;

(ஊ) உட்பிரிவு (I) இன் கூறு (அ) இன் உட்கூறுகள் (i) முதல் (vi) வரையுள்ளவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக உரிமங்கள் அல்லது அனுமதிகளின் படிவங்கள் மற்றும் வரைக்கட்டுகளையும் அத்தகைய உரிமங்கள் அல்லது அனுமதிகள் எந்த அதிகாரஅமைப்பினால் வழங்கப்படலாமோ அந்த அதிகார அமைப்புகளையும் அதற்காக விதிக்கப்படும் கட்டணங்களையும் வகுத்துரைக்கலாம்.

11. சட்டம் அல்லது ஒப்பந்தம் எதிலும் அடங்கியுள்ளதற்கு மாறாக எது எவ்வாறிருப்பினும், மயக்க மருந்துப்பொருள், மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள், கோக்காச்செடி, அபின் தரும் கசகசாச்செடி அல்லது கன்னாபிஸ் செடி எதுவும், நீதிமன்றம் அல்லது அதிகாரஅமைப்பு ஒன்றின் ஆணை அல்லது தீர்ப்பாணை எதன்படியுமோ பிறவாறோ, பணம் எதனையும் வசூலிப்பதற்காக ஆள் எவராலும் கைப்பற்றப்படுவதற்கு அல்லது பற்றுகை செய்யப்படுவதற்கு உள்ளாதல் ஆகாது.

மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மன நிலைக்கு ஊறு செய்யும் பொருள்கள் முதலானவை கைப்பற்றுகைக்கு அல்லது பற்றுகைக்கு உள்ளாதல் ஆகாது.

மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மன நிலைக்கு ஊறு செய்யும் பொருள்களின் வெளிப்படையான வணிக நடவடிக்கைகள் மீது கட்டுப்பாடுகள்.

**12.** ஆள் எவரும், மைய அரசாங்கத்தின் முந்திய அதிகாரமளிப்புடனும், இதற்கென அந்த அரசாங்கத்தால் சுமத்தப்படக்கூடிய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் தவிர, மயக்க மருந்துப்பொருளை அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளை இந்தியாவுக்கு வெளியே இருந்து பெறுகிறதும், இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஆள் எவருக்கும் வழங்குகிறதுமான வாணிகம் எதிலும் ஈடுபடுதலோ, அதனைக் கட்டுப்படுத்துதலோ ஆகாது.

நறுஞ்சுவையூட்டும் காரதிகளைத் தயாரிப்பதில் கோக்கோ செடியையும் கோக்கோ இலைகளையும் பயன்படுத்துவது தொடர்பான சிறப்பு வகையங்கள்

**13.** பிரிவு 8 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசாங்கம் ஆல்க்கலாயிட் எதனையும் கொண்டிராத நறுஞ்சுவையூட்டும் காரதி எதனையும் தயாரிப்பதில் பயன்படுத்துவதற்காகவும் அவ்வாறு பயன்படுத்துவதற்குத் தேவையான அளவுக்கும் கோக்கோ செடியைப் பயிரிடுதல் அல்லது அதன் பகுதி எதனையும் சேகரித்தல், கோக்கோ இலைகளை உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், விற்றல், வாங்குதல், கொண்டு செல்லுதல், நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்தல், நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்தல் அல்லது இந்தியாவிற்குள் இறக்குமதி செய்தலை வரைக்கட்டுகளுடனோ இல்லாமலோ மற்றும் அரசாங்கத்தின் சார்பில் அனுமதிக்கலாம்.

கன்னாபீஸ் தொடர்பான சிறப்பு வகையம்.

**14.** பிரிவு 8 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அரசாங்கம் பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாகவும், அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும், நார் அல்லது விதையினைப் பெறும் தொழில் நோக்கங்களுக்காக மட்டும் அல்லது தோட்டக்கலை நோக்கங்களுக்காக, கன்னாபீஸ் எதனையும் பயிரிடுதலை அனுமதிக்கலாம்.

## அத்தியாயம் IV

## குற்றச்செயல்கள் மற்றும் தண்டனைகள்

கசகசாத் தண்டு தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

**15.** இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அளிக்கப்பட்ட ஓர் உரிமத்தின் வரைக்கட்டு எதனையும் மீறி கசகசாத்தண்டினை உண்டாக்குகிற, உடைமையில் வைத்திருக்கிற, கொண்டுசெல்கிற, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற, விற்கிற, வாங்குகிற, பயன்படுத்துகிற அல்லது பண்டகசாலையில் வைக்கத் தவறுகிற, அல்லது பண்டகசாலையில் வைக்கப்பட்ட கசகசாத்தண்டினை அகற்றுகிற அல்லது அதைப் பொறுத்து செயல் எதனையும் செய்கிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால், இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம் தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து, இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

கோக்கோ செடி மற்றும் கோக்கோ இலைகள் தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

**16.** இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அதன்படி அளிக்கப்பட்ட உரிமத்தின் வரைக்கட்டு எதனையும், மீறி, கோக்கோ செடியினைப் பயிரிடுகிற அல்லது கோக்கோ செடியின் பகுதி எதனையும் சேகரிக்கிற அல்லது கோக்கோ இலைகளை உற்பத்திசெய்கிற, உடைமையில் வைத்திருக்கிற, விற்கிற, வாங்குகிற, கொண்டுசெல்கிற, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற, அல்லது பயன்படுத்துகிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். மேலும், அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால், இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து, இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

17. இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அளிக்கப்பட்ட உரிமத்தின் வரைக்கட்டு எதனையும் மீறி தயாரிக்கப்பட்ட அபினை உற்பத்தி செய்கிற, உடைமையில் வைத்திருக்கிற, விற்கிற, வாங்குகிற, கொண்டுசெல்கிற, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற, அல்லது பயன்படுத்துகிற எவரொருவரும், பத்தாண்டுகளுக்குக் குறையாத ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். மேலும், அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்: தயாரிக்கப்பட்ட அபின் தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

18. இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அதன்படி அளிக்கப்பட்ட உரிமத்தின் வரைக்கட்டு எதனையும் மீறி அபின் தரும் கசகசாச் செடி வகையைப் பயிரிடுகிற அல்லது அபினை உண்டாக்குகிற, உற்பத்தி செய்கிற உடைமையில் வைத்திருக்கிற, விற்கிற, வாங்குகிற, கொண்டு செல்கிற நாடுகளுக்கிடையே, இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற, எவரொருவரும் பத்தாண்டுகளுக்குக் குறையாத ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார். மேலும், அதோடு, இலட்சம் ரூபாய்க்குக் குறையாத ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்: அபின் தரும் கசகசாச் செடி வகை மற்றும் அபின் தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

19. மைய அரசாங்கத்தின் பொருட்டு, அபின் தரும் கசகசாச் செடிவகையைப் பயிரிடுவதற்கு உரிமம் அளிக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட அபினை அல்லது அதன் பகுதி எதனையும் மோசடியாகக் கையாடல் செய்கிற அல்லது பிறவாறு சட்டமுரணாக அப்புறப்படுத்துகிற பயிரிடுநர் எவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மேலும், அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்: பயிரிடுநரால் அபின் மோசடியாகக் கையாளப் பட்டதற்கான தண்டனை.

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

20. இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அளிக்கப்பட்ட உரிமத்தின் வரைக்கட்டு எதனையும் மீறி,— கன்னாபீஸ் செடி மற்றும் கன்னாபீஸ் தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

(அ) கன்னாபீஸ் செடி எதனையும் பயிரிடுகிற, அல்லது

(ஆ) கன்னாபீஸைத் தயாரிக்கிற, உற்பத்தி செய்கிற, உடைமையில் வைத்திருக்கிற, விற்கிற, வாங்குகிற, கொண்டுசெல்கிற, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற அல்லது பயன்படுத்துகிற எவரொருவரும்—

(i) அத்தகைய மீறுகை, கஞ்சா அல்லது கன்னாபீஸ் செடியைப் பயிரிடுதல் தொடர்புடையதாக இருக்குமிடத்து, ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மேலும், அதோடு ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கு உள்ளாக்கப்படுவார்.

(ii) அத்தகைய மீறுகை கஞ்சா அல்லாத பிற கன்னாபீஸுடன் தொடர்புடையதாக இருக்குமிடத்து, பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; மேலும், அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருள்கள் மற்றும் தயாரிப்புகள் தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

21. இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அளிக்கப்பட்ட உரிமத்தின் வரைக்கட்டு எதனையும் மீறி, உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள் எதனையுமோ உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருள் எதனையும் கொண்டிருக்கிற தயாரிப்பு எதனையுமோ உற்பத்தி செய்கிற, உடைமையில் வைத்திருக்கிற, விற்கிற, வாங்குகிற, கொண்டுசெல்கிற, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற, அல்லது பயன்படுத்துகிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால், இரண்டு லட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக :** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பான மீறுகைக்குத் தண்டனை.

22. இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அளிக்கப்பட்ட உரிமத்தின் வரைக்கட்டு எதனையும் மீறி, மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் உற்பத்தி செய்கிற, உடைமையில் வைத்திருக்கிற, விற்கிற, வாங்குகிற, கொண்டுசெல்கிற, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்கிற, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்கிற, அல்லது பயன்படுத்துகிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால், இரண்டு லட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவு செய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களைச் சட்டமுரணாக இந்தியாவுக்குள் இறக்குமதி செய்தல, இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல் அல்லது கலத்திலிருந்து கலத்துக்கு மாற்றுதலுக்குத் தண்டனை.

23. இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அளிக்கப்பட்ட உரிமம் அல்லது அனுமதியின் வரைக்கட்டு அல்லது வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது அதிகாரமளிப்பு எதனையும் மீறி மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும், இந்தியாவுக்குள் இறக்குமதி செய்கிற அல்லது இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்கிற அல்லது கலத்திலிருந்து கலத்துக்கு மாற்றுகிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கு உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

**24.** மைய அரசாங்கத்தின் முன் அதிகாரமளிப்பின்றி, அல்லது பிரிவு 12 இன் படி அளிக்கப்பட்ட அதிகாரமளிப்பின் வரைக்கட்டுகள் எவையேனும் இருப்பின் அவற்றிற்கு இணங்கியவாறல்லாமல், பிறவாறு எந்த வாணிகத்தின் மூலம் மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் இந்தியாவிற்கு வெளியே பெறப்படுகிறதோ மற்றும் இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஆள் எவருக்கும் வழங்கப்படுகிறதோ அந்த வாணிகம் எதிலும் ஈடுபட்டிருக்கிற அல்லது அதைக் கட்டுப்படுத்துகிற எவரொருவரும், பத்தாண்டுகளுக்குக் குறையாத ஆனால் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். மேலும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத ஆனால், இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கு உள்ளாக்கப்படுவார்:

பிரிவு 12-ஐ மீறி மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மன நிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் வணிக நடவடிக்கைகளில் வெளிப்படையாக ஈடுபடுவதற்கு தண்டனை.

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

**25.** வீடு, அறை, அடைப்பிடம், வெளியிடம், இடம், விலங்கு அல்லது வண்டி ஒன்றின் உரிமையாளராக அல்லது உடைமையாளராக இருந்து அல்லது அதன் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்து இந்தச் சட்டத்தின் வகையம் ஒன்றின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலை பிற ஆள் எவரும் செய்வதற்காக அதைப் பயன்படுத்துவதற்குத் தெரிந்துகொண்டே அனுமதிக்கிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். மேலும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

குற்றச்செயல் செய்வதற்காக, வளாகங்கள் முதலானவற்றைப் பயன்படுத்த அனுமதிப்பதற்குத் தண்டனை.

**வரம்புரையாக:** நீதிமன்றம் தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

**25.** (அ). ஆள் எவரும், பிரிவு 9 (அ)வின்படி இடப்பட்ட ஓர் ஆணையை மீறுவாராயின், அவர் பத்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். மேலும் அதோடு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

பிரிவு 9 (அ) வின்படி இடப்பட்ட ஆணைகளை மீறுவதற்குத் தண்டனை.

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

**26.** இந்தச் சட்டம், அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியும் அளிக்கப்பட்ட உரிமம், அனுமதி அல்லது அதிகாரமளிப்பு எதனையும் உடையவர் அல்லது அவரால் பணியமர்த்தப்பட்டவரும் அவர் சார்பாகச் செயலுறுகிறவருமான ஆள் எவரும்—

உரிமதாரர் அல்லது அவருடைய பணியாளர்கள் செய்யும் குறித்த சில செயல்களுக்கான தண்டனை.

(அ) கணக்குகளை வைத்துவருவதையோ இந்தச் சட்டத்தின் வகையங்கள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி எதற்கும் இணங்க விவர அறிக்கை எதனையும் பணிந்தனுப்புவதையோ தகுமான காரணம் எதுவுமின்றி விட்டுவிடுவாராயின்,

(ஆ) இதற்கென மைய அரசாங்கத்தால் அல்லது மாநில அரசாங்கத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் கோரியதன் பேரில், அத்தகைய உரிமம், அனுமதி அல்லது அதிகாரமளிப்பை தகுமான காரணம் எதுவுமின்றி முன்னிலைப்படுத்தத் தவறுவாராயின்,

(இ) பொய்யானதாயிருக்கிற அல்லது சரியற்றதென்று அவர் அறிந்திருக்கிற அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணமுடையதாயிருக்கிற கணக்கு எதனையும் வைத்து வருவாராயின், அல்லது விவரவுரை எதனையும் செய்வாராயின்,

(ஈ) உரிமம், அனுமதி அல்லது அதிகாரமளிப்பின் வரைக்கட்டுகள் எவற்றையும் மீறிய எந்தச் செயலுக்காக இந்தச் சட்டத்தில்

எங்காகிலும் தண்டனை வகுத்துரைக்கப்படவில்லையோ அந்தச் செயல் எதனையும் வேண்டுமென்றேயும் அறிந்துகொண்டேயும் செய்வாராயின்

அவர் மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

மயக்க மருந்துப் பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளைச் சொந்த நுகர்வுக்காக அல்லது அத்தகைய மருந்துப்பொருள் அல்லது பொருளை நுகர்வதற்காகச் சிறிய அளவில் சட்டமுரணாக உடைமையில் வைத்திருப்பதற்கான தண்டனை.

**27.** இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது வழங்கப்பட்ட அனுமதி எதனையும் மீறி விற்பனை செய்வதற்கோ பகிர்ந்தளிப்பதற்கோ அல்லாமல், தம்முடைய சொந்த நுகர்வுக்கென்று கருதப்பட்டு, வைத்திருக்கப்பட்டது என்று மெய்ப்பிக்கப்பட்ட மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் சிறிது அளவில் உடைமையில் வைத்திருக்கிற அல்லது மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் நுகர்கிற எவரொருவரும், இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,—

(அ) உடைமையில் வைத்திருக்கப்பட்ட அல்லது நுகரப்பட்ட மயக்க மருந்துப் பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் கோக்கைன், மாபைன், டயாசெடில்—மாபைன்' அல்லது மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக ஊறுசெய்யும் பொருள் எதுவுமாக இருக்கிறவிடத்து ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; மற்றும்.

(ஆ) உடைமையில் வைத்திருக்கப்பட்ட அல்லது நுகரப்பட்ட மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள், கூறு (அ)வில் அல்லது அதன்படி குறித்துரைக்கப்பட்டதல்லாத மற்றவையாக இருக்குமிடத்து, ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**விளக்கம்:**—(1) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, "சிறிய அளவு" என்பது, மைய அரசாங்கத்தால் அதிகாரமுறை அரசிதழில் குறித்துரைக்கப்படும் அளவு என்று பொருள்படும்.

(2) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருளைச் சிறிய அளவு ஓர் ஆள் உடைமையில் வைத்திருப்பதாக காட்டப்படுமிடத்து, அது அத்தகைய ஆளின் சொந்த நுகர்வுக்காக கருதப்பட்டது என்றும் விற்பனைக்காகவோ, பகிர்ந்தளிப்பதற்காகவோ அல்ல என்றும் மெய்ப்பிக்கும் சுமை அத்தகைய ஆளைச் சார்ந்ததாகும்.

கள்ள வாணிக நடவடிக்கைக்கு நிதியுதவியளிப்பதற்கும் குற்றவாளிகளுக்குப் புகலிடம் அளிப்பதற்குமான தண்டனை.

**27 அ.** பிரிவு 2இன் கூறு (viii) இன் உட்கூறுகள் (i) முதல் (v) வரையுள்ளவற்றில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளில் எதற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதியுதவியளிக்கிற அல்லது மேற்சொன்ன நடவடிக்கைகளில் எதிலும் ஈடுபட்டுள்ள ஆள் எவருக்கும் புகலிடம் அளிக்கிற எவரொருவரும், பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால் இருபதாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மேலும் அதோடு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால், இரண்டு இலட்சம் ரூபாய்வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்தை விதிக்கலாம்.

**28.** இந்த அத்தியாயத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும் செய்வதற்கு அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்யப்படும்படிச் செய்வதற்கு முயலுகிற மற்றும் அத்தகைய முயற்சியில் குற்றச்செயலைச் செய்யும் வகையில் செயல் எதனையும் செய்கிற எவரொருவரும், அந்தக் குற்றச்செயலுக்காக வகை செய்யப்பட்ட தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். குற்றச் செயல்களைச் செய்ய முயலுவதற்குத் தண்டனை.

**29.** (1) இந்த அத்தியாயத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலைச் செய்வதற்கு உடந்தையாயிருக்கிற அல்லது ஒரு குற்றமுறு சதிக்குத் தரப்பினராயிருக்கிற எவரொருவரும், அத்தகைய குற்றச்செயல் அத்தகைய உடந்தையின் விளைவாக அல்லது அத்தகைய குற்றமுறு சதியை ஒட்டி செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், மற்றும் இந்தியத் தண்டனை தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 116இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அந்தக் குற்றச்செயலுக்காக வகைசெய்யப்பட்ட தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். குற்ற உடந்தைக்கும் குற்றமுறு சதிக்குமான தண்டனை.

(2) இந்தியாவிற்கு வெளியிலும் அப்பாலும் எந்தச் செயலைச் செய்வது,—

(அ) அது இந்தியாவிற்குள் செய்யப்படுமாயின் ஒரு குற்றச் செயலாக அமையுமோ, அல்லது.

(ஆ) அது இந்தியாவிற்குள் செய்யப்படுமாயின், இந்த அத்தியாயத்தின் படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலாக அதை உண்டாக்குவதற்கு வேண்டுறுத்தப்படும் சட்டமுறையான வரைக்கட்டுகளைப் போன்று அதே மாதிரியான அல்லது அவற்றிற்கு ஒப்புமையான அத்தகையதொரு குற்றச்செயலாக அதை உண்டாக்குவதற்கு வேண்டுறுத்தப்படும் சட்டமுறையான வரைக்கட்டுகள் அனைத்தையும் கொண்டு, அத்தகைய இடத்தில் சட்டங்களின்படி மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பான ஒரு குற்றச்செயலாக அமையுமோ

அந்தச் செயல் எதனையும் செய்வதற்கு உடந்தையாக இருக்கிற அல்லது குற்றமுறு சதியின் தரப்பினராயிருக்கிற ஓர் ஆள், இந்தியாவில் இந்தப் பிரிவின் பொருளின்படி ஒரு குற்றச் செயலைச் செய்வதற்கு உடந்தையாக இருப்பதாக அல்லது குற்றமுறு சதியின் தரப்பினராக இருப்பதாகச் சொல்லப்படுவார். ஆயத்தம் செய்தல்.

**30.** ஆள் எவரும், பிரிவு 15 முதல் பிரிவு 25 வரையுள்ள (இரண்டும் உள்ளடங்கலான) வற்றின் வகையங்களில் எவற்றின்படியும் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலாக அமைகிற எதையும் செய்வதற்கோ அல்லது செய்யாது விடுவதற்கோ ஆயத்தம் செய்வாராயின், மற்றும் அந்த நேர்வின் சூழ்நிலைகளிலிருந்து, குற்றச் செயலைச் செய்வதற்கான தம்முடைய உட்கருத்தை நிறைவேற்றுவதற்கு அவர் தீர்மானித்திருந்து, அவரது விருப்பத்திற்குத் தொடர்பற்ற சூழ்நிலைகளினால் தடை செய்யப்பட்டிருக்கிறார் என்று தகவாக ஊகித்தறியப்படுமாயின், அவர் அத்தகைய குற்றச்செயலைச் செய்துவிட்ட நேர்வில், அவர் தண்டிக்கப்படத்தக்கவராயிருந்திருக்கக்கூடிய சிறைத்தண்டனையின் கீழ்வரைக் கால அளவு (ஏதேனுமிருப்பின்) அதன் பாதிக்கும் குறையாத, ஆனால், அத்தண்டனையின் மிக அதிகமான காலஅளவில் பாதிவரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மேலும், அதோடு மேற்சொன்ன நேர்வில் அவர் எந்த வகையான பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவரோ அந்த பணத்தண்டத்தில் கீழ்வரை அளவின் பாதிக்குக் குறையாமல், ஆனால், பொதுவாக (அதாவது தனிவகைக் காரணங்கள் இல்லாதிருக்கையில்) அவர் எந்த பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவரே அதில் மேல்வரை அளவில் பாதிவரை நீடிக்கக்கூடியதுமான பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து, அதிகமான பணத்தண்டத்தை விதிக்கலாம்.

முந்திய குற்றத் தீர்ப்புக்குப் பின்பு குறித்த சில குற்றச் செயல்களுக்கு அதிகரிக்கப்பட்ட தண்டனை.

**31.** (1) பிரிவு 15 முதல் பிரிவு 25 வரையுள்ள (இரண்டும் உள்ளடங்கலான) வற்றின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல்களில் எதனையும் செய்ததற்காக அல்லது செய்ய முயன்றதற்காக அல்லது செய்வதற்கு உடந்தையாயிருந்ததற்காக அல்லது குற்றமுறு சதி செய்ததற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிற ஆள் எவரும், அதற்குப் பின்னர்—

(அ) பிரிவு 15 முதல் பிரிவு 19, பிரிவு 20இன் கூறு (ii), பிரிவு 21 முதல் பிரிவு 25 (இரண்டும் உள்ளடங்கலாக) வரையுள்ளவற்றின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலைச் செய்வதற்காக அல்லது செய்ய முயன்றதற்காக அல்லது, செய்வதற்கு உடந்தையாயிருந்ததற்காக அல்லது குற்றமுறு சதிசெய்ததற்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பாராயின், அவர் இரண்டாம் மற்றும் பிந்திய குற்றச்செயல் ஒவ்வொன்றிற்காகவும் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால், முப்பது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மேலும் அதோடு ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய்க்குக் குறையாத ஆனால், மூன்று இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கும் உள்ளாதலும் வேண்டும்;

(ஆ) பிரிவு 20இன் கூறு (i) இன்படி தண்டிக்கப்பட்டத்தக்க ஒரு குற்றச்செயலைச் செய்ததற்காக அல்லது செய்ய முயன்றதற்காக அல்லது செய்வதற்கு உடந்தையாயிருந்ததற்காக அல்லது குற்றமுறு சதி செய்ததற்காக தீர்ப்புத்தண்டனை அளிக்கப்பட்டிருப்பாராயின், அவர், இரண்டாம் மற்றும் பிந்திய குற்றச்செயல் ஒவ்வொன்றிற்காகவும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மேலும் அதோடு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டத்திற்கு உள்ளாதலும் வேண்டும்:

**வரம்புரையாக:** நீதிமன்றம், தீர்ப்புரையில் காரணங்களைப் பதிவுசெய்து,—

(i) கூறு (அ)வின்படி வருகிறதொரு நேர்வில், மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டம் விதிக்கலாம், மற்றும்

(ii) கூறு (ஆ) வின்படி வருகிறதொரு நேர்வில், ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டம் விதிக்கலாம்.

(2) ஆள் எவரும் பிரிவு 15 முதல் பிரிவு 25 (இரண்டும் உள்ளடங்கலானவை) பிரிவு 28, பிரிவு 29 ஆகியவற்றின் வகையங்களுக்கு நேரிணையான சட்டம் எதன்படியும் இந்தியாவிற்கு வெளியே குற்றவியல் அதிகாரவரம்பினை உடைய தகுதிறமுள்ள நீதிமன்றம் ஒன்றால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய குற்றத்தீர்ப்பினைப் பொறுத்து, உட்பிரிவு (1)இன் நோக்கங்களுக்காக, அவர் இந்தியாவிலுள்ள ஒரு நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாற்போன்று, நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

முந்தைய குற்றத் தீர்ப்புக்குப் பின்பு குறித்த சில குற்றச் செயல்களுக்கு மரண தண்டனை.

**31அ**. பிரிவு 31 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பிரிவு 15 முதல் பிரிவு 25 (இரண்டும் உள்ளடங்கலாக) வரையுள்ளவற்றின் அல்லது பிரிவு 27அ வின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல்களில் எதனையும், செய்ததற்காக அல்லது செய்ய முயன்றதற்காக அல்லது செய்வத்ற்கு உடந்தையாயிருந்ததற்காக அல்லது குற்றமுறு சதி செய்ததற்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுகிற ஆள் எவரும், பின்பு—

(அ) கீழேயுள்ள அட்டவணையின் பத்தி (1)இன்படி குறித்துரைக்கப்பட்டதும் சொல்லப்பட்ட அட்டவணையின் பத்தி (2)இல் குறித்துரைக்கப்பட்ட மருந்துப்பொருள் அல்லது பொருள் ஒவ்வொன்றிற்கும் எதிராகச் சுட்டிக்காட்டப்பட்ட அளவுக்குச் சமமானதாயிருக்கிற அல்லது அதைவிட அதிகமானதாயிருக்கிற அளவை உள்ளடக்கியிருக்கிறதுமான மயக்க மருந்துப்பொருள்களை

அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், இந்தியாவிற்குள் இறக்குமதி செய்தல், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல் அல்லது கலம்விட்டு கலத்திற்கு மாற்றுதலில் ஈடுபட்டிருத்தல்.

**அட்டவணை**

| | மயக்க மருந்துப்பொருள்கள் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் பற்றிய விவரங்கள் (1) | அளவு (2) |
|---|---|---|
| (i) | அபின் | 10 கிலோ |
| (ii) | மாபைன் | 1 கிலோ |
| (iii) | ஹெராயின் | 1 கிலோ |
| (iv) | கோடேயின் | 1 கிலோ |
| (v) | தெபைன் | 1 கிலோ |
| (vi) | கோக்கைன் | 500 கிராம் |
| (vii) | ஹாஷிஷ் | 20 கிலோ |
| (viii) | மேற்சொன்ன மருந்துப்பொருள்களில் ஏதொன்றின் தனிநிலைப்பொருள் எதனுடனும் அல்லது இல்லாமல் கலவை எதுவும். | 1500 கிராம் |
| (ix) | LSD, LSD(—)25 (–)-N, N—-டையத் தெலிசெர்கேமைடு (டி—லைசர்களிக் அமிலம் டையத்தைலமைடு) | 500 கிராம் |
| (x) | THC (டெட்ராஹைட்ரோ கன்னாபினோல்ஸ்: பின்வரும் ஐசாமர்ஸ், 6அ (10அ) 6அ(7), 7,8,9,10,9(11) மற்றும் அவற்றின் ஸ்டிரியோகெமிக்கல் வேரியன்ட்ஸ்) | 500 கிராம் |
| (xi) | மெதாம் பெடாமைன் (+)—2—மெதிலாமின் —1— பினைல் ஃபினைல் ப்ரோபேன் | 1500 கிராம் |
| (xii) | மெதாக்குவாலான் (2—மெதில்—3—0—டோலைல் —4 (3H) கியுனாசோலினோன் | 1500 கிராம் |
| (xiii) | அம்பெட்டாமின் (+)—2—அமினோ —1—ஃபினைல் ப்ரோபேன் | 1500 கிராம் |
| (xiv) | (ix) முதல் (xiii) வரை உள்ளவற்றில் குறிப்பிடப்பட்ட உப்புகள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் தயாரிப்புகள் | 1500 கிராம் |

(ஆ) கூறு (அ) இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் எவற்றிற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதியுதவியளித்தல்

தொடர்புடைய ஒரு குற்றச்செயலைச் செய்ததற்காக, செய்ய முயன்றதற்காக அல்லது செய்ய உடந்தையாக இருந்ததற்காக, அல்லது குற்றமுறு சதி செய்ததற்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவாராயின் மரணதண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2) இந்தியாவிற்கு வெளியே குற்றவியல் அதிகாரவரம்பினை உடைய தகுதிறமுள்ள ஒரு நீதிமன்றத்தால் பிரிவு 15 முதல் பிரிவு 25 (இரண்டும் உள்ளடங்கலாக) வரையுள்ளவற்றின் பிரிவு 27 ஆ இன், பிரிவு 28 இன் அல்லது பிரிவு 29 இன் வகையங்களுக்கு நேரிணையான சட்டம் எதன்படியும் ஆள் எவருக்கும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய குற்றத்தீர்ப்பு பொறுத்து அவர் இந்தியாவிலுள்ள ஒரு நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாற் போன்று, உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

தண்டனை எதுவும் வகை செய்யப்பட்டிராத குற்றச் செயலுக் கான தண்டனை.

**32.** இந்த அத்தியாயத்தில் தனியாக தண்டனை எதுவும் வகைசெய்யப்பட்டிராத, இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் அல்லது அளிக்கப்பட்ட உரிமம், அனுமதி அல்லது அதிகாரமளிப்பு எதனின் வரைக்கட்டு எதனையும் மீறுகிற எவரொருவரும், ஆறுமாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

இந்தச் சட்டத் தின்படி அளிக் கப்பட்ட தீர்ப் புத் தண்டனை எதிலும் தற்காலிக மாக நிறுத்தி வைத்தல், நிறுத் தல் செய்தல் அல்லது மாற்றிக் குறைத்தல் ஏதும் செய்தல் ஆகாது.

**32 அ.** குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிறச் சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆனால் பிரிவு 33 இன் வகையங்களுக்கு உட்பட்டு, (பிரிவு 27 அல்லாத பிற) இந்தச் சட்டத்தின்படி அளிக்கப்பட்ட தீர்ப்புத்தண்டனை எதுவும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுதலோ, நிறுத்தல் செய்யப்படுதலோ, அல்லது மாற்றிக் குறைத்தல் செய்தலோ ஆகாது.

குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பிரிவு 360, குற்றவாளிகளைக் கண்காணித்தல் சட்டம், 1958 ஆகியவற்றின் பொருந்துகை.

**33.** குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பிரிவு 360இல் அல்லது குற்றவாளிகளைக் கண்காணித்தல் சட்டம், 1958இல் அடங்கியுள்ள எதுவும் இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆள் பதினெட்டு வயதிற்குக் கீழானவராக இருந்தாலன்றி, அல்லது அத்தகைய ஆள் எந்தக் குற்றச்செயலுக்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டாரோ அந்தக் குற்றச்செயல், பிரிவு 26இன் அல்லது பிரிவு 27இன்படி தண்டிக்கப்படத்தக்கதாக இருந்தலான்றி, அத்தகைய ஆளுக்குப் பொருந்துதல் ஆகாது. 2/1974 20/1958

குற்றச்செயலைச் செய்வதினின்று தவிர்ப்பதற்குப் பிணையம்.

**34.**(1) அத்தியாயம் (iv) இன் வகையம் எதன்படியும் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலுக்காக ஆள் எவரும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்து, அவருக்குக் குற்றத்தீர்ப்பு அளித்த நீதிமன்றம், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் செய்வதினின்று தவிர்ப்பதற்காக ஒரு முறியினை எழுதிக்கொடுக்குமாறு அத்தகைய ஆளை வேண்டுறுத்துவது தேவையெனக் கருதும்போதெல்லாம், நீதிமன்றம் அத்தகைய ஆளுக்குத் தண்டனை அளிக்கும் நேரத்தில், அது நிருணயிப்பதற்குப் பொருத்தமெனக் கருதுகிற மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலஅளவின்போது அத்தியாயம் (iv) இன்படி குற்றச்செயல் எதனையும் செய்வதினின்று தவிர்ப்பதற்காக, பிணையதாரர்களுடன் அல்லது இல்லாமல் அவருடைய வருவாய் வகைகளுக்குத்தக்க விகிதப்படியான ஒரு தொகைக்கு முறியொன்று எழுதிக்கொடுக்குமாறு அத்தகைய ஆளுக்கு ஆணையிடலாம்.

(2) அந்த முறியானது, மைய அரசாங்கத்தினால் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் இருத்தல் வேண்டும். மேலும், குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் வகையங்கள், அத்தகைய முறி அந்தத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 106இன் படி எழுதிக்கொடுக்கப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்ட அமைதிக்காப்பதற்கான ஒரு முறியாக இருந்தாற்போன்று, அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகள் அனைத்திற்கும் எந்த அளவுக்குப் பொருந்தத்தக்கனவாய் இருக்கின்றனவோ அந்த அளவுக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) குற்றத்தீர்ப்பானது, மேல்முறையீட்டின் பேரிலோ பிறவாறோ நீக்கம் செய்யப்படுமாயின், அவ்வாறு எழுதிக்கொடுக்கப்பட்ட முறி இல்லாநிலையது ஆகிவிடும்.

(4) இந்தப் பிரிவின்படியான ஓர் ஆணையானது, மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்தும்போது, மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் அல்லது உயர் நீதிமன்றத்தால் அல்லது அமர்வு நீதிபதியால் கூட பிறப்பிக்கப்படலாம்.

35. குற்றஞ்சார்த்தப்பட்டவரின் குற்றமுறு மனநிலையை வேண்டுறுத்தும் இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றச்செயலுக்கான குற்றவழக்கு எதிலும் நீதிமன்றம் அத்தகைய மனநிலை இருப்பதாகத் துணிபுகொள்ளுதல் வேண்டும். ஆனால், அத்தகைய குற்றவழக்கில் ஒரு குற்றச்செயலாகக் குற்றஞ்சார்த்தப்பட்ட செயலைப் பொறுத்து, அவருக்கு அத்தகைய மனநிலை எதுவும் இல்லை என்ற பொருண்மையை மெய்ப்பிப்பதற்கு குற்றஞ்சார்த்தப்பட்டவருக்கு அது ஓர் எதிர்வாதமாக அமையும். குற்றமுறு மனநிலை குறித்த துணிபு.

**விளக்கம்.**—இந்தப் பிரிவில் "குற்றமுறு மனநிலை" என்பது, ஒரு பொருண்மை பற்றிய உட்கருத்து, நோக்கம், அறிவு மற்றும் ஒரு பொருண்மையிலுள்ள நம்பிக்கை அல்லது அதனை நம்புவதற்கான காரணத்தை உள்ளடக்கும்.

(2) இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ஒரு பொருண்மை, தகுமான ஐயப்பாட்டிற்கு அப்பால் இருந்துவருகிறது என்று நீதிமன்றம் நம்பும்போது மட்டுமே அது மெய்ப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும். ஆனால் அதனுடைய உளமையானது, நிகழுறு கூறுகள் பெருமளவில் மிகுந்திருத்தலால் நிலைநாட்டப்படுகிறபோது மட்டுமே அன்று.

36. (1) அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களை விரைவாக விசாரணை செய்வதற்கு வகைசெய்வதற்காக அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் பரப்பிடங்கள் அல்லது பரப்பிடங்களுக்காகத் தேவைப்படும் எண்ணிக்கையில் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கலாம். சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தல்.

(2) ஒரு சிறப்பு நீதிமன்றம், தனியொரு நீதிபதியைக் கொண்டிருக்கும், அவர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் ஒருங்கிசைவுடன் அரசாங்கத்தால் அமர்த்தப்படுவார்.

**விளக்கம்.**—இந்த உட்பிரிவில் "உயர் நீதிமன்றம்" என்பது, சிறப்பு நீதிமன்றம் ஒன்றின் அமர்வு நீதிபதி அல்லது கூடுதல் அமர்வு நீதிபதி அமர்த்தப்படுவதற்கு ஒட்டிமுன்பு, அவர் பணிபுரிகிற மாநிலத்தின் உயர் நீதிமன்றம் என்று பொருள்படும்.

(3) ஓர் ஆள், ஒரு சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதியாக அமர்த்தப்படுவதற்கு ஒட்டி முன்பு, ஓர் அமர்வு நீதிபதியாகவோ ஒரு கூடுதல் அமர்வு நீதிபதியாகவோ இருந்தாலன்றி, அவர் அத்தகைய அமர்த்துகைக்குத் தகுதிப்பாடற்றவர் ஆவார்.

36 (அ). (1) குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,— சிறப்பு நீதிமன்றங்களால் விசாரணை செய்யத்தக்க குற்றச் செயல்கள்.

(அ) இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்கள் அனைத்தும், அக்குற்றச்செயல் செய்யப்பட்ட பரப்பிடத்திற்காக அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கன ஆகும், அல்லது அத்தகைய பரப்பிடத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் இருக்குமிடத்து, அவைகளில் அரசாங்கத்தால் இதற்கெனக் குறித்துரைக்கப்படும் ஒன்றால் விசாரணை செய்யப்படத்தக்கன ஆகும்.

(ஆ) இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றச்செயலைச் செய்ததாகக் குற்றஞ்சார்த்தப்பட்ட அல்லது ஐயத்திற்குள்ளான ஓர் ஆள், குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பிரிவு 167இன் உட்பிரிவு (2)இன் அல்லது உட்பிரிவு (2ஆ) இன்படி ஒரு குற்றவியல்நடுவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய குற்றவியல்நடுவர், நீதித்துறைக் குற்றவியல் நடுவராக இருக்குமிடத்து, முழுவதிலும் பதினைந்து நாட்களுக்கும் அத்தகைய குற்றவியல்நடுவர் நிருவாகக் குற்றவியல் நடுவராக இருக்குமிடத்து முழுவதிலும் ஏழு நாட்களுக்கும் மேற்படாத ஒரு கால அளவிற்குத் தாம் பொருத்தமெனக் கருதும் பாதுகாப்பில் அத்தகைய ஆளை இருத்தி வைப்பதற்கு அதிகாரமளிக்கலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய குற்றவியல் நடுவர்,—

(i) அத்தகைய ஆள் மேற்சொன்னவாறு தம்மிடம் அனுப்பப்பட்டிருக்கும்போது, அல்லது

(ii) தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட இருத்திவைப்புக் கால அளவு முடிவடைந்ததன்பேரில், அல்லது அதற்குமுன் எந்த நோத்திலும்

அத்தகைய ஆளை இருத்திவைப்பது தேவையற்றது என்று கருதுமிடத்து, அவர், அதிகாரவரம்புடைய சிறப்பு நீதிமன்றத்திற்கு அத்தகைய ஆள் அனுப்பப்பட வேண்டுமென்று ஆணையிடுதல் வேண்டும்.

(இ) ஒரு வழக்கை விசாரிப்பதற்கு அதிகாரவரம்பு கொண்டிருக்கிற ஒரு குற்றவியல் நடுவர், அத்தகைய வழக்கில் குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பிரிவு 167 இன்படி தமக்கு அனுப்பப்பட்டிருக்கிற குற்றஞ்சார்த்தப்பட்ட ஆள் தொடர்பாக அந்தப் பிரிவின்படி செலுத்தலாகும் அதே அதிகாரத்தை, சிறப்பு நீதிமன்றம், கூறு (ஆ) இன்படி அதற்கு அனுப்பப்பட்ட ஆள் தொடர்பாகச் செலுத்தலாம்.

(ஈ) ஒரு சிறப்பு நீதிமன்றம், இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச் செயலை அமைக்கிற பொருண்மைகளைப் பற்றிய காவல்துறை அறிக்கையைப் பார்வையிட்டதன் பேரில் அல்லது இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மைய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் அலுவலரால் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில், விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள குற்றஞ்சார்த்தப்பட்டவர் இல்லாமல் அந்தக் குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றச்செயலை விசாரணை செய்யும்போது, குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன்படி அதே விசாரணையில் குற்றஞ்சார்த்தப்பட்டவரின் மீது சார்த்தக்கூடியதான இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றச்செயல் அல்லாத பிறிதொரு குற்றச்செயலையும்கூட விசாரணை செய்யலாம். 2/1974

(3) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பிரிவு 439 இன்படி பிணையம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குள்ள சிறப்பு அதிகாரங்களைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது. மேலும், உயர் நீதிமன்றம், அந்தப் பிரிவிலுள்ள "குற்றவியல் நடுவர்" என்ற சுட்டுகை, பிரிவு 36 இன்படி அமைக்கப்பட்ட ஒரு "சிறப்பு நீதி மன்றம்" என்ற சுட்டுகையையும்கூட உள்ளடக்கியிருந்தாற்போன்று, அந்தப் பிரிவின் உட்பிரிவு (1) இன் கூறு (ஆ) இன்படியான அதிகாரம் உள்ளடங்கலான அதிகாரங்களைச் செலுத்தலாம். 2/1974

மேல்முறையீடு மற்றும் மேலாய்வு

**36 ஆ**. உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின் வட்டார எல்லைகளுக்குள் உள்ள ஒரு சிறப்பு நீதிமன்றம், அந்த உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின் வட்டார எல்லைகளுக்குள் இருக்கிற வழக்குகளை விசாரணைசெய்கிற அமர்வு நீதிமன்றமாக இருந்தாற்போன்று, ஓர் உயர்நீதிமன்றத்திற்கு குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் அத்தியாயங்கள் (xxix) மற்றும் (xxx) இல் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும், அது எந்த அளவுக்குப் பொருந்தத்தக்கதோ அந்த அளவுக்கு உயர்நீதிமன்றம் செலுத்தலாம். 2/1974

ஒரு சிறப்பு நீதிமன்றத்தின் முன்புள்ள நடவடிக்கைகளுக்குத் தொகுப்புச் சட்டம் பொருந்துதல்.

**36 இ**. இந்தச் சட்டத்தில் பிறவாறு செய்யப்பட்டவாறல்லாமல் (பிணையம் மற்றும் முறிகள் குறித்த வகையங்கள் உள்ளடங்கலாக) குற்றவழக்கு விசாரணை முறை தொகுப்புச் சட்டம், 1973 இன் வகையங்கள், ஒரு சிறப்பு நீதிமன்றத்தின் முன்புள்ள நடவடிக்கைகளுக்குப் பொருந்துதல் வேண்டும் மற்றும் சொல்லப்பட்ட வகையங்களின் நோக்கங்களுக்காக, சிறப்பு நீதிமன்றம், அமர்வு நீதிமன்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தின் முன்பு குற்ற வழக்கினை நடத்துகிற ஆள் அரசாங்கக் குற்றத்துறை வழக்குரைஞராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

36 (ஈ). (1) மயக்க மருந்துப்பொருள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் (திருத்தம்) சட்டம், 1988 இன் தொடக்கத்தன்றும் அல்லது அதற்குப் பின்பும், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட குற்றச்செயல் எதுவும், பிரிவு 36 இன் படி ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும் வரையில், குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச்சட்டம், 1973 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஓர் அமர்வு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்: மாறுதற்கால வகையங்கள்.

**வரம்புரையாக:** பிரிவுகள் 26, 27 மற்றும் 32 இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல்கள், குறுகு முறையில் விசாரணை செய்யப்படலாம்.

(2) உட்பிரிவு (1)இல் உள்ள எதுவும், சொல்லப்பட்ட உட்பிரிவு (1)இன்படி ஓர் அமர்வு நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு குற்றச்செயல் தொடர்பான நடவடிக்கைகள் எவற்றையும், ஒரு சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்யுமாறு வேண்டுறுத்துவதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது. மேலும், அது அமர்வு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

37. (1) குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,— குற்றச் செயல்கள் விசாரிக்கப் படத்தக்கவை மற்றும் பிணையத்தில் விடத்தகாதவை.

(அ) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒவ்வொன்றும் விசாரணை செய்யப்படத்தக்கதாகும்.

(ஆ) இந்தச் சட்டத்தின்படி ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலைச் செய்திருப்பதாக குற்றஞ்சார்த்தப்பட்ட ஆள் எவரும்,—

(i) அத்தகைய விடுவிப்பிற்கான விண்ணப்பத்தை எதிர்ப்பதற்கான ஒரு வாய்ப்பினை அரசாங்கக் குற்றத்துறை வழக்குரைஞருக்குக் கொடுத்திருந்தாலன்றி, மற்றும்

(ii) அரசாங்கக் குற்றத்துறை வழக்குரைஞர் விண்ணப்பத்தை எதிர்க்குமிடத்து, நீதிமன்றம், அவர் அந்தக் குற்றச்செயலைச் செய்யவில்லை என்றும், பிணையத்தில் இருக்கையில் அவர் குற்றச்செயல் எதனையும் செய்ததாகத் தெரியவில்லை என்றும் நம்புவதற்குத் தகுமான காரணங்கள் இருக்கின்றன என்று தெளிவுறக் காணுமாயின்,

பிணையத்தின் பேரிலோ தாம் சொந்தமாக முறி எழுதிக் கொடுத்ததன்பேரிலோ விடுவிக்கப்படுதலாகாது.

(2) உட்பிரிவு (1)இன் கூறு (ஆ) இல் குறித்துரைக்கப்பட்ட பிணையத்தை அளிப்பதற்கான வரம்புகள், குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம்,
2/1974 1973 அல்லது பிணையத்தை அளிப்பதற்காக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியுமான வரம்புகளுக்குக் கூடுதலானவையாக இருக்கும்.

38. (1) அத்தியாயம் (iv) இன்படியான ஒரு குற்றச்செயல், ஒரு நிறுமத்தினால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்ட நேரத்தில், அந்த நிறுமத்தின் அலுவலை நடத்திவருவதற்கு அந்த நிறுமத்தின் பொறுப்பைக் கொண்டிருந்தவரும் அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான ஆள் ஒவ்வொருவரும், அதோடு அந்த நிறுமமும் அந்தக் குற்றச்செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும். அதன்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்: நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்.

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அந்தக் குற்றச் செயல் தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதாக அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்யப்படாமல் தடுக்கத் தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டதாக ஆள் எவரும் மெய்ப்பிப்பாராயின், அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

*(2)* உட்பிரிவு *(1)* இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தியாயம் iv இன்படியான ஒரு குற்றச்செயல் எவரேனும் இயக்குநரின், மேலாளரின், செயலாளரின் அல்லது பிற அலுவலரின் இசைவுடன் அல்லது மறைமுக ஆதரவுடன் அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக் குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர், அந்தக் குற்றச் செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மேலும் அதன்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்.—** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

*(அ)* "நிறுமம்" என்பது, கூட்டுருமம் எதுவும் என்று பொருள்படும்; மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனியாட்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

*(ஆ)* ஒரு நிறுவகம் தொடர்பாக "இயக்குநர்" என்பது, நிறுவகத்திலுள்ள ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

கண்காணிப்பின் பேரில் குறித்த சில குற்றவாளிகளை விடுதலை செய்ய நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

39. *(1)* பிரிவு 27 இன்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கண்டறியப்படும்போது, அவர் குற்றச்செயலை செய்திருப்பதாகக் கண்டறிந்த நீதிமன்றம், குற்றவாளியின் வயது, பண்பு, முன்னிகழ்ச்சிகள் அல்லது உடலியலின் அல்லது உளவியலின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு, இந்தச் சட்டத்தில் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், உடனடியாக சிறைத்தண்டனை எதனையும் அவருக்கு விதிப்பதற்கு மாற்றாக, அவருடைய இசைவுடன், ஒரு மருத்துவனையில் அல்லது அரசாங்கத்தால் வைத்துவரப்படும் அல்லது ஏற்பளிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் நச்சுத்தன்மையைக் குறைக்க அல்லது கெட்ட பழக்கத்திற்கு அடிமையாயிருப்பதனின்று மாற்ற மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்வதற்காக விடுதலை செய்யப்படவும், பிணையர்களுடன் அல்லது பிணையர்கள் இல்லாமல், மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அவர் ஒரு முறியை எழுதிக் கொடுப்பதன் பேரில், ஓராண்டுக்கு மேற்படாததொரு கால அளவுக்குள் நீதி மன்றத்தின் முன் முன்னிலையாகவும், அவருடைய மருத்துவச் சிகிச்சையின் முடிவு பற்றிய ஓர் அறிக்கையை அனுப்பவும், அதே நேரத்தில் அத்தியாயம் iv இன் படியான குற்றச்செயல் எதனையும் செய்வதினின்று தவிர்க்கவும் ஆணையிடுவது அப்போது உகந்ததாயிருக்கும் என்று கருதுமாயின், அவ்வாறு செய்யலாம்.

*(2)* உட்பிரிவு *(1)* இன்படி அனுப்பப்பட்ட மருத்துவ சிகிச்சையின் முடிவு பற்றிய அறிக்கையைக் கவனத்திற்கொண்டு, நீதிமன்றத்திற்கு அவ்வாறு செய்வது உகந்ததென நீதிமன்றத்திற்குத் தோன்றுமாயின், குறித்துரைப்பதற்குப் பொருத்தமானது என்று கொள்ளும் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத கால அளவின் போது, அத்தியாயம் iv இன்படியான குற்றச்செயல் எதனையும் செய்வதினின்று தவிர்ப்பதற்காக பிணையர்களுடனோ, இல்லாமலோ, மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஒரு முறியை அவர் எழுதிக் கொடுப்பதன்பேரில், உரியவாறு எச்சரித்த பின்னர் குற்றவாளியை விடுவிக்குமாறு அல்லது அவர் அவ்வாறு தவிர்க்கத் தவறுவதன்பேரில், அத்தகைய கால அளவில் அழைக்கப்படும்போது, நீதிமன்றத்தின் முன் முன்னிலையாகி தீர்ப்புத்தண்டனையைப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் பணிக்கலாம்.

குறித்த சில குற்றவாளிகளின் பெயர்கள், தொழிலிடம் முதலானவற்றை வெளியிடுவதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

40. *(1)* ஆள் எவரும், பிரிவு 15 முதல் பிரிவு 25 (இரண்டு உள்ளடங்கலாக) வரையுள்ளவற்றின் பிரிவு 28 இன், பிரிவு 29 இன் அல்லது பிரிவு 30 இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல்களில் எவற்றிற்காகவும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த ஆளுக்குத் குற்றத்தீர்ப்பு அளிக்கும் நீதிமன்றம் அத்தகைய ஆளின் பெயர் மற்றும் தொழிலிடம் அல்லது குடியிருப்பிடம், மீறுகையின் தன்மை, அந்த ஆள் அவ்வாறு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறார்

என்ற பொருண்மை மற்றும் வழக்கின் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாயிருக்கும் என்று நீதிமன்றம் கருதும் பிற விவரங்கள், நீதிமன்றம் பணிக்கும் செய்தித் தாள்களில் அல்லது அத்தகைய முறையில் அத்தகைய ஆளின் செலவில் வெளியிடப்படுமாறு செய்வதற்கு குற்றத்தீர்ப்பு அளிக்கும் நீதிமன்றம் தகுதிறமுடையது ஆகும்.

(2) உட்பிரிவு (1) இன்படியான வெளியீடு எதுவும், மேல்முறையீடு எதுவும் முன்னிடப்படாமல், நீதிமன்றத்தின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு முன்னிடப்படுவதற்கான கால அளவு முடிவடையும் வரையில் அல்லது அத்தகைய மேல்முறையீடு செய்யப்பட்டிருந்து முடிவு செய்யப்படும் வரையில் செய்யப்படுதல் ஆகாது.

(3) உட்பிரிவு (1) இன்படியான வெளியீட்டின் செலவுகள், நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட ஒரு பணத்தண்டமாக இருந்தாற்போன்று, குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆளிடமிருந்து வசூலிக்கப்படத்தக்கது ஆகும்.

## அத்தியாயம் V

## நெறிமுறை

பிடியாணையையும் அதிகாரமளிப்பையும் வழங்குவதற்குள்ள அதிகாரம்.

41. (1) ஒரு பெருநகர் குற்றவியல் நடுவர் ஒருவர் அல்லது ஒரு முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் ஒருவர் அல்லது இதற்கென மாநில அரசாங்கத்தால் தனிவகையில் அதிகாரமளிக்கப்பட்ட இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நடுவர் எவரும், அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும் செய்திருப்பதாக நம்புவதற்குக் காரணம் பெற்றிருக்கிற ஆள் எவரையும், கைது செய்வதற்காக அல்லது எந்த மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் பொறுத்து, அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றசெயல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதுவும் அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்ததற்கான சான்றினை அளிக்கும் ஆவணம் அல்லது பிற பொருள் எதுவும் வைக்கப்பட்டுள்ளது அல்லது மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று அவர் நம்புவதற்குக் காரணம் பெற்றுள்ள கட்டடம், வண்டி அல்லது இடத்தைப் பகலிலோ இரவிலோ சோதனையிடுவதற்கான ஆணை பிறப்பிக்கலாம்.

(2) மைய அரசாங்கத்தின் பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மைய ஆயத்தீர்வை, மயக்கப் பொருள்கள். சுங்கம், வருவாய் புலனாய்வுத் துறைகளின் அல்லது மைய அரசாங்கத்தின் பிற ஏதேனும் துறையின் அல்லது எல்லைப் பாதுகாப்புப் படையின் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் எவரும், அல்லது மாநில அரசாங்கத்தின் பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மாநில அரசாங்கத்தின் வருவாய், மருந்துப்பொருள்கள் கட்டுப்பாடு, ஆயத்தீர்வை, காவல் அல்லது பிற ஏதேனும் துறையின் அலுவலர் எவரும், தாமாக அறிந்ததிலிருந்து அல்லது ஆள் எவராலும் கொடுக்கப்பட்டு எழுத்துவடிவில் எழுதிக்கொள்ளப்பட்ட தகவலிலிருந்து, ஆள் எவரும், அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச் செயலைச் செய்திருக்கிறார் என்று, அல்லது எந்த மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் பொறுத்து அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதுவும் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த மயக்கமருந்துபொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் அல்லது அத்தகைய குற்றச்செயலைச் செய்ததற்கான சான்றினை அளிக்கும் ஆவணம் அல்லது பிற பொருள் எதுவும், கட்டடம், வண்டி அல்லது இடம் எதிலும் வைக்கப்பட்டிருக்கிறது அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்று நம்புவதற்குக் காரணம் பெற்றிருப்பாராயின், தமக்குக் கீழ்நிலையிலுள்ள, ஆனால், ஓர் ஏவலர், சிப்பாய் அல்லது ஒரு காவலர் பதவிக்கு மேல் நிலையிலுள்ள அலுவலர் எவரையும் அத்தகையதொரு ஆளைக் கைது செய்ய அல்லது ஒரு கட்டடத்தை, வண்டியை அல்லது இடத்தை, பகலிலோ இரவிலோ சோதனையிடுவதற்கு அதிகாரமளிக்கலாம் அல்லது தாமே ஓர் ஆளைக் கைது செய்யலாம் அல்லது ஒரு கட்டடத்தை, வண்டியை அல்லது இடத்தைச் சோதனையிடலாம்.

(3) உட்பிரிவு (1) இன்படி பிடியாணை யாருக்கு முகவரியிடப்பட்டுள்ளதோ அந்த அலுவலரும், கைது அல்லது சோதனையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும், உட்பிரிவு (2) இன்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும், பிரிவு 12 இன்படி செயலுறுகின்ற ஓர் அலுவலரின் அதிகாரங்கள் அனைத்தையும் உடையவர்கள் ஆவர்.

பிடியாணையோ அதிகாரமளிப்போ இல்லாமல் நுழையவும் சோதனையிடவும் பற்றுகை செய்யவு முள்ள அதிகாரம்.

42. (1) பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக, மைய அரசாங்கத்தினால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மைய ஆயத்தீர்வை, மயக்கபொருள்கள், சுங்கம், வருவாய், புலனாய்வுத் துறைகளின் அல்லது மைய அரசாங்கத்தின் பிற துறையின் அல்லது எல்லைப்பாதுகாப்புப்படையின் (ஓர் ஏவலர், சிப்பாய் அல்லது காவலர் பதவிக்கு மேல் நிலையிலுள்ள ஓர் அலுவலராக இருக்கிற) அலுவலர் எவரும் அல்லது மாநில அரசாங்கத்தின் பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மாநில அரசாங்கத்தின் வருவாய் மருந்துப்பொருள்கள் கட்டுப்பாடு, ஆயத்தீர்வை, காவல் அல்லது பிற துறையின் (ஓர் ஏவலர், சிப்பாய் அல்லது காவலர் பதவிக்கு மேல் நிலையிலுள்ள ஓர் அலுவலராக இருக்கிற) அலுவலர் எவரும், தாமே அறிந்தோ அல்லது ஆள் எவராலும் கொடுக்கப்பட்டு எழுத்து வடிவில் எழுதிக்கொள்ளப்பட்ட தகவலிலிருந்தோ, அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எந்த மயக்க மருந்துப் பொருள் அல்லது மன நிலைக்கு ஊறு செய்யும் பொருள் பொறுத்துச் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதுவும் அல்லது அத்தகைய குற்றச்செயலைச் செய்ததற்கான சான்றினை அளிக்கும் ஆவணம் அல்லது பிற உருப்படி எதுவும், கட்டடம், வண்டி அல்லது அடைக்கப்பட்ட இடம் எதிலும் வைக்கப்பட்டிருக்கிறது அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்று நம்பக் காரணம் பெற்றிருப்பாராயின், அவர் சூரியன் உதிப்பதற்கும் சூரியன் மறைவதற்கும இடையே—

(அ) அத்தகைய கட்டடம், வண்டி அல்லது இடம் எதிலும் நுழைந்து சோதனையிடலாம்;

(ஆ குடியிருப்பிடமாகும் நேர்வில், கதவு எதனையும் உடைத்து, அவ்வாறு நுழைவதற்குத் தடையான எதனையும் அகற்றலாம்;

(இ) அத்தகைய மருந்துப்பொருள் அல்லது பொருள் மற்றும் அதனை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள்கள் அனைத்தையும், இந்தச் சட்டத்தின்படி பறிமுதலுக்கு உள்ளாக்கப்படவேண்டியதென நம்புவதற்கு அவர் காரணம் பெற்றிருக்கும் பிற உருப்படியையும், விலங்கு அல்லது வண்டி எதனையும் அத்தகைய மருந்துப்பொருள் அல்லது பொருளுடன் தொடர்புடையதும், அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்கதுமான குற்றச்செயல் எதனையும் செய்ததற்கான சான்றினை அளிக்கும் என்று நம்புவதற்கு அவர் காரணம் பெற்றிருக்கும் ஆவணம் அல்லது பிற உருப்படி எதனையும் பற்றுகை செய்யலாம்; மற்றும்

(ஈ) அத்தகைய மருந்துபொருள் அல்லது பொருளுடன் தொடர்புடையதும் அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத் தக்கதுமான குற்றச்செயல் எதனையும் செய்திருப்பதாக நம்புவதற்கு அவர் காரணம் பெற்றிருக்கிற ஆள் எவரையும் இருத்திவைத்து சோதனையிடலாம்; மேலும் முறையானது என்று அவர் கருதுவாராயின், கைது செய்யலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய அலுவலர் சான்றினை மறைப்பதற்கான அல்லது ஒரு குற்றவாளியைத் தப்பிக்கவைப்பதற்கான வாய்ப்பினை அளிக்காமல், சோதனை ஆணை அல்லது அதிகாரமளிப்பினைப் பெற முடியாது என்று நம்புவதற்கும் காரணம் பெற்றிருப்பாராயின், அவர் தம்முடைய நம்பிக்கைக்கான காரணங்களைப் பதிவு செய்த பின்னர் சூரியன் உதிப்பதற்கும், சூரியன் மறைவதற்கும் இடையே எந்த நேரத்திலும் அத்தகைய கட்டடம், வண்டி அல்லது அடைக்கப்பட்ட இடத்தில் நுழைந்து சோதனையிடலாம்.

(2) ஓர் அலுவலர் உட்பிரிவு (1) இன்படி எழுத்துவடிவில் தகவல் எதனையும் எடுத்துக்கொள்கிறவிடத்து அல்லது அதன் வரம்புரையின்படி தன்னுடைய நம்பிக்கைக்கான காரணங்களைப் பதிவு செய்கிறவிடத்து, அவர் தமக்கு நேரடியாக மேல்நிலையிலுள்ள அலுவலருக்கு அதன் படி ஒன்றினை உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

43. பிரிவு 42 இல் சொல்லப்பட்ட துறைகளின் ஒன்றின் அலுவலர் எவரும்— பொது இடங்களில் பற்றுகை செய்யவும் கைது செய்யவுமுள்ள அதிகாரம்.

(அ) எதைப் பொறுத்து அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றைச் செய்திருப்பதாக நம்புவதற்குத் தாம் காரணம் பெற்றிருக்கிறாரோ, அந்த மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள் எதனையும், மேலும் அத்தகைய மருந்துப்பொருள் அல்லது பொருளோடு கூட இந்தச் சட்டத்தின்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்க விலங்கு அல்லது வண்டி அல்லது பொருள் எதனையும், மேலும் அத்தகைய மருந்துப்பொருள் அல்லது பொருளுடன் தொடர்புடையதும் அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்கதுமான ஒரு குற்றச்செயலைச் செய்ததற்கான சான்றினை அளிக்கலாம் என்று தாம் நம்புவதற்குக் காரணம் பெற்றிருக்கிற ஆவணம் அல்லது பிற உருப்படி எதனையும் பொது இடம் எதிலும் அல்லது கொண்டு செல்கையில் பற்றுகை செய்யலாம்.

(ஆ) அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயல் செய்திருப்பதாக நம்புவதற்குத் தாம் காரணம் பெற்றிருக்கும் ஆள் எவரையும் இருத்திவைத்துச் சோதனையிடலாம், மற்றும் அத்தகைய ஆள், மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் தம்முடைய உடைமையில் வைத்திருந்து மேலும், அவ்வாறு உடைமையில் வைத்திருப்பது அவருக்குச் சட்டமுரணானதாகத் தோன்றுமாயின், அவரையும் அவருடைய நிறுமத்திலுள்ள பிற ஆள் எவரையும் கைது செய்யலாம்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, "பொது இடம்" என்பது, பொதுமக்களின் பயனுக்காகக் கருதப்பட்ட அல்லது பொதுமக்கள் அணுகக்கூடிய பொது வண்டி, உணவு விடுதி, கடை அல்லது பிற இடம் எதனையும் உள்ளடக்கும்.

44. பிரிவுகள் 41,42,43 ஆகிய பிரிவுகளின் வகையங்கள், அத்தியாயம் iv இன்படி தண்டிக்கப்படத்தக்கவையும் கோக்கோசெடி, கசகசாத்தண்டு அல்லது கன்னாபிஸ் செடி தொடர்பானவையுமான குற்றச்செயல்கள் தொடர்பாக, எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்குப் பொருந்தும், மேலும் இதனைப் பொறுத்தவரை, மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் குறித்து, அந்தப் பிரிவுகளிலுள்ள சுட்டுகைகள், கோக்கோசெடி, கசகசாத்தண்டு மற்றும் கன்னாபிஸ்செடி குறித்த சுட்டுகைகளை உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும். கோக்கோசெடி, கசகசாத்தண்டு மற்றும் கன்னாபீஸ் செடி தொடர்பான குற்றச் செயல்களில், நுழைவதற்கும் சோதனையிடுவதற்கும் பற்றுகை செய்வதற்கும் கைது செய்வதற்கும் உள்ள அதிகாரம்.

45. இந்தச் சட்டத்தின்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்க (வளரும் பயிர் உள்ளடங்கலாக) சரக்குகள் எதனையும் பற்றுகை செய்வது இயலாததாகுமிடத்து, பிரிவு 42 இன்படி உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் எவரும், பொருள்களின் சொந்தக்காரருக்கு அல்லது அவற்றை உடைமையில் கொண்டுள்ள ஆளுக்கு, அவர், அத்தகைய அலுவலரின் முன் அனுமதியில்லாமல், அந்தப் பொருள்களை அகற்றுதலோ விட்டுச்செல்லுதலோ பிறவாறு கையாளுதலோ ஆகாது என்ற ஆணை ஒன்றினைச் சார்வு செய்யலாம். பறிமுதலுக்கு உள்ளாகத்தக்க சரக்குகளைப் பற்றுகை செய்வது இயலாததாகுமிடத்து நெறிமுறை.

நிலத்தை வைத்திருப்பவர் சட்டமுரணாக பயிரிடுவது பற்றித் தகவல் கொடுப்பதற்கான கடமை.

46. நிலத்தை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், தம்முடைய நிலத்தில் சட்டமுரணாகப் பயிரிடும் கசகசாத்தண்டு, கன்னாபீஸ் செடி அல்லது கோக்கோசெடி அனைத்தையும் பற்றி காவல்துறையின் அல்லது பிரிவு 42 இல் சொல்லப்பட்ட துறைகளில் ஒன்றின் அலுவலர் எவருக்கும் உடனடியாகத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

சட்டமுரணாகப் பயிரிடுவது பற்றித் தகவலைக் கொடுப்பதற்குக் குறித்த சில அலுவலர்களுக்குள்ள கடமை.

47. அரசாங்க அலுவலர் ஒவ்வொருவரும், மற்றும் பாஞ்ச், சார்பாஞ்ச் மற்றும் வேறெந்த விவரிப்பினையும் உடைய பிற கிராம அலுவலர் ஒவ்வொருவரும், நிலம் எதிலும் கசகசாத்தண்டு, கன்னாபீஸ் செடி அல்லது கோக்கோசெடி சட்டமுரணாகப் பயிரிடப்படுகிறது என்று தமக்குத் தெரியவரும்போது காவல்துறையின் அல்லது பிரிவு 42 இல் சொல்லப்பட்ட துறைகளில் ஒன்றின் அலுவலர் எவருக்கும் உடனடியாகத் தகவல் கொடுத்தல் வேண்டும். மேலும், அத்தகைய தகவல் கொடுப்பதைப் புறக்கணிக்கும் அரசாங்க அலுவலர் பாஞ்ச், சார்பாஞ்ச் மற்றும் பிற கிராம அலுவலர் ஒவ்வொருவரும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

சட்டமுரணாகப் பயிரிடப்பட்ட பயிரைப் பற்றுகை செய்வதற்குள்ள அதிகாரம்.

48. பெருநகரக் குற்றவியல் நடுவர், முதல் வகுப்பு நீதித்துறைக் குற்றவியல் நடுவர் அல்லது இதற்கென மாநில அரசாங்கத்தால் சிறப்பாக அதிகாரமளிக்கப் பெற்ற குற்றவியல் நடுவர் எவரும் அல்லது பிரிவு 42 இன்படி அரசிதழ்ப் பதிவு பெற்ற நிலைமையிலுள்ள அலுவலர் எவரும், சட்ட முரணாகப் பயிரிடப்பட்டிருக்கிறது என்று நம்புவதற்கு அவர் காரணம் பெற்றிருக்கும் கசகசாத்தண்டு, கன்னாபீஸ் செடி அல்லது கோக்கோசெடி எதனையும் பற்றுகை செய்வதற்கு ஆணையிடலாம். மேலும், அவ்வாறு செய்கையில் (பயிரை அழிப்பதற்கான ஓர் ஆணை உள்ளடங்கலாக) அவர் பொருத்தமெனக் கருதும் ஆணையையும் பிறப்பிக்கலாம்.

வண்டியை நிறுத்துவதற்கும் சோதனையிடுவதற்கும் உள்ள அதிகாரம்.

49. பிரிவு 42 இன்படி அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் எவரும், இந்தச் சட்டத்தின் வகையம் எதுவும், எதைப்பொறுத்து எந்தச் சமயத்திலும், மீறப்பட்டிருக்கிறது அல்லது மீறப்படுகிறது அல்லது மீறப்படவிருக்கிறது என்று தாம் ஐயங்கொள்கிறாரோ, அந்த மயக்கமருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும், விலங்கு அல்லது வண்டி எதுவும் எடுத்துச்செல்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது அல்லது பயன்படுத்தப்படவிருக்கிறது என்று ஐயங்கொள்வதற்குக் காரணம் பெற்றிருப்பாராயின் அத்தகைய விலங்கு அல்லது வண்டியை நிறுத்தி வைக்கலாம், அல்லது ஒரு வானூர்தியாக இருக்கும் நேர்வில், அதனைக் கீழே இறங்குமாறு வற்புறுத்தலாம், மேலும்—

(அ) வண்டியை அல்லது அதன் பகுதியை துருவித்தேடி சோதனையிடலாம்;

(ஆ) விலங்கின்மீது அல்லது வண்டியிலுள்ள சரக்குகள் எவற்றையும் பரிசோதனை செய்து சோதனையிடலாம்;

(இ) அந்த விலங்கினை அல்லது வண்டியை நிறுத்துவது தேவையானதாக்குமாயின், அவர் அதனை நிறுத்துவதற்குச் சட்டமுறையான வழிகள் அனைத்தையும் பயன்படுத்தலாம். மேலும், அத்தகைய வழிகள் தோல்வியுறுமாயின், அந்த விலங்கு அல்லது வண்டி சுட்டுத்தள்ளப்படலாம்.

ஆட்களைச் சோதனையிடுவது எந்த வரைக் கட்டுகளின்படி நடத்தப்பட வேண்டுமோ அந்த வரைக் கட்டுகள்.

50. (1) பிரிவு 42 இன்படி உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் எவரும், பிரிவு 41, பிரிவு 42 அல்லது பிரிவு 43 இன் வகையங்களின்படி ஆள் எவரையும் சோதனையிடவிருக்கும்போது, அத்தகைய ஆள், பிரிவு 42இல் சொல்லப்பட்டுள்ள துறைகளில் ஒன்றின் மிகவும் அருகிலுள்ள அரசிதழ்ப் பதிவுபெற்ற அலுவலரிடம் அல்லது மிக அருகிலுள்ள குற்றவியல் நடுவரிடம் அழைத்துச் செல்லுமாறு வேண்டுறுத்துவாராயின், அவ்வாறு செய்யலாம், அத்தகைய ஆளை தேவையற்ற காலத்தாழ்வின்றி, அழைத்துச் செல்லலாம்.

(2) அத்தகைய வேண்டுதல் செய்யப்படுமாயின், அந்த அலுவலர், உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் அல்லது குற்றவியல் நடுவர் முன்பு அந்த ஆளைக் கொண்டு போகும் வரையில் அவரை இருத்தி வைக்கலாம்.

(3) எந்த அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் அல்லது குற்றவியல் நடுவர் முன் அத்தகைய ஆள் எவரும் கொண்டுவரப்படுகிறாரோ, அவர் சோதனையிடுவதற்குத் தகுமான காரணம் எதுவுமில்லை என்று காண்பாராயின், உடனடியாக அந்த ஆளை விடுவித்தல் வேண்டும். ஆனால் பிறவாறு அந்தச் சோதனை செய்யப்படுமாறு பணித்தல் வேண்டும்.

(4) பெண்மணி எவரும் ஒரு பெண்மணி அல்லாத எவரொருவராலும் சோதனையிடப்படுதல் ஆகாது.

குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம் 1973 இன் வகையங்கள், பிடியாணைகள், கைதுகள், சோதனைகள், பற்றுகைகள் ஆகியவற்றிற்குப் பொருந்துதல்.

51. குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் வகையங்கள், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட பிடியாணைகள், செய்யப்பட்ட கைதுகள், சோதனைகள், பற்றுகைகள் ஆகிய அனைத்திற்கும் பொருந்துதல் வேண்டும்.

கைது செய்யப்பட்ட ஆட்களையும் பற்றுகை செய்யப்பட்ட பொருள்களையும் தீர்வு செய்தல்.

52. (1) பிரிவு 41, பிரிவு 42, பிரிவு 43 அல்லது பிரிவு 44 இன்படி ஓர் ஆளைக் கைது செய்கிற அலுவலர் எவரும், கூடிய விரைவில், அத்தகைய கைதுக்கான காரணங்களை அவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) பிரிவு 41இன் உட்பிரிவு (1)இன்படி வழங்கப்பட்ட ஆணையின்படி கைதுசெய்யப்பட்ட ஒவ்வொருவரும், பற்றுகை செய்யப்பட்ட பொருள் ஒவ்வொன்றும், அந்தப் பிடியாணையைப் பிறப்பித்த குற்றவியல் நடுவரிடம் தேவையற்ற காலத்தாழ்வின்றி, அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 41 இன் உட்பிரிவு (2), பிரிவு 42, பிரிவு 43 அல்லது பிரிவு 44இன்படி கைது செய்யப்பட்ட ஒவ்வொருவரும், பற்றுகை செய்யப்பட்ட பொருள் ஒவ்வொன்றும், தேவையற்ற காலத்தாழ்வின்றி—

(அ) மிக அருகிலுள்ள காவல் நிலையத்தின் பொறுப்பைக் கொண்ட அலுவலரிடம், அல்லது

(ஆ) பிரிவு 53 இன்படி அதிகாரமளிக்கப்பெற அலுவலரிடம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (2) இன் அல்லது உட்பிரிவு (3)இன்படி ஆள் எவரும் அல்லது பொருள் எதுவும் அனுப்பப்பட்ட அதிகாரி அல்லது அலுவலர் வசதிக்கேற்ற விரைவுடன் அத்தகைய ஆள் அல்லது பொருள் பொறுத்து சட்டத்திற்கிணங்கத் தீர்வு செய்வதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

பற்றுகைசெய்யப்பட்ட மயக்க மருந்துப் பொருள்களையும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களையும் தீர்வு செய்தல்.

52அ. (1) மைய அரசாங்கமானது, மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களின் இடரார்ந்த தன்மை, அவை திருட்டுக்கு உள்ளாவதால் ஏற்படும் மதிப்பு, மாற்றி வைக்கப்படுதல், முறையாகச் சேமிப்பதற்கான இடம், தேவைப்படும் வலுக்கட்டாய நிலை அல்லது பிற தொடர்புடைய இழப்பீடுகளைக் கவனத்தில் கொண்டு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கை வாயிலாக, அத்தகைய மயக்க மருந்துப்பொருள்களை அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களை அல்லது மயக்க மருந்துப் பொருள்களின் வகையை அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் வகையைக் குறித்துரைக்கலாம். அவற்றைப் பற்றுகை செய்த பின்பு, கூடிய விரைவில், அந்த அரசாங்கம் இதில் இதன்பின்பு குறித்துரைக்கப்படும் நெறிமுறையைப் பின்பற்றிய பின்பு, தீர்மானிக்கும் அலுவலரால் மற்றும் அத்தகைய முறையில் அவ்வப்போது தீர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதுவும் பற்றுகை செய்யப்பட்டு மிக அருகிலுள்ள காவல் நிலையத்தின் பொறுப்பிலுள்ள அலுவலருக்கு அல்லது பிரிவு 53 இன்படி அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலருக்கு அனுப்பப்பட்டிருக்குமிடத்து, உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்ட அலுவலர், மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் விவரிப்பு, தன்மை, அளவு எண்கள், சிப்பங்கட்டிய முறை, குறிகள் அவற்றை அடையாளங்காட்டும் பிற விவரங்கள், அவை கட்டப்பட்டுள்ள சிப்பம், அவை கிடைத்த நாடு, மற்றும் உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்டுள்ள அலுவலர் இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கைகள் எவற்றிலுமுள்ள மயக்க மருந்துப் பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் அடையாளத்திற்குத் தொடர்பானது என்று கருதிப் பார்க்கக்கூடிய பிற விவரங்கள் தொடர்பான விரிவான விவரங்களைக் கொண்டிருக்கும் மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் பற்றிய விவரப்பட்டியல் ஒன்றைத் தயாரித்தல் வேண்டும், மேலும்—

(அ) அவ்வாறு தயாரிக்கப்பட்ட விவரப்பட்டியலின் சரிநிலை குறித்து உறுதிச்சான்றளிப்பதற்காக, அல்லது

(ஆ) அத்தகைய குற்றவியல் நடுவரின் முன்னிலையில் அத்தகைய மருந்துப் பொருள்களை அல்லது பொருள்களை ஒளிப்படம் எடுத்து, அத்தகைய ஒளிப்படங்களை உண்மையானவை என உறுதிச் சான்றளிப்பதற்காக, அல்லது

(இ) அத்தகைய குற்றவியல் நடுவரின் முன்னிலையில் அத்தகைய மருந்துப் பொருள்கள் அல்லது பொருள்களின் சார்பாற்ற மாதிரிகளை எடுப்பதற்கு அனுமதித்து, அவ்வாறு எடுக்கப்பட்ட மாதிரிகளின் பட்டியலின் சரிநிலைபற்றி உறுதிசான்றளிப்பதற்காக

குற்றவியல் நடுவர் எவருக்கும் விண்ணப்பம் செய்யலாம்.

(3) உட்பிரிவு (2) இன்படி ஒரு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறவிடத்து குற்றவியல் நடுவர், கூடியவிரைவில், விண்ணப்பத்தை அனுமதித்தல் வேண்டும்.

(4) இந்திய சாட்சியச் சட்டம், 1872 அல்லது குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச்சட்டம், 1973இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச்செயலை விசாரணை செய்கிற நீதிமன்றம் ஒவ்வொன்றும், உட்பிரிவு (2)இன்படி எடுக்கப்பட்டு குற்றவியல் நடுவரால் உறுதிச்சான்றளிக்கப்பட்டுள்ள, மயக்க மருந்துப்பொருள்களின் அல்லது மன நிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் விவரப்பட்டியல், ஒளிப்படங்கள் மற்றும் மாதிரிகளின் பட்டியல் எதனையும் அத்தகைய குற்றச்செயலைப் பொறுத்த முதல் நிலைச் சான்றாகக் கொள்ளுதல் வேண்டும். (1/1872) (2/1974)

ஒரு காவல் நிலையத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள ஓர் அலுவலரின் அதிகாரங்களைக் குறித்த சில துறைகளின் அலுவலர்களிடம் இணைவிப்பதற்குள்ள அதிகாரம்.

53. (1) மைய அரசாங்கம், மாநில அரசாங்கத்துடன் கலந்தாய்வு செய்த பின்னர், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்வதற்காக, ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பைக் கொண்ட ஓர் அலுவலரின் அதிகாரங்களை, மைய ஆயத்தீர்வை, மயக்கப் பொருள்கள், சுங்கம், வருவாய், புலனாய்வு அல்லது எல்லைப் பாதுகாப்புப் படையின் அலுவலர் எவரிடமும் அல்லது அத்தகைய அலுவலர்களின் வகையினர் எவர்களிடமும் வழங்கலாம்.

(2) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை வாயிலாக, இந்தச்சட்டத்தின்படியான குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்வதற்காக, ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பைக் கொண்ட ஓர் அலுவலரின் அதிகாரங்களை, மருந்துக் கட்டுப்பாடு, வருவாய் அல்லது ஆயத்தீர்வைத் துறையின் அலுவலர் எவரிடமும் அல்லது அத்தகைய அலுவலர்களின் வகையினர் எவர்களிடமும் வழங்கலாம்.

53. (அ) (1) குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்வதற்காக, பிரிவு 53 இன்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவராலும் நடத்தப்படும் விசாரணை அல்லது நடவடிக்கைகளின்போது, அத்தகைய அலுவலர் முன்பு ஓர் ஆளால் தயாரிக்கப்பட்டு, கையெழுத்திடப்பட்ட ஒரு விவர உரையானது— குறித்த சில சூழ்நிலைகளின் கீழ் விவர உரைகளின் தொடர்புடைமை

(அ) விவர உரையைச் செய்த ஆள் இறந்துபோயிருக்கும் போது, அல்லது கண்டறியப்படமுடியாதபோது, அல்லது சாட்சியம் அளிக்க இயலாததாயிருக்கும்போது, அல்லது எதிர்த் தரப்பினரால் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும்போது, அல்லது நீதிமன்றம் தகுமானதல்லாதது என்று கருதும் வழக்கின் சூழ்நிலைகளின்படி, காலத்தாழ்வு அல்லது செலவு இல்லாமல் அவருடைய வருகையைப்பெற முடியாதபோது, அல்லது

(ஆ) விவர உரையைச் செய்த ஆள் நீதிமன்றத்தின் முன்புள்ள வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படுகிறபோது, மற்றும் வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற் கொண்டு, நீதிமன்றம் அந்த உரையைச்சான்றாக அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதும்போது.

இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்றிற்கான குற்றவழக்கு எதிலும், அதில் அடங்கியுள்ள பொருண்மைகளின் உண்மை இந்த நோக்கத்திற்காகத் தொடர்புடையது ஆகும்.

(2) உட்பிரிவு (1) இன் வகையங்கள், ஒரு நீதிமன்றத்தின் முன் உள்ள ஒரு நடவடிக்கை தொடர்பாகப் பொருந்துவதுபோன்று, ஒரு நீதிமன்றத்தின் முன் உள்ள ஒரு நடவடிக்கை அல்லாத இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளின்படியான நடவடிக்கைகள் எவை தொடர்பாகவும், எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்குப் பொருந்துதல் வேண்டும்.

54. இந்தச் சட்டத்தின்படியான விசாரணைகளில் மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றியும் மெய்ப்பிக்கப்படும் வரையிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்,— கள்ள வாணிகத்திற்கான பொருள்களை வைத்திருப்பது குறித்து துணிபு கொள்ளுதல்.

(அ) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும்,

(ஆ) அவர் பயிரிட்டுள்ள நிலம் எதன்மீதும் வளர்கின்ற கசகசாத்தண்டு, கன்னாபிஸ் செடி அல்லது கோக்கோ செடி எதனையும்,

(இ) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் உற்பத்தி செய்வதற்காகத் தனி வகையில் வடிவமைக்கப்பட்ட கருவி எதனையும் அல்லது தனி வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களின் தொகுதி எதனையும், அல்லது,

(ஈ) மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளை உற்பத்தி செய்வதிலுள்ள செய்முறை எதிலும் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள்கள் எவற்றையும், அல்லது எந்த மூலப்பொருள்களிலிருந்து மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதுவும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதோ அந்த மூலப்பொருள்களில் (பயன்படுத்தப்படாமல்) எஞ்சியிருப்பது எதனையும்,

வைத்திருப்பதற்காகத் தெளிவுறக்காணுமாறு காரணம் கூறத்தவறியுள்ளதைப் பொறுத்து, அத்தியாயம் IV இன்படி ஒரு குற்றச்செயலைச் செய்திருக்கிறார் என்று துணிவு கொள்ளலாம்.

55. ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பைக்கொண்ட ஓர் அலுவலர், குற்றவியல் நடுவர் ஆணையிடும் வரையிலும் அந்தக்காவல் நிலையத்தின் வட்டார வரையிடத்திற்குள் இந்தச் சட்டத்தின்படி பற்றுகை செய்யப்பட்ட மற்றும் அவரிடம் ஒப்படைக்கவேண்டிய பொருள்கள் அனைத்தையும் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, பத்திரமாக பாதுகாப்பில் வைத்திருத்தல் வேண்டும். மேலும், பற்றுகை செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பொருள்களைக் காவல் துறை பொறுப்பில் எடுத்துக் கொள்ளுதல்.

காவல் நிலையத்திற்கு அத்தகைய பொருள்களை எடுத்துவரும் அல்லது அந்த நோக்கத்திற்கான பணிக்காக அனுப்பப்பட்ட அலுவலர் எவரையும், அத்தகைய பொருள்களில் தம்முடைய முத்திரையை பொருத்துவதற்கு அல்லது அவற்றின் மாதிரிகளை எடுப்பதற்கும் அவற்றிலிருந்து மாதிரிகளை எடுப்பதற்கும் அனுமதிக்கலாம், மேலும் அவ்வாறு எடுக்கப்பட்ட மாதிரிகள் அனைத்தும், காவல் நிலையத்தின் பொறுப்பைக்கொண்ட அலுவலரின் முத்திரைகொண்டு முத்திரையிடப்படுதலும் வேண்டும்.

ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதற்கு அலுவலர்களுக்குள்ள கடமைப் பாடு.

56. பிரிவு 42-ல் சொல்லப்பட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் அனைவரும், கொடுக்கப்பட்ட அறிவிப்பு அல்லது செய்யப்பட்ட வேண்டுகோளின் பேரில், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்குச் சட்டப்படி கடமைப்பட்டவர்கள் ஆவர்.

கைது செய்தல் மற்றும் பற்றுகை செய்தல் பற்றிய அறிக்கை.

57. ஆள் எவரும், இந்தச் சட்டத்தின்படி கைது அல்லது பற்றுகை எதனையும் செய்கிறபோதெல்லாம், அவர் அத்தகைய கைது அல்லது பற்றுகை செய்த பின்பு, அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள், தனக்கு நேரடியாக மேல் நிலையிலுள்ள அலுவலருக்கு அத்தகைய கைது அல்லது பற்றுகையின் விவரங்கள் அனைத்தையும் பற்றி முழுமையாக அறிக்கை செய்தல் வேண்டும்.

தொந்தரவு தரக் கூடிய நுழைவு, சோதனை பற்றுகை அலலது கைது செய்வதற் குத் தண்டனை.

58. (1) (அ) ஐயங் கொள்வதற்குத் தகுமான காரணம் இல்லாமல் கட்டடம், வண்டி அல்லது இடம் எதிலும் நுழைகிற அல்லது சோதனையிடுகிற அல்லது நுழையுமாறோ, சோதனையிடுமாறோ செய்கிற.-

(ஆ) இந்தச் சட்டத்தின்படி பறிமுதல் செய்யப்படுவதற்கு உள்ளாகத்தக்க மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள் அல்லது பிற பொருள் எதனையும் பற்றுகை செய்கின்ற அல்லது சோதனை செய்கின்ற பாவனையிலோ, அல்லது பிரிவு 42, பிரிவு 43 அல்லது பிரிவு 44 இன்படி பற்றுகை செய்யப்படுவதற்கு உள்ளாக்கத்தக்க ஆவணம் அல்லது பிற பொருள் எதனையும் பற்றுகை செய்கின்ற பாவனையிலோ தொந்தரவு செய்கின்ற வகையிலும் தேவையில்லாமலும் ஆள் எவரின் சொத்தினையும் பற்றுகை செய்கிற, அல்லது

(இ) ஆள் எவரையும் தொந்தரவு செய்து தேவையில்லாமல் இருத்தி வைக்கிற, சோதனையிடுகிற அல்லது கைது செய்கிற,

பிரிவு 42, அல்லது பிரிவு 43 அல்லது பிரிவு 44 இன்படி அதிகாரமளிக்கப்பெற்ற ஆள் எவரும், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கலாம் பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2) வேண்டுமென்றேயும் வன்மத்துடனும் பொய்யானத் தகவலைக் கொடுத்து, அதனால் இந்தச் சட்டத்தின்படி கைது அல்லது சோதனை செய்யப்படுமாறு செய்விக்கிற ஆள் எவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை அல்லது பணத் தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

அலுவலர் கடமையில் தவறுதல் அல்லது இந்தச் சட்டத்தின் வகையங்களை மீறுவதில் அவருடைய மறைமுக ஆதரவு.

59. (1) இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ கடமை எதுவும் சுமத்தப்பட்டுள்ளவரும், தம்முடைய அலுவலகக் கடமைகளைச் செய்வதை நிறுத்தி விடுகிற அல்லது செய்ய மறுத்து விடுகிற அல்லது கடமைகளைச் செய்வதினின்று பின்வாங்குகிற அலுவலர் எவரும், தமக்கு மேல்நிலை அலுவலரிடமிருந்து வெளிப்படையாக எழுத்து வடிவிலான அனுமதியைப் பெற்றிருந்தாலன்றி, அல்லது அவ்வாறு செய்வதற்குச் சட்டப்படியான பிற காரணம் இருந்தாலன்றி, ஓராண்டுவரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை அல்லது பணத் தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(2) இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ கடமை எதுவும் சுமத்தப்பட்டுள்ள, அல்லது

(அ) கெட்ட பழக்கத்திற்கு அடிமையான எவருக்கும், அல்லது

(ஆ) இந்தச் சட்டத்தின்படியான ஒரு குற்றச்செயலைச் செய்ததாகக் குற்றம் சார்த்தப்பட்டிருக்கிற பிற ஆள் எவருக்கும்

பாதுகாப்பினைக் கொடுத்துள்ள மற்றும் இந்தச் சட்டத்தின் வகையம் எதனையும் அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் மீறுவதற்கு வேண்டுமென்றே உதவுகிற அல்லது மறைமுக ஆதரவளிக்கிற அலுவலர் எவரும், பத்தாண்டுகளுக்குக் குறையாதிருக்கும், ஆனால் இருபது ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவர். மேலும் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைவானதாய் இராத ஆனால் இரண்டு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத் தண்டத்திற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்.**—இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக "அலுவலர்" என்ற சொல், கெட்ட பழக்கத்திற்கு அடிமையானதினின்று விடுவிக்கும் சிகிச்சைக்கு வகை செய்வதற்காக பிரிவு 64 (அ) வின்படி அரசாங்கத்தால் அல்லது ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பினால் பேணிவரப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்ட ஒரு மருத்துவமனையில் அல்லது நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள ஆள் எவரையும் உள்ளடக்கும்.

(3) மைய அரசாங்கத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கத்தின் முந்திய ஒப்பளிப்புடன் எழுத்து வடிவில் செய்யப்பட்ட ஒரு முறையீட்டின் பேரில் தவிர, உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) இன் படியான குற்றச்செயல் எதனையும், நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

60. அத்தியாயம் IV இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதுவும் செய்யப்படும்போதெல்லாம், எவற்றைப் பொறுத்து அல்லது எவற்றின் வாயிலாக அத்தகைய குற்றச்செயல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த மயக்க மருந்துப்பொருள், மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள், கசகசாத்தண்டு, கோக்கா செடி, கன்னாபீஸ் செடி, மூலப்பொருள்கள், கருவி, கலன்கள் ஆகியவை பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கவை ஆகும். சட்டத்தால் விலக்கப்பட்ட மருந்துப் பொருள்கள், பொருட்கள், செடிகள், பண்டங்கள், வண்டிகள் ஆகியவை பறிமுதலுக்கு உள்ளாதல்.

(2) உட்பிரிவு (1) இன்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்க மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள், மூலப்பொருள்கள், கருவி அல்லது கலன்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்ட கொள்கலன்கள், சிப்பங்கள், பொதியுறைகள், அத்தகைய கொள்கலன்கள், அல்லது சிப்பங்களிலுள்ள பிற உட்பொருள்கள் ஆகியவற்றோடு அல்லது ஆகியவற்றுடன் கூடுதலாக சட்டப்படி தயாரிக்கப்பட்ட, நாடுகளுக்கிடையே இறக்குமதி செய்யப்பட்ட, நாடுகளுக்கிடையே ஏற்றுமதி செய்யப்பட்ட இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட, கொண்டுசெல்லப்பட்ட, உற்பத்தி செய்யப்பட்ட, வைத்திருக்கப்பட்ட, வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதுவும், அதே போன்று பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கது ஆகும்.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) இன்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்க மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் அல்லது பண்டம் எதனையும் எடுத்துச்செல்லும் விலங்கு அல்லது வண்டி ஒன்றின் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரரான தமக்கு அல்லது தம்முடைய முகவர் எவரேனும் இருப்பின், அவருக்கு மற்றும் அந்த விலங்கு அல்லது வண்டியைப் பொறுப்பில் கொண்ட ஆளுக்குத் தெரியாமலோ அல்லது அவருடைய மறைமுக ஆதரவின்றியோ அவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்றும், அவர்களில் ஒவ்வொருவரும், அவ்வாறு பயன்படுத்துவதற்கு எதிராகத் தகுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்திருக்கிறார்கள் என்றும் மெய்ப்பித்தாலன்றி, பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கது ஆகும்.

சட்டத்தால் விலக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் அல்லது பொருள்களை மறைப்பதற்ாகப் பயன்படுத்தப்படும் சரக்குகளைப் பறிமுதல் செய்தல்.

61. இந்தச் சட்டத்தின்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கதான மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் மறைப்பதற்காக பயன்படுத்தப்படும் சரக்குகள் எவையும்கூட பறிமுதலுக்கு உள்ளாக்கத்தக்கவை ஆகும்.

**விளக்கம்.**—இந்தப் பிரிவில் "பொருள்கள்" என்பது, கொண்டு செல்வதற்கான வண்டியை உள்ளடக்காது.

சட்டத்தால் விலக்கப்பட்ட மருந்துப்பொருள் அல்லது பொருள்களின் விற்றுமுதல்களைப் பறிமுதல் செய்தல்.

62. மயக்க மருந்துப்பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதுவும், இந்தச் சட்டத்தின்படி பறிமுதலுக்கு உள்ளாக்கத்தக்கது என்று தெரிந்து கொண்ட அல்லது நம்புவதற்குக் காரணம் பெற்றிருக்கும் ஓர் ஆளால் அந்த மருந்துப்பொருள் அல்லது பொருள்கள் விற்கப்படுமிடத்து, அவற்றின் விற்றுமுதல்கள் கூட பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கது ஆகும்.

பறிமுதல்களைச் செய்வதில் நெறிமுறை

63. (1) இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களை விசாரணை செய்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பெற்றிருந்தாலும் அல்லது விடுதலையளிக்கப்பெற்றிருந்தாலும் அல்லது விடுவிக்கப்பெற்றிருந்தாலும், நீதிமன்றமானது, இந்தச் சட்டத்தின்படி பற்றுகை செய்யப்பட்ட பண்டம் அல்லது பொருள் எதுவும், பிரிவு 60 அல்லது பிரிவு 61 அல்லது பிரிவு 62 இன்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கதா இல்லையா என்பதை முடிவுசெய்தல் வேண்டும், மேலும் அந்தப் பண்டம் அவ்வாறு உள்ளாகத்தக்கது என்று அது முடிவு செய்யுமாயின், அது அங்ஙனமே பறிமுதல் செய்யப்பட ஆணையிடலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி பற்றுகை செய்யப்பட்ட பண்டம் அல்லது பொருள் எதுவும், பிரிவு 60 அல்லது பிரிவு 61 அல்லது பிரிவு 62 இன்படி பறிமுதலுக்கு உள்ளாகத்தக்கதாய் காணப்பட்டு, ஆனால் அது தொடர்பான குற்றச்செயலைச் செய்த ஆள் தெரியாதவிடத்து அல்லது கண்டறியப்படமுடியாதவிடத்து, நீதிமன்றம் அத்தகைய கடப்பாட்டைக் குறித்து விசாரித்து முடிவு செய்யலாம்; மேலும் அங்ஙனமே பறிமுதலுக்கு ஆணையிடலாம்:

**வரம்புரையாக:** ஒரு பண்டம் அல்லது பொருளைப் பறிமுதல் செய்வதற்குரிய ஆணை எதுவும், பற்றுகைத் தேதியிலிருந்து ஒரு மாதம் முடிவடையும் வரையில், அல்லது அதற்கு உரிமை எதனையும் கோரும் ஆளையும் தன்னுடைய கோரிக்கையை பொறுத்து அவர் முன்னிடும் சாட்சியம் எதுவும் இருப்பின் அதனையும், விசாரிக்காமல் பிறப்பிக்கப்படுதல் ஆகாது;

**மேலும் வரம்புரையாக:** மயக்க மருந்துப்பொருள், மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள், கசகசாத்தண்டு, கோக்காசெடி அல்லது கன்னாபிஸ்செடி அல்லாத பிற பண்டம் அல்லது பொருள் எதுவும், விரைவானதும் இயல்பானதுமான அழிவுக்கு உள்ளாகத்தக்கதாக இருப்பின், அல்லது அதனை விற்பது அதன் சொந்தக்காரருக்கு நன்மை பயக்கும் என்று நீதிமன்றம் கருதுமாயின், அது அதனை விற்குமாறு, எந்த சமயத்திலும், பணிக்கலாம்; மேலும் இந்த உட்பிரிவின் வகையங்கள் அந்த விற்பனையின் நிகர விற்றுமுதல்களுக்கே, எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி பறிமுதல் செய்யப்பட்டுள்ள சொத்திற்கு உரிமை எதுவும் கோருகிற தண்டனைத் தீர்ப்பளிக்கப்படாத ஆள் எவரும், பறிமுதல் ஆணைக்கு எதிராக, அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

64. (1) மைய அரசாங்கமோ, மாநில அரசாங்கமோ இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் மீறுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ளதாக அல்லது உடனொத்து இயங்குவதாகத் தோன்றுகிற ஆள் ஒருவரின் சாட்சியத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், நேர்வுக்கேற்ப, இந்தச் சட்டத்தின்படியான அல்லது இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின்படியான அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற மையச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் ஒன்றின்படியாக, குற்றச்செயல் எதற்காகவும் வழக்குத் தொடுப்பதினின்று அத்தகைய ஆளுக்கு, அத்தகைய மீறுகை தொடர்பான சூழ்நிலைகள் அனைத்தையும் முழுவதுமாகவும் உண்மையாகவும் அவர் வெளிப்படுத்துவார் என்ற வரைக்கட்டின் பேரில், தனி விலக்குரிமை அளிப்பது தேவையானதாக அல்லது உகந்ததாக இருக்கிறது என்று கருதுமாயின் (அத்தகைய கருத்திற்கான காரணங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்யப்படவேண்டும்) அவ்வாறு செய்யலாம்.

வழக்குத் தொடுப்பதினின்று விலக்குரிமை அளிப்பதற்குள்ள அதிகாரம்.

(2) தொடர்புடைய ஆளுக்கு விலக்குரிமை அளிக்கப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதானது, அந்த விலக்குரிமை எந்த அளவுக்கு அளிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு, எந்தக் குற்றச்செயலைப் பொறுத்து அது அளிக்கப்படுகிறதோ அந்தக் குற்றச்செயல் எதற்காகவும் வழக்குத் தொடுக்கப்படுவதினின்று அவரை விலக்குரிமை பெற்றவராக ஆக்கும்.

(3) மைய அரசாங்கத்திற்கோ, நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கத்திற்கோ இந்தப் பிரிவின்படி விலக்குரிமை அளிக்கப்பட்டுள்ள ஆள் எவரும், எந்த வரைக் கட்டுகளின்பேரில் விலக்குரிமை அளிக்கப்பட்டதோ அந்த வரைக்கட்டுகளுக்கு இணங்கி நடக்கவில்லை அல்லது வேண்டுமென்றே எதனையோ மறைக்கிறார் அல்லது பொய்யான சாட்சியத்தை அளிக்கிறார் என்று தோன்றுமாயின், மைய அரசாங்கம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கம், அந்தப்படிக்குக் கண்டறிந்ததைப் பதிவு செய்யலாம். மேலும் அதன்மேல் விலக்குரிமை அளித்ததை விலக்கிக்கொண்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆள், எந்தக் குற்றச்செயலைப் பொறுத்து விலக்குரிமை அளிக்கப்பட்டாரோ அந்தக் குற்றச்செயலுக்காக அல்லது அதே பொருட்பாடு தொடர்பாக அவர் செய்திருப்பதாகத் தோன்றுகிற பிற குற்றச்செயல் எதற்காகவும் விசாரணை செய்யப்படலாம்.

64 (அ) .அரசாங்கத்தினால் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பினால் பேணிவரப்படும் அல்லது ஏற்பளிக்கப்பட்ட ஒரு மருத்துவமனையில் நச்சினின்று விடுபடுவதற்காக அல்லது கெட்ட பழக்கத்தினின்று விடுபடுவதற்காக, மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதற்காக தாமே விரும்பி முன்வந்து, அத்தகைய சிகிச்சையை மேற்கொள்பவரான பிரிவுகள் 15 முதல் 25 (இரண்டு உள்ளடங்கலாக) வரையுள்ளவற்றின் அல்லது பிரிவு 27(அ) வின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதுவும் செய்ததாகக் குற்றஞ்சார்த்தப்படாதவரான மற்றும் கெட்ட பழக்கத்திற்கு அடிமையான எவரும், அவருடைய வாழ்நாளில் ஒருமுறைகூட பிரிவு 27 இன்படி வழக்குத் தொடுக்கப்படுவதற்கு உள்ளதால் ஆகாது:

சிகிச்சை பெறுவதற்குத் தாமே முன் வருபவர்களான கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கு விலக்குரிமை.

**வரம்புரையாக:** கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர், நச்சருந்துவதினின்று விடுபடுவதற்காக அல்லது கெட்ட பழக்கத்தினின்று விடுபடுவதற்காக முழுமையான சிகிச்சையை மேற்கொள்ளவில்லையாயின், வழக்குத் தொடுக்கப்படுவதற்காக சொல்லப்பட்ட விலக்குரிமையானது, திரும்பப்பெற்றுக் கொள்ளப்படலாம்.

65. [பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்களையும் வெகுமதிகளையும், தீர்வு செய்வதை ஒழுங்குறுத்தும் விதிகளைச் செய்வதற்குள்ள அதிகாரம்] 2/1989 சட்டத்தால் விட்டுவிடப்பட்டது.

66. ஆவணம் எதுவும்—

(i) இந்தச் சட்டத்தின்படி அல்லது பிற சட்டம் ஒன்றின்படி ஆள் எவராலும் முன்னிலைப்படுத்தப்பட்டு அல்லது அனுப்பப்பட்டுள்ளவிடத்து, அல்லது ஆள் ஒருவரின் பாதுகாப்பு

குறித்த சில நேர்வுகளில் ஆவணங்கள் குறித்து துணிபு கொள்ளுதல்.

அல்லது கட்டுப்பாட்டிலிருந்து இவ்விரண்டில் ஒரு நேர்வில், பற்றுகை செய்யப்பட்டுள்ளவிடத்து, அல்லது

(ii) ஓர் ஆளால் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் புலனாய்வு செய்கையில் (மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் அதிகாரி அல்லது ஆளால் மற்றும் அத்தகைய முறையில் உரியவாறு உறுதியொப்பமிடப்பட்டு) இந்தியாவில் வெளியேயுள்ள இடம் எதிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளவிடத்து

மற்றும் அத்தகைய ஆவணம், இந்தச் சட்டத்தின்படி தொடுக்கப்பட்ட வழக்கு எதிலும், அவருக்கு எதிராகவோ அவருக்கு அவரோடு கூட்டாக விசாரணை செய்யப்படுகிற பிற ஆள் எவருக்கும் எதிராகவோ கொடுக்கப்படும் சாட்சியத்தில் அத்தகைய ஆவணத்தைக் கொடுக்க வனையுமிடத்து, நீதிமன்றம்,—

(அ) மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, குறிப்பிட்ட ஆள் ஒருவரின் கையெழுத்தில் இருப்பதாகப் புலப்படுகிற அல்லது குறிப்பிட்ட ஆள் ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ளதாக அல்லது அவருடைய கையெழுத்தில் இருப்பதாக நீதிமன்றம் தகுமானதாக துணிவு கொள்ளும் அத்தகைய ஆவணத்திலுள்ள கையெழுத்தும் பிற பகுதி ஒவ்வொன்றும், அந்த ஆளின் கையெழுத்தில் இருக்கிறது என்றும் எழுதிக்கொடுக்கப்பட்ட அல்லது உறுதியொப்பமிடப்பட்ட ஓர் ஆவணமாகும் நேர்வில், எந்த ஆளால் அவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அல்லது உறுதியொப்பமிடப்பட்டுள்ளதாகப் புலப்படுகிறதோ அந்த ஆளால் எழுதிக்கொடுக்கப்பட்டது அல்லது உறுதியொப்பமிடப்பட்டது என்றும் துணிபு கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) சாட்சியத்தில் கொடுக்கப்படும் ஆவணம் உரியவாறு முத்திரையிடப் படாதிருந்தபோதிலும், அத்தகைய ஆவணம் சாட்சியத்தில் பிறவாறு ஏற்றுக் கொள்ளத்தக்கதாயின் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தகவல் முதலான வற்றைத் தருவிப்பதற்குள்ள அதிகாரம்.

*67.* மைய அரசாங்கத்தால் அல்லது ஒரு மாநில அரசாங்கத்தால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரிவு 40 இல் சுட்டப்பட்ட அலுவலர் எவரும், இந்தச் சட்டத்தின் வகையம் எதன் மீறுகை தொடர்பாகவும் விசாரணை எதுவும் நடக்கும்போது,—

(அ) இந்தச் சட்டத்தின் வகையங்கள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணையின் மீறுகை எதுவும் நிகழ்ந்திருக்கிறதா என்று தாம் தெளிவுறக் காண்பதற்காக ஆள் எவரிடமிருந்தும் தகவலைத் தருவிக்கலாம்;

(ஆ) விசாரணைக்குப் பயன்படுவதான அல்லது தொடர்புடையதான ஆவணம் அல்லது பொருள் எதனையும் முன்னிடுமாறு அல்லது ஒப்படைக்குமாறு ஆள் எவரையும் வேண்டுறுத்தலாம்;

(இ) வழக்கின் பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் அறிந்திருக்கும் ஆள் எவரையும் விசாரிக்கலாம்.

குற்றச் செயல்கள் செய்வது குறித்த தகவல்.

*68.* இந்தச் சட்டத்தின் வகையம் எதன்படியும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியும் தம்மிடம் உற்றடைந்துள்ள அதிகாரங்களைச் செலுத்தி செயலுறுகின்ற அலுவலர் எவரும், குற்றச்செயல் எதுவும் செய்வது குறித்து அவர் தகவல் எதனையும் எங்கிருந்து பெற்றார் என்று கூறுமாறு கட்டாயப்படுத்தப்படுதல் ஆகாது.

## அத்தியாயம் V(அ)

## கள்ள வாணிகத்திலிருந்து பெறப்பட்ட அல்லது அதில் பயன்படுத்தப்பட்ட சொத்தினைத் தண்டமாக இழத்தல்.

68 (அ). (1) இந்த அத்தியாயத்தின் வகையங்கள், உட்பிரிவு (2)இல் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு மட்டுமே பொருந்தும். பொருந்துகை.

(2) உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்ட ஆட்கள், பின்வருபவர்களாவர்:—

(அ) ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்து, இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலுக்காகத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும்;

(ஆ) இந்தியாவிற்கு வெளியே குற்றவியல் அதிகாரவரம்பினை உடைய ஒரு தகுதிறமுள்ள நீதிமன்றத்தால் அதே போன்றதொரு குற்றச்செயலுக்காகத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும்;

(இ) மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களைக் கள்ள வாணிகம் செய்வதைத் தடை செய்தல் சட்டம், 1988 இன்படி அல்லது ஜம்மு-காஷ்மீர் மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களைக் கள்ள வாணிகம் செய்வதைத் தடை செய்தல் சட்டம், 1988 இன்படி எவரைப் பொறுத்து இருத்திவைப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஆள் ஒவ்வொருவரும்:

**வரம்புரையாக:** அத்தகைய இருத்திவைப்பு ஆணை, சொல்லப்பட்ட சட்டங்களின்படி அமைக்கப்பட்ட அறிவுரைக் குழுவின் அறிக்கையின்பேரில் நீக்கம் செய்யப்படாதிருக்க வேண்டும் அல்லது அத்தகைய இருத்திவைப்பு ஆணை, தகுதிறமுள்ள அதிகாரமுடைய ஒரு நீதிமன்றத்தினால் முறித்தறவு செய்யப்படாதிருக்க வேண்டும்;

(ஈ) கூறு (அ) அல்லது கூறு (ஆ) அல்லது கூறு (இ) வில் சுட்டப்பட்ட ஆளின் உறவினராயிருக்கும் ஆள் ஒவ்வொருவரும்;

(உ) கூறு (அ) அல்லது கூறு (ஆ) அல்லது கூறு (இ) வில் சுட்டப்பட்டுள்ள ஆளின் பங்காளி ஒவ்வொருவரும்;

(ஊ) கூறு (அ) அல்லது கூறு (ஆ) அல்லது கூறு (இ) இல் சுட்டப்பட்டுள்ள ஓர் ஆளால், முன்னர் எந்தச் சமயத்திலும் வைத்திருக்கப்பட்ட சொத்து எத்தனையும் தற்போது வைத்திருப்பவர் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய ஆளுக்குப் பின்னரும் இப்போது வைத்திருப்பவருக்கு முன்னரும், அத்தகைய சொத்தினை வைத்திருக்கும் எவரொருவரும், போதுமான மறுபயனுக்காக நல்லெண்ணத்தில் மாற்றலுக்குரியவராயிருக்கிறார் அல்லது இருந்தார் என்றாலன்றி, அத்தகைய சொத்தினை (இந்தக் கூறில் இதன்பின்பு "தற்போது வைத்திருப்பவர்" என்று சுட்டப்படும்) வைத்திருப்பவர் எவரும்;

68 (ஆ). இந்த அத்தியாயத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

(அ) "மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்" என்பது, தண்டமாக இழக்கப்பட்ட சொத்திற்காக, பிரிவு 68 (ங) இன்படி அமைக்கப்பட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் என்று பொருள்படும்;

(ஆ) இந்த அத்தியாயத்தின்படி எந்த ஆளுடைய சொத்து தண்ட இழப்பாக்கப்படுவதற்கு உள்ளாகத்தக்கதோ அந்த ஆள் தொடர்பாக "பங்காளி" என்பது,—

(i) அத்தகைய ஆளின் (புற மனைகள் உள்ளடங்கலாக்) குடியிருப்பு வளாகங்களில் குடியிருந்து வந்த அல்லது குடியிருக்கிற தனியாள் எவரும் என்று பொருள்படும்;

(ii) அத்தகைய ஆளின் அலுவல்களை மேலாண்மை செய்துவந்த அல்லது செய்துவருகிற அல்லது கணக்குகளை வைத்துவந்த அல்லது வைத்து வருகிற தனியாள் எவரும் என்று பொருள்படும்;

(iii) நிறுமங்கள் சட்டம், 1956 இன் பொருளின்படி, எதில் அத்தகைய ஆள் ஓர் உறுப்பினராக, கூட்டாளியாக அல்லது இயக்குநராக இருந்து வந்தாரோ அல்லது இருக்கிறாரோ அந்த தனியாட்களின் கழகம், தனியாட்களின் குழு, கூட்டாண்மை நிறுவகம் அல்லது தனியார் நிறுமம் எதுவும் என்று பொருள்படும்;

(iv) அத்தகைய ஆள், உட்கூறு (iii) இல் சுட்டப்பட்ட, ஆட்களின் கழகம், தனியாட்களின் குழு, கூட்டாண்மை நிறுவகம் அல்லது தனியார் நிறுமத்தின் ஓர் உறுப்பினராக, கூட்டாளியாக அல்லது இயக்குநராக இருந்து வந்து அல்லது இருக்கிற எந்தச் சமயத்திலும், அந்தக் கழகம், குழுமம், கூட்டாண்மை நிறுவகம் அல்லது தனியார் நிறுமத்தின் ஓர் உறுப்பினராக, கூட்டாளியாக அல்லது இயக்குநராக இருந்துவந்த அல்லது இருக்கிற தனி ஆள் எவரும் என்று பொருள்படும்;

(v) உட்கூறு (iii) இல் சுட்டப்பட்ட ஆட்களின் கழகம், தனியாட்களின் குழு, கூட்டாண்மை நிறுவகம் அல்லது தனியார் நிறுமம் ஒன்றின் அலுவல்களை மேலாண்மை செய்து வந்த அல்லது செய்துவருகிற அல்லது கணக்குகளை வைத்துவந்த அல்லது வைத்துவருகிற ஆள் எவரும் என்று பொருள்படும்;

(vi) (1) பொறுப்புக் கட்டளை ஒன்று அத்தகைய ஆளால் உருவாக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது

(2) அத்தகைய ஆளால் பொறுப்புக்கட்டளைத் தொகைக்குப் பங்களிக்கப்பட்ட சொத்திருப்புகளின் மதிப்பு (முன்னதாக அவரால் பங்களிக்கப்பட்ட சொத்திருப்புகள், எவையேனுமிருப்பின் அவற்றின் மதிப்பு உள்ளடங்கலாக) பங்களிக்கப்பட்ட தேதியன்று அந்தப் பொறுப்புக் கட்டளையின் சொத்திருப்புகளின் மதிப்பில் இருபது விழுக்காட்டிற்குக் குறையாததென அந்தத் தேதியன்று கணக்கிடப்படுமிடத்து

அப்பொறுப்புக் கட்டளையின் பொறுப்புக் கட்டளையர் என்று பொருள்படும்.

(vii) தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, காரணங்களைப் பதிவுசெய்து, அத்தகைய ஆளின் சொத்துக்கள் எவையும், பிற ஆள் எவராலும் அவர் சார்பாக வைத்துவரப்படுமிடத்து, அத்தகைய பிற ஆள் என்று பொருள்படும்;

(இ) "தகுதிறமுள்ள அதிகாரி" என்பது, பிரிவு 68 (இ) இன்படி மைய அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதன் ஓர் அலுவலர் என்று பொருள்படும்;

(ஈ) "மறைத்துவைத்தல்" என்பது, சொத்தின் தன்மை, மூலம், அமைப்பு, நகர்த்திச் செல்லுதல் அல்லது உடைமையுரிமையினை மறைத்து வைத்தல் அல்லது மாற்றுருவிலமைத்தல் என்று பொருள்படும், மேலும் மின்னணுவியல் அனுப்புகை வாயிலாகவோ பிற வழிகள் எவற்றின் வாயிலாகவோ, அத்தகைய சொத்தினை நகர்த்திச் செல்லுதல் அல்லது மாற்றுதலை உள்ளடக்கும்;

(உ) "செயலுறச் செய்தல்" என்பது, பிரிவு 68 (ஊ) வின்படி வழங்கப்பட்ட ஓர் ஆணை வாயிலாக சொத்தினை மாற்றல் செய்தலை, மாற்றுவதை, அமைப்பதை, நகர்த்திச் செல்வதை தற்காலிகமாகத் தடைசெய்தல் என்று பொருள்படும்;

(ஊ) "அடையாளங் காட்டுதல்" என்பது, அந்தச் சொத்து கள்ள வாணிகத்திலிருந்து பெறப்பட்டது அல்லது பயன்படுத்தப்பட்டது என்ற மெய்ப்பிப்பினை நிறுவுதல் என்று பொருள்படும்;

(எ) இந்த அத்தியாயம் பொருந்துகின்ற ஆள் ஒருவர் தொடர்பாக, "சட்ட முரணாக முயன்று பெறப்பட்ட சொத்து" என்பது,—

(i) இந்த அத்தியாயத்தின் தொடக்க நிலைக்கு முன்போ பின்போ கள்ள வாணிகத்திலிருந்து எடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட அல்லது அதற்குச் சார்த்தத்தக்க வருமானம், ஈட்டுகைகள் அல்லது சொத்திருப்புகள் எவற்றிலிருந்தும் அல்லது எவற்றின் வாயிலாகவும், முழுமையாகவோ பகுதியாகவோ அத்தகைய ஆளால் முயன்று பெறப்பட்ட சொத்து என்று பொருள்படும்; அல்லது.

(ii) இந்த அத்தியாயத்தின் தொடக்க நிலைக்கு முன்போ, பின்போ, மறுபயனுக்காக அல்லது உட்கூறு (I)ல் சுட்டப்பட்ட சொத்து எதற்கும், முழுவதுமாகவோ பகுதியாகவோ கண்டறியத்தக்க வழிகள் எவற்றின் வாயிலாகவும் அத்தகைய ஆளால் முயன்று பெறப்பட்ட சொத்து எதுவும் அல்லது அத்தகைய சொத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் அல்லது ஈட்டம் என்று பொருள்படும். மேலும்—

(அ) அத்தகைய ஆளால் வைத்திருக்கப்படும் எந்தச் சொத்து, அதனை முன்னதாக வைத்திருந்தவர் எவர் தொடர்பாகவும், முன்னதாக வைத்திருந்தவர் அதனை வைத்திருப்பது அற்றுப் போகவில்லையாயின், அல்லது அவ்வாறு முன்னர் வைத்திருந்தவருக்குப் பின்பு எந்தச் சமயத்திலும் சொத்தினை வைத்திருந்த பிற ஆள் எவரும் அல்லது அவ்வாறு வைத்திருந்தவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களாயிருக்குமிடத்து அவ்வாறு முன்னதாக வைத்திருந்தவர்களின் கடைசியானவர், போதுமான மறுபயனுக்காக நல்லெண்ணத்துடன் மாற்றம் பெற்றிருந்தலன்றி, இந்தக் கூறின்படி சட்ட முரணாகப் பெறப்பட்ட சொத்து எதனையும்,

(ஆ) இந்த அத்தியாயத்தின் தொடக்கத்திற்கு முன்போ, பின்போ மறுபயனுக்காக அல்லது இனம் (அ) வின்கீழ் வரும் சொத்து எதனையும், முழுமையாகவோ பகுதியாகவோ கண்டறியத்தக்க வழிகள் எவற்றாலும் அத்தகைய ஆளால் முயன்று பெறப்பட்ட சொத்து எதனையும்

உள்ளடக்கும்.

(ஏ) "சொத்து" என்பது, பருப்பொருளாகவோ நுண்பொருளாகவோ அசைவியல் பொருளாகவோ, நிலையியல் பொருளாகவோ, தொட்டுணரத்தக்கதாகவோ, தொட்டுணர இயலாததாகவோ உள்ள எல்லா விவரிப்பு ஒவ்வொன்றினையுமுடைய சொத்து மற்றும் சொத்திருப்புகள், கள்ள வாணிகத்திலிருந்து பெறப்பட்ட அல்லது அதில் பயன்படுத்தப்பட்ட அத்தகைய சொத்து அல்லது சொத்திருப்புகளுக்கான உரிமைமூலத்திற்கு அல்லது அதிலுள்ள உரித்தத்திற்கு சான்றாக இருக்கும் ஆவணங்கள் மற்றும் முறையாவணங்கள் என்று பொருள்படும்;

(ஐ) "சொந்தக்காரர்" என்பது—

(1) அந்த ஆளின் வாழ்க்கைத் துணை,

(2) அந்த ஆளின் உடன்பிறந்தவன் அல்லது உடன்பிறந்தவள்,

(3) அந்த ஆளுடைய வாழ்க்கைத் துணையின் உடன் பிறந்தவன் அல்லது உடன்பிறந்தவள்,

(4) அந்த ஆளின் நேர்வழிச் சந்ததி அல்லது வழித்தோன்றல்,

(5) அந்த ஆளுடைய வாழ்க்கைத் துணையின் நேர்வழிச் சந்ததி அல்லது வழித்தோன்றல்,

(6) உட்கூறு (2), உட்கூறு (3), உட்கூறு (4), அல்லது உட்கூறு (5) இல் சுட்டப்பட்ட ஓர் ஆளின் வாழ்க்கைத் துணை,

(7) உட்கூறு (2) அல்லது உட்கூறு (3) இல் சுட்டப்பட்ட ஓர் ஆளின் நேர்வழிச் சந்ததி எவரும்

என்று பொருள்படும்.

(ஓ) "கண்டறிதல்" என்பது, சொத்தின் தன்மை, மூலம், அமைப்பு, அதனை நகர்த்திச் செல்லுதல், உரிமைமூலம் அல்லது உடைமையுரிமையைத் தீர்மானித்தல் என்று பொருள்படும்;

(ஔ) "பொறுப்புக் கட்டளை" என்பது, பிற சட்டமுறையான கடமைப்பாடு எதனையும் உள்ளடக்கும்.

சட்ட முரணாக முயன்று பெற்ற சொத்தினை வைத்திருப்பதற்குத் தடை.

68 (இ). (1) இந்த அத்தியாயத்தின் தொடக்க நிலையிலிருந்து, இந்த அத்தியாயம் பொருந்துகிற ஆள் எவரும், தாமாகவோ, தம் சார்பில் பிற ஆள் எவர் மூலமாகவோ, சட்டமுரணாக முயன்று பெற்ற சொத்து எதனையும் வைத்திருப்பது சட்டமுறையானது ஆகாது.

(2) உட்பிரிவு (1) இன் வகையங்களை மீறி ஆள் எவரும், சட்டமுரணாக முயன்று பெற்ற சொத்து எதனையும் வைத்திருக்குமிடத்து, அத்தகைய சொத்தானது, இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்கிணங்க மைய அரசாங்கத்தால் தண்ட இழப்பாக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டம் பொருந்துகிற ஓர் ஆள், கள்ள வாணிகம் தொடர்பான ஒரு குற்றச்செயல் செய்ததாகக் குற்றம் சார்த்தப்பட்ட தேதியிலிருந்து, ஆறு ஆண்டுக் கால அளவிற்கு முன்பு அவரால் சொத்து எதுவும் முயன்று பெறப்பட்டிருக்குமாயின், அத்தகைய சொத்து இந்த அத்தியாயத்தின்படி தண்ட இழப்பாக்கப்படுதல் ஆகாது.

தகுதிறமுள்ள அதிகாரி.

68 (ஈ). (1) மைய அரசாங்கம், இந்த அத்தியாயத்தின்படியான தகுதிறமுள்ள அதிகார அமைப்பின் செயற்பணிகளைப் புரிவதற்காக, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணை வாயிலாக, சுங்கத் துறை ஆட்சியர் அல்லது ஆயத் துறை ஆட்சியர் அல்லது வருமான வரி ஆணையர் அல்லது சமமான படிநிலையிலுள்ள மைய அரசாங்கத்தின் பிற அலுவலர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

(2) தகுதிறமுள்ள அதிகாரிகள், மைய அரசாங்கம் ஆணை வாயிலாகப் பணிக்கும் ஆட்களை அல்லது ஆட்களின் வகைகளைப் பொறுத்து, தங்களுடைய பதவிப் பணிகளைப் புரியலாம்.

சட்ட முரணாக முயன்று பெற்ற சொத்தினை அடையாளங் காட்டுதல்.

68 (உ). (1) பிரிவு 53 இன் படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும், மற்றும் ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பைக்கொண்ட அலுவலர் ஒவ்வொருவரும், இந்த அத்தியாயம் பொருந்துகிற ஆள் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும், இந்தியாவிற்குள்ளேயோ வெளியேயோ செய்திருப்பதாகக் குற்றஞ்சார்த்தப்பட்டிருக்கிறார் என்ற தகவலைப் பெற்றதன்பேரில், அத்தகைய ஆளால் சட்ட முரணாக முயன்று பெறப்பட்ட சொத்து எதனையும் கண்டறிந்து அடையாளம் காட்டுவதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் எடுக்க முற்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்ட நடவடிக்கைகள், ஆள், இடம், சொத்து, சொத்திருப்புகள், ஆவணங்கள், வங்கி அல்லது பொது நிதி நிறுவனம் எதிலுமுள்ள கணக்குப் புத்தகங்கள் அல்லது பிற தொடர்புடைய பொருட்பாடுகள் எதனையும் பொறுத்த விசாரணை, புலனாய்வு அல்லது மதிப்பீடு எதனையும் உள்ளடக்கலாம்.

(3) உட்பிரிவு (2) இல் சுட்டப்பட்ட விசாரணை, புலனாய்வு அல்லது மதிப்பீடு எதுவும், இதற்கென தகுதிறமுள்ள அதிகாரி இதற்கென பிறப்பிக்கும் அல்லது வழங்கும் பணிப்புரைகள் அல்லது நெறிமுறைகளுக்கு இணங்க, உட்பிரிவு (1) இல் சொல்லப்பட்ட ஓர் அலுவலரால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

68 ஊ (1) பிரிவு 68 உ இன்படியான ஒரு விசாரணை அல்லது புலனாய்வை நடத்துகிற அலுவலர் எவரும், அத்தகைய விசாரணை அல்லது புலனாய்வு எந்தச் சொத்து தொடர்பாக நடத்தப்படுகிறதோ அந்தச் சொத்து சட்ட முரணாக முயன்று பெற்ற சொத்து என்றும், அத்தகைய சொத்து பெரும்பாலும் மறைக்கப்படவிருக்கிறது, மாற்றல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது இந்த அத்தியாயத்தின்படி அத்தகைய சொத்தினைத் தண்ட இழப்பாக்குதல் தொடர்பான நடவடிக்கை எதனையும் குலைப்பதை விளைவிக்கும் முறை எதிலும் கையாளப்படவிருக்கிறது என்றும், நம்புவதற்குக் காரணம் பெற்றிருக்குமிடத்து, அவர், அத்தகைய சொத்தினைப் பற்றுகை செய்வதற்குரிய ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம், மேலும், அத்தகைய சொத்தினைப் பற்றுகை செய்வது நடைமுறைப்படுத்தக் கூடாததாயிருக்குமிடத்து, அவர் ஆணையைப் பிறப்பிக்கும் அலுவலரின் அல்லது தகுதிறமுள்ள அதிகாரியின் முன் அனுமதியுடன் தவிர, அத்தகைய சொத்து மாற்றல் செய்யப்படுதலோ பிறவாறு கையாளப்படுதலோ ஆகாது என்று ஆணை பிறப்பிக்கலாம், மற்றும் அத்தகைய ஆணையின் படி ஒன்று தொடர்புற்ற ஆளுக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்: சட்ட முரணாக முயன்று பெற்ற சொத்தினைப் பற்றுகை செய்தல் அல்லது செயலுறச் செய்தல்.

**வரம்புரையாக:** தகுதிறமுள்ள அதிகாரிக்கு இந்த உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் உரியவாறு தெரிவிக்கப்படுதல் வேண்டும், மேலும், அத்தகைய ஓர் ஆணையின்படி ஒன்று அது பிறப்பிக்கப்பட்டு நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள், தகுதிறமுள்ள அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், பிறப்பிக்கப்பட்டு முப்பது நாள் கால அளவுக்குள் தகுதிறமுள்ள அதிகாரியின் ஓர் ஆணையினால் உறுதிப்படுத்தப்பட்டாலன்றி, சொல்லப்பட்ட ஆணை செல்லாற்றல் உடையது ஆகாது.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, “சொத்தினை உரிமை மாற்றம் செய்தல்” என்பது, சொத்தின் உரிமையளித்தல், அதனைக் கொண்டு செல்லுதல், பங்கிட்டளித்தல், ஏற்பாடு செய்தல், ஒப்படைத்தல், பணம் செலுத்துதல் அல்லது பிற வகையில் சொத்தினைத் தீர்வு செய்தல் என்று பொருள்படும், மேலும், முன்சென்றப் பொதுப் பாங்கினை வரம்பிடாமல்—

(அ) சொத்தில் ஒரு பொறுப்புக் கட்டளையை உருவாக்குதலை,

(ஆ) சொத்தில் குத்தகை, அடைமானம், பொறுப்புரிமை, வசதியுரிமை, உரிமம், அதிகாரம், கூட்டாண்மை அல்லது உரித்தம் எதனையும் வழங்குதல் அல்லது உருவாக்குதலை,

(இ) அதிகாரத்தைப் பெற்றவர் அல்லாத பிற ஆள் எவர் சார்பாகவும் அதன் உரிமையளிப்பை தீர்மானிப்பதற்காக, சொத்தின் உரிமையாளர் அல்லாத ஆள் எவரிடமும் உற்றடைந்துள்ள சொத்தின் அமர்த்தீட்டு அதிகாரத்தைச் செலுத்துதலை, மற்றும்,

(ஈ) ஆள் ஒருவரின் சொந்த சொத்தின் மதிப்பினை நேரடியாகவோ மறைமுகமாகவோ குறைப்பதற்கும், பிற ஆள் ஒருவரின் சொத்தின் மதிப்பினைப் பெருக்குவதற்குமான உட்கருத்துடன் அவரால் செய்யப்பட்ட நடவடிக்கை எதையும்

உள்ளடக்கும்.

68 எ. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணை வாயிலாக, ஓர் ஆட்சியாளரின் பதவிப் பணிகளைப் புரிவதற்காகத் தான் பொருத்தமெனக் கருதும் எண்ணிக்கையில் (அரசாங்கத்தின் இணைச் செயலர் படிநிலைக்கு குறையாத) அதன் அலுவலர்களை அமர்த்தலாம். இந்த அத்தியாயத்தின் படி பற்றுகை செய்யப்பட்ட அல்லது தண்ட இழப்பாக்கப்பட்ட சொத்துக்களை மேலாண்மை செய்தல்.

(2) உட்பிரிவு (1) இன்படி அமர்த்தப்பட்ட ஆட்சியாளர், எந்தச் சொத்து தொடர்பாக, பிரிவு 68 ஊ இன்படி உட்பிரிவு (1) இன்படி அல்லது பிரிவு 68 இ இன்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சொத்தினை

வகுத்துரைக்கப்படும் முறையிலும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் பெற்றுக்கொண்டு மேலாண்மை செய்தல் வேண்டும்.

(3) ஆட்சியாளர், மைய அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாக்கப்பட்ட சொத்தினைத் தீர்வு செய்வதற்காக, மைய அரசாங்கம் பணிக்கும் நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

சொத்தின் தண்ட இழப்பு பற்றிய அறிவிப்பு.

68 ஏ. (1) அந்த அத்தியாயம் பொருந்துகின்ற ஆள் எவராலும் தாமாக வைத்திருக்கப்படும் அல்லது தம் சார்பாகப் பிற ஆள் எவராலும் வைத்திருக்கப்படும் சொத்துக்களின் மதிப்பினையும் அவருடைய வருமானம், ஈட்டங்கள் அல்லது சொத்திருப்புகளின் அறியப்பட்ட மூலங்களையும் பிரிவு 68 உ இன்படி ஒரு புலனாய்வினைச் செய்த அலுவலர் எவரிடமிருந்து பெற்ற ஓர் அறிக்கையின் விளைவாக அல்லது பிறவாறு தனக்குக் கிடைக்கத்தக்கதான, பிற தகவல் அல்லது மூலப்பொருள் எதனையும் கவனத்தில் கொண்டு, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, அத்தகைய சொத்துகள் அனைத்தும் அல்லது அவற்றுள் எவையும் சட்ட முரணாகக் கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் என்று நம்புவதற்குக் காரணம் (அத்தகைய நம்பிக்கைக்கான காரணங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்யப்படவேண்டும்) பெற்றிருக்குமாயின், அது, அத்தகைய ஆளுக்கு (இதில் இதற்குப் பின்பு பாதிக்கப்பட்ட ஆள் என்று சுட்டப்படுவார்) அத்தகைய சொத்தினை அவர் எவற்றிலிருந்து அல்லது எவற்றின் வாயிலாக முயன்று பெற்றுள்ளாரோ அந்த அவருடைய வருமானம், ஈட்டங்கள் அல்லது சொத்திருப்புகளின் மூலங்கள், அவர் சார்ந்திருக்கும் சாட்சியம் மற்றும் பிற தொடர்புடைய தகவல் மற்றும் விவரங்களைச் சுட்டியும் அத்தகைய சொத்துகள் அனைத்தையும் அல்லது, நேர்வுக்கேற்ப, அவற்றுள் எவற்றையும் சட்ட முரணாகக் கையகப்படுத்தப்பட்டவை என்றும் இந்த அத்தியாயத்தின்படி மைய அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாக்கப்பட வேண்டும் என்றும் ஏன் விளம்பக்கூடாது என்பதற்கு அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட முப்பது நாள் கால அளவுக்குள் காரணம் காட்டுமாறும் கோரி ஓர் அறிவிப்பினை அவருக்கு சார்வு செய்யலாம்.

(2) ஆள் எவருக்கும் உட்பிரிவு (1) இன்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பு, சொத்து எதுவும் அத்தகைய ஆளின் சார்பாக பிற ஆள் எவராலும் வைத்துவரப்படுகிறது என்று குறித்துரைக்குமிடத்து, அந்த அறிவிப்பின்படி ஒன்று அத்தகைய பிற ஆளுக்கு கூட சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

குறித்த சில நேர்வுகளில் சொத்தினை தண்ட இழப்பாக்குதல்.

68 ஐ. (1) தகுதியுள்ள அதிகார அமைப்பு, பிரிவு 68 ஏ இன்படி வழங்கப்பட்ட காரணம் காட்டுமாறு கோரும் அறிவிப்பிற்குரிய விளக்கம் ஏதேனுமிருப்பின், அதனையும், அதற்கு முன் கிடைக்கத்தக்க மூலப்பொருள்களையும் கருதுகை செய்த பின்னரும், பாதிக்கப்பட்ட ஆளுக்கு (மற்றும் பாதிக்கப்பட்ட ஆள் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட சொத்து பிற ஆள் எவர் மூலமாகவும், வைத்திருக்கும் நேர்வில், அத்தகைய ஆளுக்கும் கூட) விசாரிக்கப்படுவதற்கான தகுமானதொரு வாய்ப்பினைக் கொடுத்த பின்னரும், ஆணை வாயிலாக, வினாவிலுள்ள சொத்துக்கள் அனைத்தும் அல்லது அவற்றுள் எவையும் சட்டமுரணாகக் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களா என்பதை முடிவு செய்து பதிவு செய்யலாம்:

**வரம்புரையாக:** பாதிக்கப்பட்டவர் (மற்றும் பாதிக்கப்பட்டவர் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட சொத்து எதனையும் பிற ஆள் எவர் மூலமாகவும் வைத்திருக்கும் நேர்வில், பிற ஆள் எவரும் கூட) தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்கு முன் முன்னிலையாகவில்லையாயின், அல்லது காரணம் காட்டுமாறு கோரும் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட முப்பது நாள் கால அளவுக்குள் அதன்முன் தன்னுடைய வழக்கை எடுத்துரைக்கவில்லையாயின், தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, தன் முன் கிடைக்கத்தக்க சாட்சியத்தின் அடிப்படையில் தரப்பினர் இல்லாமலே, இந்த உட்பிரிவின்படியான ஒரு முடிவினை பதிவு செய்ய முற்படலாம்.

(2) தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, காரணம் காட்டுமாறு கோரும் அறிவிப்பில் சுட்டப்பட்டுள்ள சொத்துக்களில் சில சட்ட முரணாக கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் என்று தெளிவுறக் கண்டு, ஆனால் அத்தகைய சொத்துக்களைத் திட்டவட்டமாக அடையாளங்காட்ட இயலாதவிடத்து, தன்

முழுமையான நிதானிப்புடன், எந்தச் சொத்துக்கள் சட்ட முரணாக கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் என்று திட்டவட்டமாக உரைத்து, உட்பிரிவு (1)-க்கு இணங்கியவாறு ஒரு முடிவினைப் பதிவு செய்வது தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்குச் சட்ட முறையானது ஆகும்.

(3) தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, சொத்து எதுவும் சட்டமுரணாகக் கையகப்படுத்தப்பட்ட சொத்தாகும் என்று இந்தப் பிரிவின்படி ஒரு முடிவினைப் பதிவு செய்யுமிடத்து, அது, அத்தகைய சொத்து, அனைத்து வில்லங்களிலிருந்து விடுபட்டு, இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்கு உட்பட்டு மைய அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாக்கப்படுதல் வேண்டும் என்று விளம்புகை செய்தல் வேண்டும்.

(4) ஒரு நிறுமத்திலுள்ள பங்குகள் எவையும், இந்த அத்தியாயத்தின்படி மைய அரசாங்கத்திற்கு தண்ட இழப்பாக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த நிறுமம்,
1/1956 நிறுமங்கள் சட்டம், 1956 அல்லது அந்த நிறுமத்தின் சங்க அமைப்பு விதிகளில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், உடனடியாக மைய அரசாங்கத்தை அத்தகைய பங்குகளின் உரிமை மாற்றும் பெறுநராகப் பதிவு செய்தல் வேண்டும்.

மெய்ப்பிக்கும் சுமை.

68 (ஒ). இந்த அத்தியாயத்தின்படியான கூட்டு நடவடிக்கைகள் எவற்றிலும் பிரிவு 68 (ஏ) இன்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட சொத்து எதுவும், சட்ட முரணாகக் கையகப்படுத்தப்பட்ட சொத்து அன்று என்று மெய்ப்பிக்கும் சுமையானது பாதிக்கப்பட்ட ஆளைச் சார்ந்ததாகும்.

தண்ட இழப்புக்குப் பதிலாகப் பணத் தண்டம்.

68 (ஓ). (1) தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, பிரிவு 68 (ஐ) இன்படி சொத்து எதுவும் மைய அரசாங்கத்திற்கு தண்ட இழப்பாக்கப்பட்டுள்ளது என்று ஒரு விளம்புகைச் செய்யுமிடத்து, மற்றும் சட்ட முரணாகக் கையகப்படுத்தப்பட்ட சொத்தின் ஒரு பகுதிக்கான மூலம் மட்டுமே, தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, தெளிவுறக் காணுமாறு மெய்ப்பிக்கப்படாத நேர்வில், அது பாதிக்கப்பட்ட ஆளுக்கு, தண்ட இழப்புக்குப் பதிலாக அத்தகைய பகுதியின் நிலவரா விலைக்குச் சமமான ஒரு பணத் தண்டத்தைச் செலுத்துவதற்கான விருப்பத் தேர்வினை அளிக்கும் ஓர் ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன்படி ஒரு பணத்தண்டத்தை சுமத்தும் ஓர் ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன்பு, பாதிக்கப்பட்ட ஆளுக்கு விசாரிக்கப்படுவதற்கான ஒரு தகுமான வாய்ப்பினை கொடுத்தல் வேண்டும்.

(3) பாதிக்கப்பட்ட ஆள் உட்பிரிவு (1) இன்படி கொடுபடவேண்டிய பணத் தண்டத்தைச் செலுத்துமிடத்து, அதற்கென அனுமதிக்கப்படும் காலத்திற்குள், தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, ஆணை வாயிலாக, பிரிவு 68 (ஐ) இன் படியான தண்ட இழப்பு பற்றிய விளம்புகையை முறித்தறவு செய்யலாம். மேலும் அதன் பேரில் அத்தகைய சொத்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

குறித்த சில பொறுப்புக் கட்டளைச் சொத்துக்கள் தொடர்பான நெறிமுறை.

68 (ஔ). பிரிவு 68 (ஆ) கூறு (ஆ) உட்கூறு (vi) இல் சுட்டப்பட்ட ஆள் ஒருவராக இருக்கும் நேர்வில், தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, அதற்குக் கிடைக்கத்தக்க தகவல் மற்றும் மூலப் பொருள்களின் அடிப்படையில், பொறுப்புக் கட்டளையில் வைத்திருக்கப்படும் சொத்து எதுவும், சட்டமுரணாகக் கையகப்படுத்தப்பட்ட சொத்தாகும் என்று நம்புவதற்குக் காரணம் பெற்றிருக்கும் நேர்வில், (அத்தகைய நம்பிக்கைக்கான காரணங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டும்) அது, பொறுப்புக் கட்டளையைத் தோற்றுவித்தவர் மீது அல்லது, நேர்வுக்கேற்ப, எந்தச் சொத்திருப்புகளிலிருந்து அல்லது அதன் வாயிலாக அத்தகைய சொத்து பொறுப்புக் கட்டளையால் கையகப்படுத்தப்பட்டதோ அந்தச் சொத்திருப்புகளைப் பங்களித்தவர் மீது மற்றும் பொறுப்புக் கட்டளையர்மீது, அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் முப்பது நாள் கால அளவுக்குள், எவற்றிலிருந்து அல்லது எவற்றின் வாயிலாக அத்தகைய சொத்து கையகப்படுத்தப்பட்டதோ அந்த பணமூலம் அல்லது பிற சொத்திருப்புகள் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய சொத்தினைக் கையகப்படுத்துவதற்கான பொறுப்புக் கட்டளைக்கு பங்களிக்கப்பட்ட பணமூலம் அல்லது பிற சொத்திருப்புகளுக்கு விளக்கம் தருமாறு அவர்களைக் கோரும் ஓர் அறிவிப்பினைச் சார்வு செய்யலாம். மேலும், அதன்பேரில், அத்தகைய அறிவிப்பு, பிரிவு 68 (ஒ) வின்படி சார்வு செய்யப்பட்ட ஓர் அறிவிப்பாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் இந்த அத்தியாயதத்தின் பிற வகையங்கள் அனைத்தும் அங்ஙனமே பொருந்துதல் வேண்டும்.

**விளக்கம்.**—இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, பொறுப்புக்கட்டளையில் வைத்திருக்கப்படும் சொத்து எதுவும் தொடர்பாக, “சட்டமுரணாக கையகப்படுத்தப்பட்ட சொத்து” என்பது,—

(i) சொத்து எதுவும், பொறுப்புக் கட்டளையைத் தோற்றுவித்தவரால் அல்லது பொறுப்புக்கட்டளைக்கு அத்தகைய சொத்தினைப் பங்களித்தவரால் தொடர்ந்து வைத்திருக்கப்படுமாயின், அந்தத் தோற்றுவித்தவர் அல்லது பங்களித்தவர் தொடர்பாக சட்டமுரணாகக் கையகப்படுத்தப்பட்டிருக்கக் கூடிய சொத்தினை,

(ii) ஆள் எவராலும் செய்யப்பட்ட பங்களிப்புகள் எவற்றிலிருந்தும் பொறுப்புக்கட்டளையால் கையகப்படுத்தப்பட்டதும் அத்தகையவரால் (அத்தகைய பங்களிப்புகளிலிருந்து அத்தகைய சொத்தினைக் கையகப்படுத்தப்பட்டது தொடர்பாக) சட்டமுரணாகக் கையகப்படுத்தப்பட்டிருக்கக் கூடியதுமான சொத்து எதனையும்

உள்ளடக்கும்.

குறித்த சில மாற்றல்கள் இல்லாநிலையன.

68(கு). பிரிவு 68(ஊ) வின் உட்பிரிவு *(1)* இன்படியான ஓர் ஆணையைப் பிறப்பித்த பின்பு அல்லது பிரிவு 68(ஏ) இன்படி அல்லது பிரிவு 68(ஔ) வின்படி ஓர் அறிவிப்பினை வழங்கிப் பின்பு, சொல்லப்பட்ட ஆணையில் அல்லது அறிவிப்பில் சுட்டப்பட்ட சொத்து எதுவும், எந்த முறையிலாவது உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய உரிமைமாற்றம் இந்த அத்தியாயத்தின்படியான நடவடிக்கைகளைப் பொறுத்து புறக்கணிக்கப்படுதல் வேண்டும், மேலும் அத்தகைய சொத்து, பின்னர் பிரிவு 68(ஐ) இன்படி மைய அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாக்கப் பட்டிருக்குமாயின், அப்போது அத்தகைய சொத்தின் உரிமைமாற்றம் இல்லா நிலையதானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைத்தல்.

68(ங). மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, பிரிவு 68(ஊ), பிரிவு 68(ஐ), பிரிவு 68(ஒ)வின் உட்பிரிவு *(1)* அல்லது பிரிவு 68(ஔ)வின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக, மைய அரசாங்கத்தால் அமர்த்தப்படவேண்டிய ஒரு தலைவரையும் அந்த அரசாங்கம் பொருத்தமெனக் கருதும் எண்ணிக்கையுள்ள (அரசாங்கத்தில், இணைச் செயலர் படிநிலைக்குக் குறைவாக, மைய அரசாங்கத்தின் அலுவலர்களாக இருக்கிற) பிற உறுப்பினர்களையும் கொண்ட, தண்ட இழப்பாக்கப்பட்ட சொத்திற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் என்று அழைக்கப்படும் ஒரு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைக்கலாம்.

*(2)* அந்த மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருக்கிற அல்லது இருந்துவருகிற அல்லது இருப்பதற்குத் தகுதிப்பாடுடைய ஓர் ஆளாக இருத்தல் வேண்டும்.

*(3)* அந்தத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும், வகுத்துரைக்கப்படுமாறு இருத்தல் வேண்டும்.

மேல்முறையீடுகள்.

68(ச). *(1)* பிரிவு 68 (ஊ), பிரிவு 68 (ஐ), பிரிவு 68 (ஒ) இன் உட்பிரிவு *(1)* அல்லது பிரிவு 68 (ஔ) வின்படி தகுதிறமுள்ள அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றினால் குறையுற்ற ஆள் எவரும், தனக்கு ஆணை சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு ஒரு மேல்முறையீடு செய்யலாம்:

**வரம்புரையாக:** மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், மேல்முறையீட்டாளர் போதிய காரணத்தினால், மேல்முறையீட்டினை உரிய காலத்தில் தாக்கல் செய்வதனின்று தடுக்கப்பட்டார் என்று தெளிவுறக்காணுமாயின், மேற்சொன்ன தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குப் பின்னர், ஆனால், அறுபது நாட்களுக்குப் பிந்தாமல், ஒரு மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

*(2)* உட்பிரிவு *(1)* இன்படி ஒரு மேல்முறையீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பேரில், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், மேல்முறையீட்டாளருக்கு விசாரிக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்தபின்பு, அவர் விரும்புவாராயின்,

மேலும் அது பொருத்தமெனக் கருதும் மேலுமான விசாரணையைச் செய்தபின்பு, எந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த ஆணையை உறுதி செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

*(3)* மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும், மூன்று உறுப்பினர்களைக் கொண்டதும், மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவரால் அமைக்கப்பட்டதுமான ஒரு நீதியர் ஆயத்தால் செலுத்தப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*(4)* உட்பிரிவு *(3)* இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், தலைவர், இந்த பிரிவின்படி மேல்முறையீடுகளை விரைவாகத் தீர்வு செய்வதற்கு இரண்டு உறுப்பினர்களுள்ள ஒரு நீதியர் ஆயத்தை அமைப்பது தேவையானது என்று கருதுமிடத்து, அவர் அவ்வாறு செய்யலாம், மேலும், அவ்வாறு அமைக்கப்பட்ட நீதியர் ஆயம், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்களைச் செலுத்தி செயற்பணிகளை நிறைவேற்றலாம்:

**வரம்புரையாக:** அவ்வாறு அமைக்கப்பட்ட ஒரு நீதியர் ஆயத்தின் உறுப்பினர்கள், பிரச்சினை அல்லது பிரச்சினைகள் எது பற்றியும் வேறுபடுவார்களாயின், அவர்கள் வேறுபடும் பிரச்சினை அல்லது பிரச்சினைகளை அவர்கள் உரைத்து (தலைவரால் குறித்துரைக்கப்படும்) ஒரு மூன்றாம் உறுப்பினருக்கு, அத்தகைய பிரச்சினை அல்லது பிரச்சினைகளை விசாரிப்பதற்காக அதைச் சுட்டியனுப்புதல் வேண்டும், மேலும் அத்தகைய பிரச்சினை அல்லது பிரச்சினைகள், அந்த உறுப்பினரின் கருத்திற்கிணங்க முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

*(5)* மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், தன் சொந்த நெறிமுறையை ஒழுங்குறுத்தலாம்.

*(6)* மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம் செய்து வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன்பேரில், தீர்ப்பாயம், மேல் முறையீடு எதற்குமான தரப்பினர் ஒருவரை அல்லது அத்தகைய தரப்பினரால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் தொடர்புடைய ஆள் எவரையும், பதிவுக்கட்டுகள், பதிவேடுகள் எவற்றையும் அலுவலக நேரத்தின்போது, எந்தச் சமயத்திலும், ஆய்வு செய்யவும், அதன் பகுதி ஒன்றின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படி ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

அறிவிப்போ ஆணையோ விவரிப்பில் உள்ள பிழைக்காக செல்லாத தாக்கப்படுதல் ஆகாது.

68 (ஞ). இந்த அத்தியாயத்தின்படி வழங்கப்பட்ட அல்லது சார்வு செய்யப்பட்ட அறிவிப்பு எதுவும், செய்யப்பட்ட அறிக்கை எதுவும் மற்றும் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், அதில் சொல்லப்பட்ட சொத்தின் அல்லது ஆளின் விவரிப்பிலிருந்து அத்தகைய சொத்து அல்லது ஆள் அடையாளங்காட்டப்படத்தக்கவாராயிருப்பின், அவ்வாறு சொல்லப்பட்ட விவரிப்பிலுள்ள பிழை எதுவும் காரணமாக செல்லாததாக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

அதிகார வரம்பிற்குத் தடை.

68(ட). இந்த அத்தியாயத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது செய்யப்பட்ட விளம்புகை எதுவும், அதில் வகைசெய்யப்பட்டவாறு தவிர, மேல் முறையீடு செய்யத்தக்கது ஆகாது, மற்றும் உரிமையியல் நீதிமன்றம் எதுவும், இந்த அத்தியாயத்தாலோ அதன் வழியாலோ மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அல்லது தகுதிறமுள்ள அதிகார அமைப்பு எதுவும் எந்தப் பொருட்பாட்டைத் தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அந்தப் பொருட்பாடு எதனையும் பொறுத்து அதிகார வரம்பு உடையது ஆகாது, மேலும் உறுத்துக்கட்டளை எதுவும், இந்த அத்தியாயத் தாலோ அதன் வழியாலோ வழங்கப்பட்ட அதிகாரம் எதனையும் ஒட்டி, எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எதனையும் பொறுத்து நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனாலும் அளிக்கப்படுதல் ஆகாது.

மேலும் அது பொருத்தமெனக் கருதும் மேலுமான விசாரணையைச் செய்தபின்பு, எந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த ஆணையை உறுதி செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

*(3)* மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும், மூன்று உறுப்பினர்களைக் கொண்டதும், மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவரால் அமைக்கப்பட்டதுமான ஒரு நீதியர் ஆயத்தால் செலுத்தப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*(4)* உட்பிரிவு (3) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், தலைவர், இந்த பிரிவின்படி மேல்முறையீடுகளை விரைவாகத் தீர்வு செய்வதற்கு இரண்டு உறுப்பினர்களுள்ள ஒரு நீதியர் ஆயத்தை அமைப்பது தேவையானது என்று கருதுமிடத்து, அவர் அவ்வாறு செய்யலாம், மேலும், அவ்வாறு அமைக்கப்பட்ட நீதியர் ஆயம், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அதிகாரங்களைச் செலுத்தி செயற்பணிகளை நிறைவேற்றலாம்:

**வரம்புரையாக:** அவ்வாறு அமைக்கப்பட்ட ஒரு நீதியர் ஆயத்தின் உறுப்பினர்கள், பிரச்சினை அல்லது பிரச்சினைகள் எது பற்றியும் வேறுபடுவார்களாயின், அவர்கள் வேறுபடும் பிரச்சினை அல்லது பிரச்சினைகளை அவர்கள் உரைத்து (தலைவரால் குறித்துரைக்கப்படும்) ஒரு மூன்றாம் உறுப்பினருக்கு, அத்தகைய பிரச்சினை அல்லது பிரச்சினைகளை விசாரிப்பதற்காக அதைச் சுட்டியனுப்புதல் வேண்டும், மேலும் அத்தகைய பிரச்சினை அல்லது பிரச்சினைகள், அந்த உறுப்பினரின் கருத்திற்கிணங்க முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

*(5)* மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், தன் சொந்த நெறிமுறையை ஒழுங்குறுத்தலாம்.

*(6)* மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம் செய்து வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன்பேரில், தீர்ப்பாயம், மேல் முறையீடு எதற்குமான தரப்பினர் ஒருவரை அல்லது அத்தகைய தரப்பினரால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் தொடர்புடைய ஆள் எவரையும், பதிவுக்கட்டுகள், பதிவேடுகள் எவற்றையும் அலுவலக நேரத்தின்போது, எந்தச் சமயத்திலும், ஆய்வு செய்யவும், அதன் பகுதி ஒன்றின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படி ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

அறிவிப்போ ஆணையோ விவரிப்பில் உள்ள பிழைக்காக செல்லாத தாக்கப்படுதல் ஆகாது.

68 (ஞ). இந்த அத்தியாயத்தின்படி வழங்கப்பட்ட அல்லது சார்வு செய்யப்பட்ட அறிவிப்பு எதுவும், செய்யப்பட்ட அறிக்கை எதுவும் மற்றும் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், அதில் சொல்லப்பட்ட சொத்தின் அல்லது ஆளின் விவரிப்பிலிருந்து அத்தகைய சொத்து அல்லது ஆள் அடையாளங்காட்டப்படத்தக்கவாராயிருப்பின், அவ்வாறு சொல்லப்பட்ட விவரிப்பிலுள்ள பிழை எதுவும் காரணமாக செல்லாததாக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

அதிகார வரம்பிற்குத் தடை.

68(ட). இந்த அத்தியாயத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது செய்யப்பட்ட விளம்புகை எதுவும், அதில் வகைசெய்யப்பட்டவாறு தவிர, மேல் முறையீடு செய்யத்தக்கது ஆகாது, மற்றும் உரிமையியல் நீதிமன்றம் எதுவும், இந்த அத்தியாயத்தாலோ அதன் வழியாலோ மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அல்லது தகுதிறமுள்ள அதிகார அமைப்பு எதுவும் எந்தப் பொருட்பாட்டைத் தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அந்தப் பொருட்பாடு எதனையும் பொறுத்து அதிகார வரம்பு உடையது ஆகாது, மேலும் உறுத்துக்கட்டளை எதுவும், இந்த அத்தியாயத் தாலோ அதன் வழியாலோ வழங்கப்பட்ட அதிகாரம் எதனையும் ஒட்டி, எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எதனையும் பொறுத்து நீதிமன்றம் அல்லது. பிற அதிகார அமைப்பு எதனாலும் அளிக்கப்படுதல் ஆகாது.

தகுதிறமுள்ள அதிகார அமைப்பும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும் உரிமை வழக்கு நீதிமன்றத்தின் அதிகாரங்களை உடையன.

68 ண. தகுதிறமுள்ள அதிகார அமைப்பும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமும், உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச்சட்டம், 1908 இன்படி ஓர் உரிமை வழக்கை விசாரிக்கையில் பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து, ஓர் உரிமை வழக்கு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருக்கும், அவையாவன:—

(அ) ஆள் எவருக்கும் அழைப்பாணை அனுப்பி அவரது வருகையைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் உறுதிமொழியின் மீது அவரை விசாரித்தல்;

(ஆ) ஆவணங்களை வெளிக்கொணர்ந்து முன்னிலைப் படுத்துமாறு வேண்டுறுத்துதல்;

(இ) ஆணையுறுதி ஆவணத்தின்மீது சான்றினைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் அரசாங்கப் பதிவுக் கட்டு அல்லது அதன் படி எதனையும் வேண்டிக்கட்டளையிடுதல்;

(உ) சாட்சிகளை அல்லது ஆவணங்களைப் பரிசோதிப்பதற்காக ஆணைகளை வழங்குதல்;

(ஊ) வகுத்துரைக்கப்படும் பிற பொருட்பாடு எதுவும்;

தகுதிறமுள்ள அதிகார அமைப்புக்குத் தகவலளித்தல்.

68 த. (1) பிற சட்டம் எதிலும் எது எவ்வாறிருப்பினும், தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, மைய அரசாங்கத்தின் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பின் அலுவலர் எவரையும் அல்லது அதிகார அமைப்பு எதனையும் தகுதிறமுள்ள அதிகார அமைப்பின் கருத்தில் பயனுள்ளதாய் இருக்கும் அல்லது இந்த அத்தியாயத்தைப் பொறுத்தவரை தொடர்புடையதாய் இருக்கும் ஆட்கள், கூறுகள் அல்லது பொருட்பாடுகள் தொடர்பான தகவலை அளிக்குமாறு வேண்டுறுத்துவதற்கு அதிகாரம் உடையது ஆகும்.

(2) பிரிவு 68ஙுவில் சுட்டப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும், தமக்குக் கிடைக்கத்தக்க தகவல் எதுவும் இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்குப் பயனுள்ளதாயிருக்கும் என்று கருதுவராயின் அத்தகைய தகவலைத் தானே முற்பட்டு தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்கு அனுப்பலாம்.

குறித்த சில அலுவலர்கள், ஆட்சியாளருக்கும், தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்கும், மேல் முறையீட்டு தீர்ப்பாயத்திற்கும் உதவுதல்.

68ந. இந்த அத்தியாயத்தின் நடவடிக்கைகள் எவற்றின் நோக்கங்களுக்காகவும், பின்வரும் அலுவலர்கள் இதன்மூலம், அதிகாரமளிக்கப்பெற்று பிரிவு 68எ இன்படி அமர்த்தப்பெற்ற ஆட்சியாளருக்கும், தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்கும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கும் உதவுமாறு வேண்டுறுத்தப்படுகிறார்கள், அவர்களாவர்:—

(அ) மயக்கமருந்துபொருள்கள் கட்டுப்பாட்டுச் செயலக அலுவலர்கள்;

(ஆ) சுங்கத் துறை அலுவலர்கள்:

(இ) மைய ஆயத்துறை அலுவலர்கள்;

(ஈ) வருமான வரித் துறை அலுவலர்கள்;

(உ) அயல்நாட்டு நாணயமாற்று ஒழுங்குறுத்தும் சட்டம், 1973 இன் படி அமர்த்தப்பெற்ற செயலுறுத்தும் அலுவலர்கள்;

(ஊ) காவல் துறை அலுவலர்கள்;

(எ) மயக்க மருந்துப்பொருட்கள் துறை அலுவலர்கள்;

(ஏ) மையப் பொருளியல் புலனாய்வுச் செயலக அலுவலர்கள்;

(ஐ) வருவாய்ப் புலனாய்வு இயக்க அலுவலர்கள்;

(ஒ) மைய அரசாங்கத்தால், அதிகாரமுறை அரசிதழில் இதற்கெனக் குறித்துரைக்கப்படும் மைய அல்லது மாநில அரசாங்கத்தின் பிற அலுவலர்கள்.

உடைமையில் எடுத்துக் கொள்ள அதிகாரம்.

68 ப. (1) சொத்து எதுவும், இந்த அத்தியாயத்தின்படி மைய அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாக்கப்பட வேண்டுமென்று விளம்பப்பட்டிருக்குமிடத்து அல்லது பாதிக்கப்பட்ட ஆள், பிரிவு 68ஒவின் உட்பிரிவு (1) இன்படி கொடுபட

வேண்டிய பணத்தண்டத்தை அந்தப் பிரிவின் உட்பிரிவு (3) இன் படி அதற்காக அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறியுள்ளவிடத்து, தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, பாதிக்கப்பட்ட ஆளுக்கும் அதோடு சொத்தினை உடைமையில் வைத்திருக்கும் பிற ஆள் எவருக்கும் அதன் உடைமையை பிரிவு 68 (எ) யின் படி அமர்த்தப்பெற்ற ஆட்சியாளரிடம் அல்லது இதற்கென அவரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற ஆள் எவரிடமும், ஆணையைச் சார்வு செய்து முப்பது நாட்களுக்குள் ஒப்புவிக்குமாறு அல்லது ஒப்படைக்குமாறு ஆணையிடலாம்.

(2) ஆள் எவரும் உட்பிரிவு (1) இன்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணைக்கு இணங்கி நடக்க மறுப்பாராயின் அல்லது தவறுவாராயின், ஆட்சியாளர் சொத்தினை உடமையில் எடுத்துக்கொள்ளலாம். மேலும், அதற்காகத் தேவைப்படும் செல்லாற்றலைப் பயன்படுத்தலாம்.

(3) உட்பிரிவு (2)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்ட சொத்து எதனையும் உடமையில் எடுத்துக்கொள்வதற்குத் தமக்கு உதவுமாறு காவல் அலுவலர் எவரின் பணியையும் கோரி வேண்டுதல் ஆணையிடலாம்; மேலும் அத்தகைய வேண்டுதல் ஆணைக்கு இணங்கி நடப்பது அத்தகைய அலுவலரின் கடமையாகும்.

பிழைகளைச் சீர்படுத்துதல்.

68(ம). பதிவுக்கட்டில் தெளிவாகத் தெரியும் பிழைகளைச் சீர்படுத்தும் நோக்குடன் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அல்லது, நேர்வுக்கேற்ப, மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம், தன்னால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனையும் அந்த ஆணையின் தேதியிலிருந்து ஓராண்டு கால அளவுக்குள் திருத்தம் செய்யலாம்:

**வரம்புரையாக;** அத்தகைய திருத்தம் எதுவும், ஆள் எவரும் ஊறுபடுமாறு பாதிப்பதாகத் தோன்றுமாயின், அத்தகைய ஆளுக்கு விசாரிக்கப்படுவதற்கான ஒரு தகுமான வாய்ப்பு கொடுக்கப்படாமல் அது செய்யப்படுதல் ஆகாது.

பிற சட்டங்களின் படியான முடிவுகள் இந்த அத்தியாயத்தின் படியான நடவடிக்கைகளுக்கு அறுதியானவை ஆகா.

68 (ய) அலுவலர் எவராலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் பிற சட்டம் எதன்படியும் செய்யப்பட்ட முடிவு எதுவும், இந்த அத்தியாயத்தின் படியான நடவடிக்கைகள் எவற்றைப் பொறுத்தும் அறுதியானவை ஆகா.

அறிவிப்புகளையும் ஆணைகளையும் சார்வுசெய்தல்.

68 (ர). இந்த அத்தியாயத்தின்படி வழங்கப்பட்ட அறிவிப்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும்—

(அ) அது எவருக்கென்று கருதப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது அவருடைய முகவருக்கு அந்த அறிவிப்பு அல்லது ஆணையைக் கொடுக்க முனைவதன் மூலம் அல்லது அதனைப் பதிவு அஞ்சல் வழி அனுப்புவதன் மூலம்,

(ஆ) அந்த அறிவிப்பு அல்லது ஆணை கூறு (அ) வில் வகைசெய்யப்பட்ட முறையில் சார்வு செய்யப்பட முடியாததாயின், அந்த அறிவிப்பு அல்லது ஆணை, எந்தச் சொத்து தொடர்பாக வழங்கப்பட்டதோ அல்லது பிறப்பிக்கப்பட்டதோ அந்தச் சொத்தின் எடுப்பானதோர் இடத்தின்மீது அல்லது அது எவருக்கென்று கருதப்பட்டதோ அந்த ஆள் எந்த வளாகத்தில் கடைசியாகக் குடியிருந்தார், தொழில் நடத்திவந்தார் அல்லது ஆதாயத்திற்காக சொந்தமாகச் வேலை செய்தார் என்று தெரிய வருகிறதோ, அந்த வளாகத்தின் ஏதேனும் எடுப்பான பகுதியில் ஒட்டிவைப்பதன் மூலம் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

இந்த அத்தியாயத்தின்படி எந்தச் சொத்து தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவோ அந்தச் சொத்தினைக் கையகப்படுத்துவதற்குத் தண்டனை.

68(ல). எந்தச் சொத்து தொடர்பாக இந்த அத்தியாயத்தின்படியான நடவடிக்கைகள் நடப்பிலுள்ளனவோ அந்தச் சொத்து எதனையும், அந்த முறையிலாவது தெரிந்து கொண்டே கையகப்படுத்தியுள்ள ஆள் எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலத்திற்குச் சிறைத்தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

## அத்தியாயம் VI

## பல்வகைப்பட்டவை

நல்லெண்ணத்தில் எடுக்கப் பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

69. இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணையின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், மைய அரசாங்கத்திற்கோ ஒரு மாநில அரசாங்கத்திற்கோ மைய அரசாங்கத்தின் அல்லது அந்த மாநில அரசாங்கத்தின் அலுவலர் எவருக்குமோ, இந்தச் சட்டத்தின்படியான அதிகாரங்கள் எவற்றையும் செலுத்துகிற அல்லது செயற்பணிகள் எதனையும் நிறைவேற்றுகிற அல்லது கடமைகள் எவற்றையும் புரிகிற பிற ஆள் எவருக்குமோ எதிராக, உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

விதிகளைச் செய்கையில் மைய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் பன்னாட்டு மரபுகளைக் கவனத்தில் கொள்ளுதல்.

70. இந்தச் சட்டத்தின்படி மைய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் விதிகளைப் பிறப்பிக்க அதிகாரமளிக்கப்பட்டிருக்குமிடத்து, மைய அரசாங்கம் அல்லது நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு விதிகளைச் செய்கையில், இந்தியா ஒரு தரப்பினராக இருக்கிற மயக்க மருந்துப் பொருள்கள் மீதான தனித்த பொதுவகை இணக்க ஒப்பந்தம், 1961 இல் சொல்லப்பட்ட பொது இணக்க ஒப்பந்தத்தைத் திருத்துகிற கூட்டு ஒப்பந்த மூலப்படி 1972 இன் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் மீதான பொது இணக்க ஒப்பந்தம், 1971 இன் வகையங்களையும், மயக்க மருந்துப்பொருள்கள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் தொடர்பான, இந்தியா ஒரு தரப்பினர் ஆகக்கூடிய பிற பன்னாட்டு பொது இணக்க ஒப்பந்தம் எதனின் வகையங்களையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களை அடையாளங் காட்டுதல், அவர்களுக்குச் சிகிச்சையளித்தல் முதலானவற்றிற்காக மையங்களை நிறுவுவதற்கும், மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களை வழங்குவதற்கும் அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

71. (1) அரசாங்கம் தன் உளத்தேர்வின்படி, கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களை அடையாளங்காட்டுவதற்காகவும், அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகவும், அவர்களுடைய கல்விக்காகவும், பிற்காப்புக்காகவும், மறுவாழ்விற்காகவும், அவர்களை சமுதாயத்தில் மீண்டும் இணைப்பதற்காகவும், வகுத்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு மற்றும் அத்தகைய முறையில், தொடர்புடைய அரசாங்கத்தால் அரசாங்கத்தில் பதிவு செய்துள்ள கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு, மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்கள் எவற்றையும் வழங்குவதற்காகவும், அவ்வாறு வழங்குவது மருத்துவத் தேவையாகுமிடத்து, பிறருக்கும் வழங்குவதற்காகவும் தான் பொருத்தமெனக் கருதும் எண்ணிக்கையில் மையங்களை நிறுவலாம்.

(2) அரசாங்கம், உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்டுள்ள மையங்களை நிறுவுதல், அமைவுறுத்தல், பேணிவருதல், மேலாண்மை செய்தல் மற்றும் கண்காணித்தலுக்கும், அங்கிருந்து மயக்க மருந்துப் பொருட்களை மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களை வழங்குவதற்கும், அத்தகைய மையங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் பணியமர்த்தம், பயிற்சி, அதிகாரங்கள் மற்றும் கடமைகளுக்கும் வகைசெய்யும் இந்தச் சட்டத்திற்கு இணங்கிய விதிகளைப் பிறப்பிக்கலாம்.

72. (1) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணையின் வகையங்கள் எவற்றின்படியும், மைய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கத்திற்குச் செலுத்தத்தக்க உரிமக் கட்டணம் அல்லது எந்த வகையிலானதுமான பிற தொகை எதனையும் பொறுத்து, அத்தகைய தொகையைச் செலுத்துமாறு வேண்டுறுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள மைய அரசாங்கத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கத்தின் அலுவலர் அத்தகைய தொகை எவரிடமிருந்து வசூலிக்கத்தக்கதோ அல்லது கொடுபட வேண்டியதோ அந்த ஆளுக்குக் கொடுக்கவேண்டிய பணம் எதிலிருந்தும், அத்தகைய தொகையைக் கழிக்கலாம் அல்லது அத்தகைய ஆட்களுக்குச் சொந்தமான சரக்குகளைப் பற்றுகை செய்தல் அல்லது விற்பனை செய்தல் மூலம் அத்தகைய தொகையை வசூலிக்கலாம். மேலும், அந்தத் தொகை அவ்வாறு வசூலிக்கப்படவில்லையெனின், அது ஒரு நில வரி நிலுவையாக இருந்தாற்போன்று அந்த ஆளிடமிருந்தோ அவருடைய பிணையாளரிடமிருந்தோ (எவரேனுமிருப்பின்) வசூலிக்கப்படலாம். அரசாங்கத்திற்குக் கொடுபட வேண்டிய தொகைகளை வசூலித்தல்.

(2) ஆள் எவரும், இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதி எதற்கும் இணங்க, செயல் எதனையும் செய்வதற்காக அல்லது செயல் எதனையும் செய்யாமலிருப்பதற்காக (பிரிவு 34 மற்றும் பிரிவு 39 இன்படியான ஒரு முறி அல்லாத பிற) முறி ஒன்றினைக் கொடுக்கும்போது, அவ்வாறு செய்வது அல்லது செய்யாமலிப்பது இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இன் பிரிவு 74 இன் பொருளின்படி ஓர் அரசாங்க பொதுக் கடமையாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய முறியின் வரைக்கட்டுகள் அவரால் மீறப்பட்டதன்மேல் அத்தகைய மீறுகையாகும் நேர்வில், செலுத்தப்படவேண்டிய தொகையாக அதில் குறிக்கப்பட்ட முழுத்தொகையும் அவரிடமிருந்தோ அவருடைய பிணையாளரிடமிருந்தோ (எவரேனுமிருப்பின்) நில வருவாய் நிலுவையாக இருந்தாற்போன்று வசூலிக்கப்படலாம்.

73. பின்வரும் பொருட்பாடுகள் எவற்றின்மீதும், இந்தச் சட்டத்தின்படியோ அதன்படி பிறப்பிக்கப்பட்ட விதி எதன்படியுமோ அலுவலர் எவராலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் செய்யப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கும் எதிரான உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதனையும், உரிமை வழக்கு நீதிமன்றம் எதுவும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது; அதாவது:— அதிகார வரம்பிற்குத் தடை.

(அ) அபின், கசகசாத் தண்டு பயிரிடுவதற்கு உரிமம் எதனையும் கொடுக்காமல் நிறுத்தி வைத்துக்கொள்ளுதல், கொடுக்க மறுத்தல் அல்லது அறவு செய்தல்;

(ஆ) அபினை எடைபோடுதல், பரிசோதனை செய்தல், தரம் மற்றும் அதன் செறிவுக்குத் தக்கவாறு பிரித்தல், மேலும், அத்தகைய பரிசோதனைக்கிணங்க விதிக்கப்பட்ட நிலையான விலையிலிருந்து செய்யப்பட்ட கழிவுகள் அல்லது அதனுடனான சேர்க்கை;

(இ) அயல்நாட்டுப் பண்டம் எதனையும் கலப்படம் செய்திருப்பதாகக் கண்டறியப்பட்ட அபினைப் பறிமுதல் செய்தல்.

74. இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்ட பொருட்பாடுகள் எவற்றையும் பொறுத்த அதிகாரங்கள் எவற்றையும் செலுத்துகிற அல்லது கடமைகள் எவற்றையும் புரிகிற அரசாங்க அலுவலர் அல்லது பிற பணியாளர் ஒவ்வொருவரும், அத்தகைய தொடக்கத்தின் பேரில், அத்தகைய தொடக்க நிலைக்கு ஒட்டி முன்பு அவர் வகித்த அதே பதவியிடத்தை அதே பதவிப்பெயருடன் தொடர்புடையவையான இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி அமர்த்தப்பெற்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மாற்று இடைக்கால வகையங்கள்.

74(அ). மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவது தொடர்பாக தேவையெனத் தான் கருதும் பணிப்புரைகளை, ஒரு மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கலாம், மேலும், அந்த மாநில அரசாங்கம், அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். பணிப்புரைகளைக் கொடுக்க மைய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

ஒப்படைவு செய்ய அதிகாரம்.

75. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு, இந்தச் சட்டத்தின்படியான அதன் அதிகாரங்களிலும் செயற்பணிகளிலும் (விதிகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் நீங்கலாக) தான் தேவையெனவோ, உகந்ததெனவோ கருதும் அதிகாரங்களையும், செயற்பணிகளையும் வாரியத்திற்கு அல்லது பிற அதிகாரஅமைப்பு எதற்கும் அல்லது மயக்கப் பொருள்கள் ஆணையருக்கு ஒப்படைவு செய்யலாம்.

(2) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு, இந்தச் சட்டத்தின்படியான அதன் அதிகாரங்களிலும் செயற் பணிகளிலும் (விதிகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் நீங்கலாக) தான் தேவையெனவோ உகந்ததெனவோ கருதும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் அந்த அரசாங்கத்தின் அதிகார அமைப்பு எதற்கும் அல்லது அலுவலர் எவருக்கும் ஒப்படைவு செய்யலாம்.

விதிகளை பிறப்பிப்பதற்கு மைய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

76. (1) இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைப் பிறப்பிக்கலாம்.

(2) முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம். அவையாவன:—

(அ) பிரிவு 2 இன் கூறுகள் (v), (vi), (xiv), (xv) ஆகியவற்றைப் பொறுத்தவரை நீர்மத் தயாரிப்புகளாகும் நேர்வில், எந்த முறையில் விழுக்காடுகள் கணிக்கப்படவேண்டுமோ அந்த முறை;

(ஆ) பிரிவு 34 இன் படி எழுதிக்கொடுக்கப்பட வேண்டிய அமைதியைப் பேணுவதற்குரிய முறியின் படிவம்;

(இ) பிரிவு 39 இன் உட்பிரிவு (1) இன்படி மருத்துவ சிகிச்சைக்காக தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட, கெட்ட பழக்கத்திற்கு அடிமையான ஒருவரை விடுவிப்பதற்காக எழுதிக்கொடுக்கப்பட வேண்டிய முறியின் படிவம் மற்றும் அந்தப் பிரிவின் உட்பிரிவு (2) இன் படி உரிய கண்டிப்பினை வழங்கிய பின்பு, அவரை விடுவிப்பதற்கு முன்பு அத்தகைய தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டவரால் எழுதிக்கொடுக்கப்பட வேண்டிய முறியின் படிவம்;

(ஈ) இந்தியாவுக்கு வெளியேயுள்ள இடம் எதிலுமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் ஆவணம் எந்த அதிகாரியால் அல்லது ஆளால் மற்றும் எந்த முறையில், பிரிவு 66 இன் கூறு (ii) இன்படி உறுதியொப்பமளிக்கப்பட வேண்டுமோ, அந்த அதிகாரி அல்லது ஆள் மற்றும் முறை;

(ஈஅ) பிரிவு 68 ஏ இன் உட்பிரிவு (2) இன் படி சொத்துக்கள் ஆட்சியாளரால் எந்த முறையிலும் எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் மேலாண்மை செய்யப்பட வேண்டுமோ, அந்த முறை மற்றும் வரைக்கட்டுகள்;

(ஈஆ) பிரிவு 68ஞ இன் உட்பிரிவு (3) இன் படியான மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(ஈஇ) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் பதிவுக்கட்டுகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்வதற்காக அல்லது பிரிவு 68சு இன் உட்பிரிவு (6) இன்படி அதன் பகுதி ஒன்றின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட படியினைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம்;

(ஈஈ) பிரிவு 68 (ஊ) இன் கூறு (ஊ)இன்படி தகுதிறமுள்ள அதிகார அமைப்பினாலும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினாலும் செலுத்தப்பட்ட, ஓர் உரிமைவழக்கு நீதிமன்றத்தின் அதிகாரங்கள்;

(ஈஉ) இந்தச் சட்டத்தின்படி பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்கள் அல்லது பொருள்கள் அனைத்தையும் தீர்வு செய்தல்;

(ஈஊ) மாதிரிகளை எடுத்தல் மற்றும் அத்தகைய மாதிரிகளைச் சோதனை செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்;

(ஈஎ) அலுவலர்களுக்கும், அறிவிப்பவர்களுக்கும் பிற ஆட்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய விருப்பூதியங்கள்;

(உ) மைய அரசாங்கத்திடம் பதிவு செய்துள்ள கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் பிரிவு 71 இன் உட்பிரிவு (1) இன்படி பிறருக்கும் மருத்துவத் தேவைக்காக மயக்க மருந்துப்பொருள்களும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களும் எந்த வரைக்கட்டுகளிலும் முறையிலும் வழங்கப்படக்கூடுமோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் முறை;

(ஊ) பிரிவு 71 இன் உட்பிரிவு (1) இன்படி மைய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட மையங்களை நிறுவுதல், அமைவுறுத்தல், பேணுதல், மேலாண்மை செய்தல் மற்றும் கண்காணித்தல், மேலும், அத்தகைய மையங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் அமர்த்துகை, பயிற்சி, அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(எ) மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்கள் கலந்தாய்வுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம், தற்செயல் காலியிடங்களை நிரப்பும் முறை மற்றும் அவர்களுக்குச் செலுத்தத்தக்க படித்தொகைகள், மேலும் பிரிவு 6 இன் உட்பிரிவு (5) இன்படி ஓர் உட்குழுவுக்கு உறுப்பினரல்லாதவர் எந்த வரைக்கட்டுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு அமர்த்தப்படலாமோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் கட்டுப்பாடுகள்;

(ஏ) வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

விதிகளும் அறிவிக்கைகளும் நாடாளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுதல்.

77. மைய அரசாங்கத்தால் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் மற்றும் பிரிவு 2 இன், பிரிவு 3 இன் கூறு (xi) இன்படி மற்றும் பிரிவு 27 இன் கூறு (அ) மற்றும் விளக்கம் (1) இன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது, முப்பது நாட்கள் கொண்ட ஒரு மொத்தக் கால அளவிற்கு ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அல்லது அறிவிக்கை அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

*விதிகளைச் செய்வதற்கு மாநில அரசாங்கத் திற்குள்ள அதிகாரம்.*

78. (1) இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) முன்சென்ற அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:—

(அ) மாநில அரசாங்கத்திடம் பதிவு செய்துள்ள கெட்ட பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் பிரிவு 71 இன் உட்பிரிவு (1) இன்படி பிறருக்கும் மருத்துவத் தேவைக்காக மயக்க மருந்துப் பொருள்களும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள்களும் எந்த வரைக்கட்டுகளில் மற்றும் முறையில் வழங்கப்பட வேண்டுமோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் முறை;

(ஆ) பிரிவு 71 இன் உட்பிரிவு (1) இன்படி நிறுவப்பட்ட மையங்களை நிறுவுதல், அமைவுறுத்தல், பேணுதல், மேலாண்மை செய்தல், கண்காணித்தல் மற்றும் அத்தகைய மையங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்களின் அமர்த்துகை, பயிற்சி, அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(இ) வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்

(3) இந்தச் சட்டத்தின்படி ஒரு மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், அந்த மாநிலத்தில் சட்டப்பேரவையின் முன்னர் வைக்கப்படுதல் வேண்டும்.

*சுங்கங்கள் சட்டம், 1962 இன் பொருந்துகை.*

79. மயக்க மருந்துபொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்தல், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தல், ஒரு கலத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றுதல் ஆகியவற்றின் மீது இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ சுமத்தப்பட்ட தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தும், சுங்கங்கள் சட்டம், 1962 இனாலோ அதன் வழியாலோ சுமத்தப்பட்ட தடைகளாகவும் கட்டுப்பாடுகளாகவும் இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், இந்தச் சட்டத்தின் வகையங்கள் அங்ஙனமே பொருந்துதல் வேண்டும்: *சட்ட எண் (52/1962)*

**வரம்புரையாக:** ஏதாவது ஒரு காரியத்தைச் செய்வது அந்தச் சட்டத்தின் படியும் இந்தச் சட்டத்தின்படியும் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச் செயலாக இருக்குமிடத்து, இந்தச் சட்டத்தில் அல்லது இந்தப் பிரிவிலுள்ள எதுவும், குற்றவாளியை இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவதினின்று தடுக்காது.

*மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் சட்டம், 1940 இன் பொருந்துகை தடைசெய்யப் படவில்லை.*

80. இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வகையங்கள் மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருள்கள் சட்டம், 1940 அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளுக்குக் கூடுதலாகவும் அதனைத் திறக்குறைவு செய்யாததாகவும் இருத்தல் வேண்டும்.

*மாநில மற்றும் தனிவகைச் சட்டங்களுக்குக் காப்பு.*

81. இந்தச் சட்டத்தில் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலுள்ள எதுவும், கன்னாபிஸ் செடியைப் பயிரிடுவதற்கு அல்லது மயக்க மருந்துப் பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள் எதனையும் நுகர்வதற்கு அல்லது இந்தியாவிற்குள் அதனைக் கொண்டு செல்லுவதற்கு கட்டுப்பாடு எதனையும் சுமத்துகிற அல்லது இந்தச் சட்டத்தின் வாயிலாகச் சுமத்தப்படாத அல்லது அதன்படி வகை செய்யப்படாத ஒரு தண்டனைக்கு வகைசெய்கிற அல்லது இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ சுமத்தப்பட்ட நேரிணையானதொரு கட்டுப்பாட்டைவிடப் படிநிலையில் பெரியதொரு கட்டுப்பாட்டினைச் சுமத்துகிற அல்லது வகைசெய்யப்பட்ட நேரிணையானதொரு தண்டனையைவிடப் படிநிலையில் பெரியதொரு தண்டனைக்கு வகை செய்கிற,

அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள மாகாணச் சட்டம் ஒன்றின் அல்லது மாநிலச் சட்டப் பேரவை ஒன்றின் சட்டம் ஒன்றின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி ஒன்றின் செல்லுந்தன்மையைப் பாதித்தல் ஆகாது.

13/1857
1/1878
2/1930

நீக்கறவு மற்றும் காப்புகள்.

82. (1) அபினிச் சட்டம், 1857, அபினிச் சட்டம், 1878 இடரார்ந்த மருந்துகள் சட்டம், 1930 ஆகியவை ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகின்றன.

(2) அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும் உட்பிரிவு (1) ஆல் நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டங்களில் எதனின்படியும் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டிருப்பதாகப் புலப்பட்ட எதுவும், அல்லது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகப் புலப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு மாறாக இராத அளவுக்கு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு நேரிணையாகச் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குள்ள அதிகாரம்.

83. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் அளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணை வாயிலாக, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்கு தேவையானது அல்லது உகந்தது என்று அதற்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு மாறாக இராத வகையங்களைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெறும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் கால அளவு முடிவடைந்த பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவைகளின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

## இணைப்புப்பட்டியல்

[பிரிவு 2இன் கூறு (xxiii)-ஐக் காண்க.]

### மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்களின் பட்டியல்

| வரிசை எண் (1) | பன்னாட்டுத் தனியுரிமை விற்பனைக் கட்டுப்பாடற்றவற்றின் பெயர்கள். (2) | பிற தனியுரிமை விற்பனைக்கட்டுப்பாடற்றவற்றின் பெயர்கள். (3) | வேதியியல் பெயர் (4) |
|---|---|---|---|
| 1. | | DET | N,N டைஎதைல் ட்ரைப்டாமைன் |
| 2. | | DMHP | 3—(1—2—டைம் எதைல் ஹெப்டைல்)—[1]—ஸைட்ராக்ஸி—7, 8, 9, [10]—டெட்ராஹைட்ரோ—6, 6, 9—ட்ரைமெதைல்—6H—டைபென்ஸோ [b, d] பைரன். |
| 3. | | DMT | N,N—டிமெதைல்ட்ரைப் டாமைன் |
| 4. | (+)—லைசெர்கைட் | LSD, LSD—25 அமிலம் | (+)—N,N—டிஎதைல்லை செர்காமைட் (லைசெர்ஜிக் டை எதைலாமைட்) |
| 5. | | மேஸ்காலின் | 3, 4, 5—ட்ரைமெதாக்ஸி பெனிதைலாமின் |
| 6. | | பாராஹெக்ஸைல் | 3—ஹெக்—[1]—ஹைட்ராக்ஸி 7, 8, 9, 10—டெட்ராஹைட்ரோ—6, 6, 9—ட்ரைமெதைல்—6H—டைபென்ஸோ [b, d] பைரன் |
| 7. | எடிசைக்ளிடைன் | PCE | N—எதைல்—[1]—பினைல் சைக்லோ ஹெக்ஸைலாமின் |
| 8. | ரோலிசைக்ளிடைன் | PHP, PCPY | [1](1—பினைல்சைக்லோஹெக்ஸைல்) பைரோலிடைன் |
| 9. | | பிசிலோசின் பிசிலாட்சின் | 3—(2—டை மெதைலாமினோஎதைல்) —4—ஹைட்ரோக்ஸின்டோல் |
| 10. | பிசிலோசைபின் | | 3—(2—டைமெதைலாமினோஎதைல்) இன்டோல்—டை 4-y1-டைஹைட்ரஜன் பாஸ்பேட். |
| 11. | | STP, DOM | [2]—அமினோ—[1]—(2—[5]—டைமெதாக்ஸி ——4—மெதைல்) பெனைல்ப்ரோபேன். |
| 12. | டெனோசைக்ளிடைன் | TCP | 1—[[1](2—தியெனைல்) சைக்ளோ ஹெக்ஸைல்] பைப்ரிடின் |
| அ[13. | டெட்ராஹைடரோகன்னாபையோனல், பின்வரும் ஐஸோமெர்ஸிம் அவற்றின் ஸ்டீரியோ கெமிகல் மாறுபாடுகளும் | | 7, 8, 9, 10— டெட்ராஹைட்ரோ —6, 6, 9— ட்ரைமெதைல் —3— பென்டைல் —6 H— டைபென்ஸோல் பென்டைல் —6 H— டைபென்ஸோல் (b, d) பைரன் —1—01 (9R, 10aR,)—8, 9, 10, 10a —டெட்ரா ஹைட்ரோ— 6, 6, ட்ரைமெதைல்— 3—பென்டைல் —6H — டைபென்ஸோ [b, d,] பைரன், —1—01 (6aR 9R 10aR)— C 6aR 9, R10, 10aR டெட்ராஸைட்ரோ— 6, 9— ட்ரை மெதைல், —3 பென்டைல் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | | — 6H—டைபென்ஸோ (b, d) பைரன்—1—01—(6a, R 10aR)—6a, 7, 10, 10a—டெராஹைட்ரோ—6, 6, 9—ட்ரைமெதைல்—3—பென்டைல்—6ப—டைபென்ஸோ [b, d] பைரன்—1—01 |
| | | | 6a, 7, 8, 9—டெட்ராஹைட்ரோ—6, 6, 9— ட்ரைமெதைல்—3—பென்டைல்—6H—டைபென்ஸோ [b, d] பைரன் —1—01] |
| | | | (6aR, 10aR)—6a, 7, 8, 9, 10, 10a ஹெக்ஸாஹைட்ரோ —6, 6—டைமெதைல்—1—9—ட்ரைமெதைல் —3—பென்டைல்—6 N பென்ஸோ [b, d] பைரன்—1—01 |
| | | | (6aR, 10aR)— 06a, 7, 8, 9, 10, 10a—ஹெக்ஸாஹைட்ரோ—6, 6—டைமொதைல் —1—9—மெதைலின் 1—3—பென்டைல்—6N—டைபென்ஸோ [b, d] பைரன்—1—01] |
| 14. | | DOB | 2, 5—டைமொதாக்ஸி—4—ப்ரோமாம்பெடாமைன். |
| 15. | | MDA | 3, 4 மெதைலின்டையாக்சையாம்ஃ பெடாமின் |
| 16. | அம்பிடாமைன் | | (+)—2—அமினை—1—பினைல்ப்ரோபேன் |
| 17. | டெக்ஸாம்பெடாமைன் | | (+) —2—அமினோ —1—பினைல்ப்ரோபேன் |
| 18. | மெக்லோக்வாலோன் | | 3— (0—க்ளோரோபினைல்)—2—மெதைல்—4(3H) குய்னாசோலினன் |
| 19. | மொதாம்பெட்டாமைன் | | (+)—2—மெதைலாமைன்—1—பினைல்ப்ரோபேன் |
| 20. | மெதாக்வாலோன் | | 2—மெதைல்— 3—0—டோலைல்—4 (3H)— குய்னாசோலினன் |
| 21. | மெதைல்பெனிடேட் | | 2—பினைல்—2 (2—பைப்ரிடைல்) அசெட்டிக் அமிலம்—மெதைல் ஈஸ்டர். |
| 22. | பென்சைக்லிடைன் | PCP | 1—(1—பினைல் சைக்லோ ஹெக்ஸைல்) பைப்ரிடைன். |
| 23. | பென் மெட்ராசைன் | | 3—மிதைல்—2—பினைல்மார்ஃபோலின் |
| 24. | அமோபார்பிடால் | | 5—எதைல் 5—(3—மெதைல்புடைல்) பார்பிட்யூரிக் அமிலம். |
| 25. | சைக்லோபார்பிடால் | | 5—(1—சைக்லோஹெக்ஸன்—1—Y1)—5—எதைல் பார்பிட்யூரிக் அமிலம். |
| 26. | குளுடெதிமைட் | | 2—எதைல்—2—பினைல் குளுடாரிமைட் |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 27. | பென்டாசோஸின் | | $^{1}$, $^{2}$, 3, 4, 5, 6—ஹெக்ஸா ஹைட்ரோ—6, $^{11}$—டைமெதைல்—3— (3—மெதைல்—$^{2}$—புடெனைல்)—$^{2}$ —6—மெதானோ—3—பென்ஸாசோஸின்—8—$^{0}$1 |
| 28. | பென்டோபார்பிடால் | | 5—எதைல் —5—($^{1}$—மெதைல்புடைல்) பார்பிட்யூரிக் அமிலம். |
| 29. | செகோடார்பிடால் | | 5—ஆலைல்—5—($^{1}$—மெதைல்புடைல்) பார்பிட்யூரிக் அமிலம். |
| 30. | அல்ப்ரா சோலம் | | 8—குலோரோ—$^{1}$—மெதைல்—6—பினைல்—4H—S—ட்ரையாசோலோ [4, 3—a] [$^{1}$—4] பென்சாடையாசெபைன். |
| 31. | அபெப்ராமோன் | | $^{2}$—(டைஎதைலாமினோ) ப்ரோபைமோபினேன். |
| 32. | பார்பிடால் | | 5, 5—டைஎதைல் பார்பிட்யூரிக் அமிலம். |
| 33. | பென்ஸ்பெட்டாமின் | | N—பென்ஸைல்—N, oc—டைமெதைல், பெனிதைலாமின். |
| 34. | ப்ரோமாசெபம் | | 7—ப்ரோமா $^{1}$—3— டின்விட்ரோ—5—($^{2}$—பைரிடைல்) —$^{2}$H—$^{1}$—4—பென்சோடையாசெபின் —$^{2}$—ஒன்று. |
| 35. | கேமாசெபம் | | 7—க்ளோரோ $^{1}$, —3 — டைஹைட்ரோ —3— ஹைட்ராக்ஸி——$^{1}$—மெதைல்—பினைல்—$^{2}$H—$^{1}$, 4—பென்சோடையாசெபின்—$^{2}$— ஒன்று டைமெதைல் கார்பாமேட் (ஈஸ்டர்). |
| 36. | குளோர்டையா செபாக்ஸைட் | | 7—குளோரா—$^{2}$— (மெதைலாமினோ)—5 — பினைல் — 3H—$^{1}$ — 4—பென்சோடையாசெபின் — 4 — ஆக்ஸைட். |
| 37. | குளோபாசம் | | 7—குளோரோ—$^{1}$—மெதைல்—5—பினைல்— $^{1}$H—$^{1}$, 5—பென்சோடையா செபின் 2, 4 (3H, 5H 1— டையோன்). |
| 38. | குளோனா செபம் | | 5—($^{0}$—குளோரோபினைல்)—$^{1}$, 3—டிஹைட்ரோ—7—நைட்ரோ— $^{2}$H—$^{1}$, 4 பென்சோடையாசெபின்—$^{2}$—ஒன்று. |
| 39. | குலோராசெபேட் | | 7—குளோரா—$^{2}$, 3—டைஹைட்ரோ—$^{2}$—ஆக்ஸோ—$^{5}$—பினைல்—$^{1}$H, 4—பென்சோடையாசெபின்—3—கார்பாக்ஸைலிக் அமிலம். |
| 40 | குளோடியாசிபம் | | 5—$^{0}$— (குளோரோபினைல்)—7 — எதைல் — —3 டைஹைட்ரோ—$^{1}$ — மெதைல்—$^{2}$H —தீய்யனோ[2—3e]—1 —1, 4—டையாசெபின்—$^{2}$—ஒன்று. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 41. | குளோனாசோலம் | | 10—குளோரோ—$^{11}$b—($^{0}$—குளோரோ பினைல்) —$^{2,}$ 3, 7, —$^{11}$b— டெட்ராஹைட்ரோ— ஆக்ஸாசோலோ— [3,$^{2}$d] [$^{1}$—4] பென்ஸோடையாசெபின்—6 (5H) —ஒன்று. |
| 42. | டெலோராசெபம் | | 7—குளோரா—5— ($^{0}$—குளோரா பினைல்)—$^{1}$, 3— டைஹைட்ரோ—$^{2}$H—$^{1}$, 4—பென்ஸோடையாசோபின்—2— ஒன்று. |
| 43. | டையாசெபம் | | 7—குளோரோ—$^{1}$, —3— டைஹைட்ரோ—$^{1}$—மெதைல் —5— பினைல்—$^{2}$H—$^{1}$, 4 — பென்ஸோடையா சோபின் — $^{2}$— ஒன்று. |
| 44. | எஸ்டாசோலம் | | $^{8}$—குளோரோ—6—பினைல்—4H—s— ட்ரையாசோலோ [4, 3—a] [$^{1}$, 4] பென்ஸோடையாசெபின். |
| 45. | எத்குளோர்வைனால் | | எதைல்—$^{2}$— குளோரோவினைல் எதைனைலியர்—பினால். |
| 46. | எதினாமேட் | | $^{1}$—எதைனைல் சைக்லோஹெக்ஸானல் கார்பமேட். |
| 47. | எதைலாலோஃப்லாசிபேட் | | எதைல் 7—குளோரோ—5— ($^{0}$— ப்ளுவோரோபினைல்) —$^{2}$, 3— டைஹைட்ரோ—$^{2}$—ஆக்ஸோ—IH—$^{1}$, 4—பென்ஸோசியாசெபின்—3— காபாக்ஸைலேட். |
| 48. | புளுடையாசெபம் | | 7—குளோரோ—5—($^{0}$—ஃபுளோவோரோ பினைல்)—1, 3—டைஹைட்ரோ—$^{1}$— மெதைல் $^{2}$H—1, 4—பென்ஸோடையா செபின்—2—ஒன்று. |
| 49. | புளுனிட்ராசெபம் | | 5—($^{0}$—ப்ளோரோபினைல்)—$^{1}$, 3— டைஹைட்ரோ—$^{1}$—மெதைல்—7 — நைட்ரோ—$^{2}$H — 4 — பென்ஸோடையாசெபின் —$^{2}$— ஒன்று. |
| 50. | புளுராசெபம் | | 7—குளோரோ—$^{1}$—[டை எதைலாமினோ) எதைல்] —5—($^{0}$—ப்ளுரோபினைல்)—$^{1}$ 3—டைஹைட்ரோ—$^{2}$H—$^{1}$ ,4 பென்ஸோடையாசெபின்—$^{2}$—ஒன்று. |
| 51. | ஹலாசெபம் | | 7—குளோரோ—$^{1}$, —3 டைஹைட்ரோ— 5—பினைல்—$^{1}$—($^{2}$, $^{2}$, $^{2}$— ட்ரைப்ஃளுவோரோ எதைல்)— $^{2}$H—$^{1}$ H—பென்ஸோடையோசெபின்—$^{2}$—ஒன்று. |
| 52. | ஹாலக்ஸா சோலம் | | $^{10}$—ப்ரோமோ—$^{11}$b—($^{0}$— ப்ளுவோரோ பினைல்)—$^{2}$, 3, 7, $^{11}$b— டெட்ராஹைட்ரோ ஆக்ஸாசோலோ [3, $^{2}$—d] 1, 4 —பென்ஸோடையா செபின் —6 ($^{5}$H)—ஒன்று. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 53. | கெட்டாசோலம் | | $^{11}$—குளோரோ—8, $^{12}$b—டிஹைட்ரோ —$^{2}$ 8— டிமெதைல்—$^{12}$—பினைல்— $^{1}$H [1, 3[—ஆக்யாஸினோ—[3, $^{2}$b—d], $^{1}$ 4] பென்ஸோடையா செபின்—4, 7 [6HO—டையோன்] |
| 54. | லெஃபிடாமைன் | SPA | (—)—$^{1}$— டைமெதைலாமினோ—$^{1}$, $^{2}$— டைபினைல் எதைன். |
| 55. | லோப்ரா சோலம் | | 6—($^{0}$—குளோரைபினைல்)— $^{2}$, 4— டைஹைட்ரோ—$^{2}$ —[(4—மெதைல்— $^{1}$—பைபெராபினைல்) மெதைலின்]— 8—நைட்ரோ— $^{1}$H—இமிடாசோ [$^{1}$ $^{2}$—a] [$^{1}$, 4] பென்ஸோடையாசெபின் —$^{1}$— ஒன்று. |
| 56. | லோராசெபம் | | $^{1}$—குளோரோ—5— ($^{0}$குளோரோ பினைல் $^{1}$, 3— டைஹைட்ரோ —3—ஹைட்ராக்ஸி— $^{1}$—மெதைல்— $^{2}$H—$^{1}$—4—பென்ஸோடையாசெபின்— $^{2}$—ஒன்று. |
| 57. | லோர்மெட்டாசெபம் | | 7—குளோரோ—5—($^{0}$—குளோரோ பினைல்)—$^{1}$, 3—டைஹைட்ரோ—3— ஹைட்ராக்ஸி—$^{1}$—மெதைல்—$^{2}$H—1— 4—பென்ஸோடையாசெபின்—$^{2}$—ஒன்று. |
| 58. | மாஸின்டோல் | | 5—(p—குளோரோபினைல்)—$^{2}$, 5— டைஹைட்ரோ—3H— இமிடாஸோ [—$^{2}$, —$^{1}$—x] ஐசோயின்டால்—5-$^{0}$] |
| 59. | மெடாசெபம் | | 7—குளோரோ—$^{2}$, 3—டைஹைட்ரோ— $^{1}$—மெதைல்— 5—பினைல்—$^{1}$H —$^{1}$, 4 பென்ஸோடையாசெபின். |
| 60. | மெப்ரோபாமேட் | | $^{2}$—மெதைல்—$^{2}$—ப்ரோபைல்—$^{1}$, 3— ப்ரோபானி டியோல் டைகார்பாமேட். |
| 61. | மெதைல் பெனோபார்பிடல் | | 5—எதைல் —I—மெதைல்—5—பினைல் பார்பிட்யூரிக் அமிலம். |
| 62. | மெதைப்ரைலோன் | | $^{3}$, 3—டை எதைல்—5—மெதைல்—$^{2}$, 4—பைபெரிடைன் —டையோன். |
| 63. | நிமெடாசெபம் | | $^{1}$ 3—டஹட்ரோ—$^{1}$—மெதைல் — 7—நைட்ரோ—5— பினைல்—$^{2}$H—$^{1}$, 4— பென்ஸோடையாசெபின் —$^{2}$— ஒன்று. |
| 64. | நிட்ராசெபம் | | $^{1}$, 3—டைஹைட்ரோ—7— நைட்ரோ— 5—பினைல்— $^{2}$H—$^{1}$, 4— பென்ஸோடையாசெபின்—2—ஒன்று. |
| 65. | நோர்டாசெபம் | | 7—குளோரா—$^{1}$, 3—டைஹைட்ரோ— 5—பினைல் — $^{1}$—($^{2}$H) —$^{1}$, 4— பென்ஸோடையாசெபின்—$^{1}$—ஒன்று. |
| 66. | ஒக்ஸாசெபம் | | 7—குளோரோ—$^{1}$, 3—டைஹைட்ரோ— 3—ஹைட்ராக்ஸி—5— பினைல்—$^{2}$H— $^{1}$—4 பென்ஸோடையா செபின் —$^{2}$— ஒன்று. |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 67. | ஒக்ஸாசோலம் | | $^{10}$—குளோரோ—$^{2}$, 3, 7, $^{11}$b— டெட்ராஹைட்ரோ —$^{2}$— மெதைல்— $^{11}$b—பினைல்-— ஒக்ஸாசோலோ [3, $^{2}$—d] [$^{1}$—4] பென்ஸோடையாசெபின்— 6 (5H)— ஒன்று. |
| 68. | பென்டிமெட்ராசின் | | (+)—3, 4—டைமெதைல் —$^{2}$— பினைல் மார்போலின். |
| 69. | பெனோபார்பிடால் | | 5— எதைல்—5 —பினைல் பார்பிட்யூரிக் அமிலம். |
| 70. | பென்ட்டர்மைன் | | oc, oc—டைமெதைல்பெனிதைலமின் |
| 71. | பினாசெபம் | | 7— குளோரோ —$^{1}$, 3—டைஹைட்ரோ —$^{2}$—பினைல்—$^{1}$—($^{2}$—புரோபினைல்) $^{2}$H—$^{1}$, 1—பென்ஸோடையா செபின்—$^{2}$—ஒன்று. |
| 72. | பிப்ராட்ரோல் | | —$^{1}$, $^{1}$—டைபினைல்—$^{1}$— [$^{2}$— பைபரிடைல்] —மெத்தானல் |
| 73. | ப்ராசெபம் | | 7—குளோரோ—$^{1}$—சைக்லோப்ரோபை மெதைல்) —$^{1}$, —3— டைஹைட்ரோ— 5—பினைல் —$^{2}$H— $^{1}$, 4 — பென்ஸோடையாசெபின் —$^{2}$—ஒன்று. |
| 74. | டெமாசெபம் | | 7—குளோரோ—$^{1}$ 3—டைஹைட்ரோ— 3—ஹைட்ராக்ஸி —$^{1}$—மெதைல் —5— பினைல்— $^{2}$H—$^{1}$, 4— பென்ஸோடையாசெபின்—$^{2}$—ஒன்று. |
| 75. | டெட்ராசெபம் | | 7— குளோரோ—5— (சைக்லோஎக்சென் —$^{1}$—y1) —$^{1}$—3 —டைஹைட்ரோ — $^{1}$—மெதைல் —$^{2}$H—$^{1}$, 4— பென்ஸோடையாசெபின் —$^{2}$— ஒன்று. |
| 76. | ட்ரையாசோலம் | | 8—குளோரோ—6($^{0}$—குளோரோ பினைல்) —$^{1}$—மெதைல்—$^{4}$H—s— ட்ரையாசோலோ [4, 3—a]′, 4 [பென்ஸாடையாசெபின்] |
| 77. | கேதினான் | | (—)—(s) [—அமினோபிராபியோபினன். |
| 78. | | DMA | (±)—2, 5— டைமெதாக்ஸி —a— மெதைல் பெனிதைலாமைன். |
| 79. | | DOET | (±)— 4— எதைல்— 2, 5— டைமெதாக்ஸி a— பெனிதைலாமைன். |
| 80. | | MDMA | (±)—N, a—டைமெதைல் —3, 4— (மெதைலினிடையாக்ஸி) பெனிதைலாமைன். |
| 81. | | 4—மெதைலான் சினோரெக்ஸ் | (±) —Cis—2—அமினோ —4— மெதைல்—5—பினைல்—2— ஆக்ஸாஸோலைன். |
| 82. | | MMDA | 2— மெதாக்ஸி—a— மெதைல்—4, 5 (மெதைலினிடையாக்ஸி) — பெனிதைலாமைன். |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 83. | | N—எதைல் MDA | (±)—N—எதைல்—a—மெதைல் — 3, 4— (மெதைலினிடையாக்ஸி) — பெனிதைலாமைன். |
| 84. | | N—ஹைட்ராக்ஸி MDA | (±)—N—[a—மெதைல்—3, 4— (மெதை லினிடையாக்ஸி) பெனிதைலாமைன்—ஹைட்ராக்ஸி |
| 85. | | PMA | P—மெதாக்ஸி—a—மெதைல்பெனி— தைலாமைன். |
| 86. | | TMA | (±)—3, 4, 5 — ட்ரைமெதாக்ஸி— a— மெதைல் பெனிதைலாமைன். |
| 87. | பெனிடைல்லின் | | 7— [2—(a— மெதைல் பெனிதைல்) —அமினோ] எதைல் தியோபைலின். |
| 88. | லெவாம்பெட்டமைன் | லெவாம்பிளாக்டமின் | (—) (R)—a—மெதைல்பெனி — தைலாமைன். |
| 89. | | லெவாம்தம் பெட்டமைன் | (—)—N—a—டைமெதைல்பினி — தைலாமைன். |
| 90. | மெடம்பெட்டாமைன் ரேஸமேட் | மெதாம்பொடமைன் ரேஸ்மேட் | (±)—N—a—டைமெதைல்பினி தைலாமைன். |
| 91. | | டெல்டா— 9*** டெட்ராஹைட்ரோ கன்னாபினால் மற்றும் அதன் ஸ்டீரியோ கெமிகல் மாறுபாடுகள். | (ba— A10aR) -6a 7, 8, 10a டெட்ரா ஹைட்ரோ — 6, 6,9—ட்ரை மெதைல் —3 —பென்டைல் —6h— டைபென்ஸோ [b, d] பைரன் —1—01. |
| 92. | ப்ரிநார்பின் | | 21 —சைக்லோபுரோபில் —7—a [(s) —1—ஹைட்ராக்— — 1, 2, 2, — ட்ரைமெதெல்ப்ரோபைல் —6, 14— என்டோ—எதனோ —6, 7, 8, 14 — டெட்ரோஹைட்ரூரிபனைன். |
| 93. | புடால்பிடல் | | 5— அலில் —5—ஐசோலாண்டிஸ் பார்பிட்யூரிக் அமிலம். |
| 94. | காத்னின் | (+) —நார்ப்ஸிடோ எபெடின் | (+)- (R)—a [(R)-1— அமினோ]எதைல் பென்ஸைல் ஆல்கஹால். |
| 95. | அல்லோபார்பிடல் | | 5, 5 —டையர்லி பார்பிட்யூரிக் அமிலம் |
| 96. | எட்டிலம்பிடாபின் | N— எதைலம் பெடாமைன் | N— எதைல் —a மெதைல் — பினிதைலாமைன் |
| 97. | பென்கம்பேமின் | | N— எதைல் —3—பினைல்—2— நார் போர்னனாமினா. |
| 98. | பென்ப்ரோபேராக்ஸ் | | (+)—3— [(a—மெதைல்பினிதைல்) அமினோ] ப்ரோப்ரோநிட்டில் |
| 99. | மெபெனோரெக்ஸ் | | N— (3—குளோரோப்ரோபில்)—a— மெதைல் பினிதைலாமைன். |
| 100. | மிடாஸோலம் | | 8—குளோரோ—6—a—(o— ப்ளோரோபினைல்) —1—மிதைல் 4N— இமிடாஸோல் [1, 5—a] [1, 4] பென்ஸோ டையாஸிபின். |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 101. | பெமோலின் | | 2— அமினோ —5—பினைல்—2—அக்ஸாசோலின் —4—ஒன்று (—2—இமினோ —5— பினைல்—4—ஆக்ஸாஸோலிடைனன் |
| 102. | பிலோவேலரன் | | 4— மிதைல் —2—(1—பைரோலிடினைல்) வெலரோபினன் |
| 103. | செக்புட்டாபார் பிடல் | | 5—Sec— புட்டைல் —5—எதைல் பார்பிட்யூரிக் அமிலம். |
| 104. | வினில்பிடல் | | 5— (1—மெதைல் புடைல்) —5—வினில் பார்பிட்யூரிக் அமிலம் |
| 105. | புட்டோபார் பிடல் | | [5—புடைல்—5—எதைல் பார்பிட்யூரிக் அமிலம்] |
| 105 | (அ). எப்ரிப்தமின் | | [3—(2—அமினோபுடைல் இண்டோல்] |
| 105 | (ஆ). மெத்காட்னினன் | | [2— (மெதிலாமினோ) — 1—பினைல்ப்ரோபன் —1—ஒன்று] |
| 105. | (இ) சிப்பப்ரல் | | [oc (oc—மெதாக்ஸிபென்ஸைல்) —4— (மெதாக்ஸிபினிதைல்)—1—ப்பிராஸினிதனோல்] |
| 105. | (ஈ) அமினோரெக்ஸ் | | (2—அமினோ —5—பினைல்— 2—ஆக்ஸாஸோலின்) |
| 105. | (உ) புரோட்டிஸோலம் | | (2—ப்ரோமோ— 4— (o—குளோரோ பினைல்) —9— மிதைல்—6N தியானோ (3, 2—f) —s— ட்ரைஸோலோ [4, 4—a] [1, 4] டாயாசெபின்) |
| 105. | மெசோகார்ப் | | [(3) — (oc) —மிதைல் பினிதைல்) —N—(பேனில் கார்பாமாயில்) சிட்னன்யிமைன்] |
| 106. | உப்புகள் மற்றும் மேலேயுள்ளவற்றின் தயாரிப்புகள் | | |